

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடமும் விசாரணைகள் நடத்தப் படவுள்ளதாக தகவல்.

அவர் பாதுகாப்பு செயலாளராக இருந்த காலத்தில் ஆயுதக்குழுக்களுக்கு எந்த அடிப்படையில் நிதி வழங்கப்பட்டது, எவ்வளவு நிதி வழங்கப்பட்டது போன்ற காரணங்கள் இந்த விசாரணையின்போது துருவப்படவுள்ளதாம்.

எப்படியோ மற்றுமொரு வழக்கு விசாரணை ஒன்றில் கைதுசெய்யப்படும் ஆபத்தையும் கோட்டா எதிர்நோக்கியுள்ளதாக தகவல்.

**உஷ்**


Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர்: 05, இதழ்: 217 விசுவாவசு வருடம், சித்திரை மாதம் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை (25.04.2025) ஹிஜ்ரி 1446, ஷவ்வால் - 26, 0115 886187- விலை ரூ.40 பக்கங்கள் 12




## கமெண்ட் கந்தர்



நாட்டில என்ன
நடந்தாலும் ஸ்கூல்
பிள்ளைகளுக்கு மட்டும்
லீவு கிடைக்குது...
மத்தவங்களையும் கொஞ்சம்
கவனியுங்கப்பா...



# பொதுமக்கள் அஞ்சலிக்காக புனித பீட்டர் தேவாலயத்தில் பாப்பரசரின் திருவுடல்

## உலகெங்கிலுமிருந்து விரையும் மக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருப்பு

மறைந்த பாப்பரசர் பிரான்சிஸின் திருவுடல் பொது மக்கள் அஞ்சலிக்காக புனித பீட்டர் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ள நிலையில், பொதுமக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்து,... » 02 பக்கம்



# பிள்ளையானால் பல குற்றச் செயல்கள்!

## விரைவில் வெளிவருமென்கிறார் ம.வி.மு. செயலாளர் ரில்வின் சில்வா



நா.தினுஷா

“கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தரொருவரை கடத்திச் சென்று காணாமலாக்கிய குற்றச்சாட்டிலேயே பிள்ளையான் கைதுசெய்யப்பட்டுள்ளார். அதற்கான சாட்சிகள் இருக்கின்றன. ஆனால் பிள்ளையான் இந்தக் குற்றத்தை மாத்திரம் செய்யவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்திருந்த காலத்தில் கொலைகளை செய்திருக்கிறார். ஆனால், அதன் பின்னரும் பல்வேறு ஒப்பந்தங்களுக்காக பிள்ளையான் பல்வேறு கொலைகளை செய்துள்ளார்கள். குற்றங்களையும் செய்துள்ளார். எனவே, பிள்ளையான் பல்வேறு குற்றச்செயல்களில் முக்கியமானவராக இருப்பதாக மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.


பண்டாரவளையில் நேற்று (24) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

நாங்கள் எப்போதும் பொய் கூறியதில்லை. எங்களால் முடிந்த விடயங்களை மாத்திரமே நாங்கள் கூறியிருக்கிறோம். நாங்கள் கூறிய விடயங்களை கட்டாயம் நிறைவேற்றியே தீருவோம். அவற்றை நிறைவேற்ற ஆரம்பித்தும் இருக்கிறோம். எமது அரசியல் வரலாற்றில் பொய்யை மாத்திரம் கூறிய வரலாறும் இருக்கிறது.

தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தால் நாட்டில் பெரும் குழப்பம் ஏற்படும், அரசியல் பழிவாங்கல் இடம்பெறுமென தேர்தல் காலத்தில் பெரும் பிரசாரத்தை முன்னெடுத்திருந்தார்கள். ஆனால் இதுவரையில் அப்படியொன்றும் இடம்பெறவில்லை. அவர்களே பொய் கூறியிருக்கிறார்கள்.

» 02 பக்கம்



# தேசிய துக்க தினம் நாளை

பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸின் மறைவையொட்டி, அவரின் இறுதிக் கிரியைகள் இடம்பெறும் தினமான நாளைய தினத்தை (26) தேசிய துக்க தினமாக அறிவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, ஏப்ரல் 26ஆம் திகதியான நாளைய தினம் சகல அரச அலுவலகங்களிலும் தேசியக் கொடியை அரைக் கம்பத்தில் பறக்கவிடுமாறு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பான அறிவிப்பு பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆலோக பண்டாரவினால் சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாண சபை பிரதான செயலாளர்கள், திணைக்களப் பிரதானிகள், மாவட்ட செயலாளர்கள், கூட்டுத்தாபனம் மற்றும் சட்ட சபை பிரதானிகள், பிரதேச செயலாளர்களுக்கு நேற்று (24) அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. பாப்பரசர் பிரான்ஸிஸின் இறுதிச் சடங்கு நாளை சனிக்கிழமை வத்திக்கானில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரியசாத் கொலை விவகாரம்; பிரதான சந்தேகநபர் கைது

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வேட்பாளர் டான் பிரியசாத் கொலையுடன் தொடர்புடைய சந்தேகநபரை கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெல்லம்பிட்டி பிரதேசத்தில் கடந்த 22ஆம் திகதி இரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் டான் பிரியசாத் என்பவர் உயிரிழந்திருந்தார். இரவு 9.10 மணியளவில் வெல்லம்பிட்டி ‘லக்சந்த செவன’ வீட்டுத் தொகுதியில் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

மோட்டார் சைக்கிளில் வந்த துப்பாக்கிதாரிகள் இருவர் பிஸ்டோல் வகை துப்பாக்கியினூடாக சூடு நடத்தியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று வரையில் 10 பேரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். இதேவேளை, சம்பவம் இடம்பெற்ற தினத்துக்கு மறுதினம் மூன்று சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டிருந்ததாக பொலிஸார் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.



# டான் பிரியசாத்தின் மரணத்தில் மர்மம்

## பொதுஜன பெரமுன அதிருப்தி

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர் டான் பிரியசாத்தின் மரணத்தில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் மர்மம் இருப்பதாகவும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அறிவித்துள்ளது.

மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக செயற்படுபவர்களை அடக்குவது மக்கள் விடுதலை முன்னணிக்கு பழக்கப்பட்ட பழைய செயற்பாடாகும். பாதாளக் குழுக்கள் அல்லது வேறு பெயர்களை வைத்து 1988, 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில்... » 02 பக்கம்

# மறு அறிவிப்புவரை கண்டி செல்லத் தடை!

## நால்வர் பலியாகியுள்ளதாகத் தகவல்

## சுகாதார அச்சுறுத்தல் ஏற்படும் அபாயம்



» 02 பக்கம்

# 30 வீத வாக்காளர் அட்டை விநியோகம்

## ♦ 29 விசேட விநியோக தினம்

## ♦ பாடசாலைகளுக்கு விடுமுறை

தபால் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான 14 மில்லியன் வாக்காளர் அட்டைகளில் 30 சதவீதமான வாக்காளர் அட்டைகள்... » 02 பக்கம்



# நெவில் சில்வா நீதிமன்றில் சரண்



மாத்தறை, வெலிகம டபிள்யூ 15 ஹோட்டலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் முன்னாள் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நெவில் சில்வா மாத்தறை... » 02 பக்கம்

# பொலிஸ் சேவைக் கட்டணங்கள் அதிகரிப்பு

## ♦ மோப்பநாய்- ரூ. 20,000

## ♦ குதிரை - ரூ. 30,000

பொதுமக்களுக்கு பொலிஸாரால் வழங்கப்படும் சேவைக்கான கட்டணத்தை அதிகரிப்பதற்கு பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில் பதில் பொலிஸ் மா அதிபரால்... » 02 பக்கம்




# மக்கள் சந்திப்பில் சிறீதரன் எம்.பி.







நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலை முன்னிட்டு, பூநகரி பிரதேச சபைக்குட்பட்ட இரணைதீவு வட்டாரத்தில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் (23) நடைபெற்றது.

நாச்சிக்குடா - கரடிக்குன்றுப் பகுதியில், கட்சியின் இரணைதீவு வட்டார வேட்பாளர் அனற் ஜெனதாஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் கலந்துகொண்டு, மக்களின் கேள்விகளுக்கு பதிலளித்திருந்தார்.

குறித்த கலந்துரையாடலில் பூநகரி பிரதேச சபையின் மேனாள் தவிசாளரும், வேட்பாளருமான சிவகுமாரன் ஸ்ரீரஞ்சன், மேனாள் உபதவிசாளர் முடியப்பு எமிலியாம்பிள்ளை, கட்சியின் இரணைதீவு வட்டாரக் கிளைத்தலைவர் முஹமது சலீம், வேட்பாளர்களான பிலிப்றெஜினோல்ட் நிவிந்தன், பத்மசேனன் லிடான்ரியூடர் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.







**கொழும்பு மறைமாவட்ட பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை வத்திகானில் புனித பாப்பரசர் பிரான்சிசுக்கு நேற்று (24) இறுதி அஞ்சலி செலுத்தியபோது.**

## போலிஸ்...

சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த சேவை கட்டணங்களை வசூலிப்பது தொடர்பில் தற்போது நடைமுறையிலுள்ள 2023.06.02 திகதியிடப்பட்ட பொலிஸ் மா அதிபர் சுற்றறிக்கை எண் 2749/2023 (நிதி சுற்றறிக்கை 04/2023) இரத்துச் செய்யப்படுவதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அந்த சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இதுவரை ஒலிபெருக்கிகளுக்கான அனுமதிப்பத்திர கட்டணம் நாளொன்றுக்காக 300 ரூபா அறவிடப்பட்ட நிலையில் இந்த சுற்றறிக்கையினூடாக இக்கட்டணம் 2,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டள்ளது.

பொலிஸ் மோப்பநாய்களுக்காக ஒன்றரை மணிநேரத்துக்கு பயணிக்கக்கூடிய அதிகபட்ச தூரத்தை கால்நடைமருத்துவரின் பரிந்துரைக்கமைய தீர்மானிக்கவும் பாடசாலை கண்காட்சிகளுக்காக பொலிஸ் உத்தியோகபூரவ மோப்பநாய்களை பெற்றுகொடுப்பதற்கு பணம் அறவிடல் அல்லது அறவிடாமை தொடர்பில் பொலிஸ்மா அதிபரிடம் அனுமதிக்குட்பட்டு இதுவரை வசூலிக்கப்பட்ட 3,000 ரூபா இதன்பின்னர் 20,000ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று குதியொன்றுக்கு ஒன்றரை மணிநேரத்துக்கு 6,000ரூபா வசூலிக்கப்பட்ட நிலையில் சுற்றறிக்கையின் பின்னர் அக்கட்டணம் 30,000ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அருகிலுள்ள பொலிஸ் நிலையத்துக்கு வாகனத்தை இழுத்துச் செல்வதற்கான கட்டணம் 600 ரூபாவிலிருந்து 5,000ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே கைரேகை அறிக்கைக்கான கட்டணம் 150 ரூபாவிலிருந்து 500 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

சுழியோடி உபகரணங்களுகாக அறவிடப்பட்ட கட்டணம் 2,400 ரூபாவிலிருந்து 4,000ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

உயிர்க்காக்கும் உபகரணங்களுக்காக அறவிடப்பட்ட கட்டணம் 1,200 ரூபாவிலிருந்து 5,000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## பிள்ளையானால்...

இரு தேர்தல்களில் வெற்றிபெற்றுள்ளோம்.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உப வேந்தரொருவரை கடத்திச் சென்று காணமலாக்கிய குற்றச்சாட்டிலேயே பிள்ளையான் கைதுசெய்யப்பட்டுள்ளார். அதற்கான சாட்சிகள் இருக்கின்றன. ஆனால் பிள்ளையான இந்தக் குற்றத்தை மாத்திரம் செய்யவில்லை.

தமிழீழ விடுதலை புலிகளுடன் இணைந்திருந்த காலத்தில் இடம்பெற்ற அரந்தலாவ பிக்கு கொலை, பொலிஸ் அதிகாரி கொலை போன்ற சம்பங்களை கணக்கில் கொள்ளாவிட்டாலும் அதன் பின்னர் பிள்ளையான் பல்வேறு ஒப்பந்தங்களுக்காக கொலைகளை செய்துள்ளார்கள். குற்றங்களையும் செய்துள்ளார். எனவே, பிள்ளையான பல்வேறு குற்றச்செயல்களின் முக்கியமானவராவார்.

அவரை கைதுசெய்து 90 நாட்களுக்க தடுத்து வைத்துள்ளோம். பிள்ளையானுக்கு கதைப்பதற்கு நிறைய நாட்கள் இருக்கின்றன. பிள்ளையானை விசாரிப்பதற்கு பொலிஸாருக்கும் அதிக நாட்கள் இருக்கின்றன. தற்போது ரணில் விக்கரிமசிங்க, மஹிந்த ராஜபக்ஷ,உதய கம்மன்பில, ராஜித சேனாரத்ன உள்ளிட்டோர் பயந்து பிள்ளையானை பாதுகாக்க ஒன்று திரண்டுள்ளனர். பிள்ளையானை தேசத்தின் வீரராகவும், யுத்த நெருக்கடி காலத்தில் பிள்ளையானே யுத்தத்தை நிறைவுக்கு கொண்டுவந்ததாகவும் கூறுகிறார்கள். எதற்காக இவ்வாறு குழப்பமடைகிறார்கள்.

பிள்ளையான் வாயை திறந்தால் எவற்றை கூறுவார், இவர்கள் பெற்றுக்கொடுத்த ஒப்பந்தங்கள் வெளிவந்துவிடுமோ என்று பயந்துள்ளார்கள். பிள்ளையான் இரகசிய பொலிஸாரிம் என்ன கூறினார் என்பதை அறிந்துகொள்ளவே இவர்கள் முயற்சிக்கிறார்கள். அதற்காகவே, பிள்ளையானுக்கு ரணில் தொலைபேசி அழைப்பும் விடுத்துள்ளார்கள்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் பிரகாரம் நெருங்கிய உறவினர்களுக்கும் சட்டத்தரணிக்கும் மாத்திரமே பிள்ளையானை சந்திக்க முடியும். அதனாலேயே அந்த பணியை உதய கம்மன்பிலவிடம் ஒப்படைத்துள்ளார்கள். உதய கம்மன்பில சட்டத்தரணி என்பது உண்மை. ஆனால் இதுவரையில் வழக்கு வாதாடியது இல்லை. தற்போதே முதல் முறையாக பிள்ளையானின் வழக்கை வாதாட போகிறார்.

பிள்ளையான் அழுததாக உதய கம்மன்பில கூறுகிறார். பிள்ளையானின் வழக்கை உதய கம்மன்பில வாதாடுவது நினைத்து அவர் அழுதிருப்பதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் வெளியிடப்படுகின்றன. உதய கம்மன்பில கூறுவது போன்று பிள்ளையானை சந்தித்தபோது அருகில் பொலிஸார் நால்வர் இருந்திருப்பார்கள் என்றால் எந்த விடயத்தை அவர்களால் கலந்தாலோசிக்க முடியாமல் போனது. அதனால் ஏற்பட்ட தடை என்ன வென்பது புரியவில்லை.

ஆனால், பொலிஸாரின் மத்தியில் உதய கம்மன்பிலவால் பிள்ளையானிடம் அதனையும் கூறிவிட்டீர்களா என்று வினவ முடியாது. எங்களைபற்றி என்ன கூறினீர்கள் என்றும் கேட்க முடியாது. பிள்ளையானினூடாக அவர்களால் முன்னெடுக்கப்பட்ட குற்றங்களை தொடர்பில் பிள்ளையான் வாய் திறந்தால் ஒவ்வொருவரும் வரிசையாக சிறைக்குச் செல்ல நேரிடும் என்றார்.

## 30 வீத ...

விநியோகித்து நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் 29 ஆம் திகதி விசேட விநியோக தினமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தபால் மா அதிபர் ருவன் சத்குமர தெரிவித்தார்.

மேலும், உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு எதிர்வரும் 05 மற்றும் 06 ஆம் திகதிகள் பாடசாலை விடுமுறை விசேட தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

வாக்காளர் அட்டை விநியோகம் தொடர்பில் தபால் மா அதிபர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகளை ஆரம்பித்திருக்கிறோம். கடந்த 16ஆம் திகதியிலிருந்து வாக்காளர் அட்டைகள் தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, தபால் திணைக்களத்துக்கு 14 மில்லியனுக்கும் அதிகமான வாக்காளர் அட்டைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது வீடுகளுக்கு வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகளை ஆரம்பித்திருக்கிறோம். அதன் பிரகாரம் இதுவரையில் 29 – 30 சதவீத வாக்குச் சீட்டுகளை விநியோகித்து நிறைவு செய்திருக்கிறோம்.

எதிர்வரும் 29ஆம் திகதிவரை வாக்குச்சீட்டுகளை விநியோகிக்க முடியும். எதிர்வரும் 27ஆம் திகதி வாக்குச்சீட்டு விநியோகிப்பதற்காக விசேட வாக்காளர் அட்டை விநியோக தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதனூடாக 29ஆம் திகதிக்கு முன்னர் வாக்குச் சீட்டுகளை விநியோகித்து நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளோம். தற்போது நிலவும் காலநிலையினால் அதிகாரிகள் நெருக்கடியிலேயே இதனைச் செய்து வருகிறார்கள்.

தேர்தல் நடவடிக்கைகளில் தபால் திணைக்களத்துக்கு முக்கிய பங்கு இருந்தாலும் எங்களின் கடமைகளை குறைபாடின்றி நிறைவேற்ற எதிர்பார்க்கிறோம். தேர்தல் தினமான 06ஆம் திகதி வரையில் தபால் திணைக்கள அதிகாரிகளின் விடுமுறை இரத்துச் செய்யப்பட்டுள்ளது. விசேட காரணங்களுக்காக பரிபூரண அனுமதிக்கு மாத்திரமே விடுமுறை வழங்கப்படும் என்றார்.

2025 ஆம் ஆண்டு உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு 24, 25, 28, 29 ஆம் திகதிகளில் இடம்பெறும். அதற்கமைய, பெரும் எண்ணிக்கையிலான தபால் மூல வாக்காளர்கள் நேற்று வாக்குப்பதிவு செய்திருந்ததாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

**பாடசாலைகளுக்கு விசேட விடுமுறை**

இதேவேளை, மே மாதம் 06ஆம் திகதி இடம்பெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தல் காரணமாக நாட்டிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் எதிர்வரும் மே 05ஆம் மற்றும் 06ஆம் திகதிகளில் விடுமுறை தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அதற்கமைய, மே மாதம் 07ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிப்பதற்கு நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வாக்குச்சாவடிகளாக பயன்படுத்தப்படும் பாடசாலைகள் 04ஆம் திகதியே சம்பந்தப்பட்ட கிராம உத்தியோகத்தர்களிடம் கையளிக்கப்பட வேண்டும். வாக்குச்சாவடி நடவடிக்கைகளுக்கு அவசியமான தளபாட வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்காக சகல வலய கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பொதுமக்கள் ...

பாப்பரசரின் திருவுடலுக்கு விடிய விடிய அஞ்சலி செலுத்திவருகின்றனர்.

உலக கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் தலைவர், பாப்பரசர் பிரான்சிஸ்(வயது 88) உடல்நலக்குறைவு காரணமாக கடந்த 21ஆம் திகதி காலமானார். பிரான்சிஸ் மறைவுக்கு உலகத்தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். இந்நிலையில் பாப்பரசரின் இறுதிக் கிரியைகள் நாளை (26) சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இறுதிச்சடங்குக்கு முன் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதற்காக பாப்பரசரின் திருவுடல் ரோம் நகரிலுள்ள புனித பீட்டர் தேவாலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவரது உடலுக்கு ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இறுதி அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

நேற்றுமுன்தினம் சுமார் 08 மணி நேரத்தில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாப்பரசர் பிரான்சிஸ் உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். இதற்காக புனித பீட்டர் தேவாலயம் இரவு முழுவதும் திறந்து வைக்கப்பட்டிருந்தது. அங்கு பொதுமக்கள் நீண்ட வரிசைகளில் காத்திருந்து, மறைந்த பாப்பரசரின் உடலுக்கு விடிய விடிய அஞ்சலி செலுத்தினர். பாப்பரசர் பிரான்சிஸ் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக உலகின் பல்வேறு நாடுகளிலும் இருந்து பொதுமக்கள் வந்த வண்ணம் உள்ளனர். தொடர்ந்து மக்கள் கூட்டம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மறு அறிவிப்பு...

தலதா வழிபாட்டுக்காக கண்டி நகரை நோக்கி நேற்று வரையில் நான்கு இலட்சம் மக்கள் படையெழுத்துள்ளதால், மீள் அறிவிப்பு வரும் வரையில் கண்டி நகருக்கு வருவதை தவிர்க்குமாறு கண்டி மாவட்ட செயலாளர் இந்திக்க உடவத்த மக்களிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

தலதா வழிபாட்டு ஏற்பட்டுக் குழுவின் தீர்மானங்களை அறிவிக்கும் விசேட ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு நேற்று (24) கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் பக்தர்கள் கண்டி நகரை நோக்கி வந்தால் சுகாதாரப் பிரச்சினைகளும் அனர்த்த நிலைமைகளும் ஏற்படலாம் என அவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுதொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

கண்டி பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையிலானவர்கள் ஒன்றுகூடியுள்ளதால் பல்வேறு விசேட தீர்மானங்களை எடுக்க நேர்ந்துள்ளது. இதுவரையில் நான்கு இலட்சம் வரையானவர்கள் கண்டியை வந்தடைந்துள்ளார்கள். இப்போது கண்டியில் இருக்கும் மக்கள் தலதாவை தரிசிப்பதற்கு இன்னும் ஐந்து ஆறு நாட்களாகும்.

அதேபோன்று கண்டி குறுகிய எல்லைகொண்ட நகரமாகும். இந்த நகரத்தின் நிலப்பரப்புக்கேற்ப குறித்த ஓரளவு எண்ணிக்கையிலான மக்களே இங்கிருக்க முடியும். தற்போது இருக்கும் மக்கள் கண்டி நகரத்தில் தங்கியிருப்பதற்கு போதுமான எண்ணிக்கையிலேயே இருக்கிறார்கள். அதேபோன்று உணவுகளை விநியோகித்தாலும் சுகாதார பாதுகாப்பை வழங்குவதில் சிக்கல் நிலைமை இருக்கிறது.

தொடர்ந்தும் கண்டியை நோக்கி மக்கள் திரண்டு வந்தால் எதிர்காலத்தில் சுகாதார பிரச்சினைகளும் அனர்த்த நிலைமையும் ஏற்படலாம். மக்களுக்கு பொருத்தமற்ற நிலைமை ஏற்படலாம். எனவே, மீள் அறிவிப்பு விடுக்கும் வரையில் ஸ்ரீ தலதா வழிபாட்டுக்காக கண்டியை நோக்கி வரவேண்டாம் என்று பணிவுடன் கோருகிறோம். கிராமப்புறங்களிலிருந்து புறப்பட வேண்டாம் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

**கண்டிக்கான ரயில் சேவை இரத்து**

இதேவேளை, பொலிஸாரின் வேண்டுகோளுக்கிணங்க கொழும்பிலிருந்து கண்டியை நோக்கி பயணிக்கும் ரயில் போக்குவரத்தை இரத்துச் செய்ய ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

**குப்பைக்கூளங்கள் அதிகரிப்பு**

கடந்த ஒரு வார காலமாக கண்டியை நோக்கி இலட்சக்கணக்கான மக்கள் படையெழுத்து வருவதால், கண்டி நகரில் குப்பைகள் அதிகரித்துள்ளதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. வீதிகளின் இரு மருங்குகளிலும் குடிநீர் போத்தல்கள், பொலித்தீன் பைகள் குவிந்திருப்பதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்த நிலைமை சுற்றுச்சூழல் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

**நால்வர் பலி**

இதேவேளை, தலதா வழிபாட்டுக்காக வருகை தந்துள்ளவர்களில் இதுவரையில் நால்வர் உயிரிழந்துள்ளதாக கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் இரேஷா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். உயிரிழந்தவர்களில் 69 வயது ஆணொருவரும் 74 மற்றும் 80 வயது மதிக்கத்தக்க பெண்கள் இருவரும் அடங்குவதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இவர்கள் பிலியந்தலை, கலகெதர, கல்கமுவ ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று வைத்தியசாலை பணிப்பாளர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். தலதா வழிபாட்டுக்கு சென்றவர்களில் 279 வரையானவர்கள் நேற்று முன்தினம் உடல் நல குறைபாட்டின் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், 2074 பேர் சன நெரிசலால் மயக்கமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## நெவில்...

நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (24) சரணடைந்துள்ளார்.

கடந்த 2023 ஆண்டு மாத்தறை, வெலிகம டபிள்யூ 15 ஹோட்டலில் இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உள்ளிட்ட எட்டு பேரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு அண்மையில் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த வழக்கில் முன்னாள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒன்பதாவது சந்தேகநபர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை ஆஜரான பின்னர் அவரை பிணையில் விடுவிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## டான் பிரியசாத்தின் ...

மீண்டும் அந்த அடக்குமுறையை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறதா என்ற சந்தேகமும் ஏற்படுகிறது. அவ்வாறு செய்ய அவர்கள் முயற்சிப்பார்களாக இருந்தால் அதுவே ஜே.வி.பியின் இறுதிப் பயணமாக இருக்குமென்று அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (24) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

''டான் பிரியசாத் என்பவர் இம்முறை உள்ளூராட்சித் தேர்தலில் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் போட்டியிடும் வேட்பாளராவார். இருந்தபோதும் அதற்கும் அப்பால் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளராவதற்கு முன்னர், அவர் சமூக மோசடிகளுக்கு எதிராகவும் நாட்டு மக்களுக்காகவும் குரல்கொடுத்துவந்த சமூக செயற்பாட்டாளராக பிரபல்யமானவராவார்.

டான் பிரியசாத்தின் கொலையானது மிகவும் சந்தேகத்துக்கிடமான கொலைச் சம்பவமாகும். இந்தக் கொலைச் சம்பவத்தில் சந்தேகம் ஏற்படுவதற்கு பிரதானமாக மூன்று காரணங்கள் இருக்கின்றன. முதலாவது விடயம், டான் பிரியசாத்தை உண்மையாகவே இருமுறைகளை கொலை செய்திருக்கிறார்கள். அவர் உயிரிழப்பதற்கு முன்னரே அவர் உயிரிழந்துவிட்டதாக அறிவிப்பொன்று வெளியிட்டிருந்தார்கள். அதாவது, அவர் மரணத்தை எதிர்பார்த்திருந்தது போன்று இந்த அறிவிப்பை விடுத்திருந்தமையானது இந்தச் சம்பவத்தில் கடும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இரண்டாவதாக, டான் பிரியசாத்தின் உயிரிழப்புடன் மக்கள் விடுதலை முன்னணிக்கு தொடர்ச்சியான ஒத்துழைப்பை வழங்கிய பேஸ்புக் போன்ற சமூக வளைத்தளங்களில் ஏற்கனவே முன்னேற்பாடுகளுடன் டான் பிரியசாத் மீது சேறு பூச பெரும் முயற்சிகளை செய்திருந்தார்கள். ஒருமணி நேரத்துக்குள் இது எவ்வாறு இடம்பெற்றது என்பது எங்களுக்கு தெரியவில்லை.

மூன்றாவது காரணம், உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு சில தினங்கள் இருக்கும்போது பிரதான எதிர்க்கட்சியின் வேட்பாளர் ஒருவரின் உயிரிழப்பு தொடர்பில் இதுவரையில் அரசாங்கம் எந்தவொரு அறிவிப்பையும் வெளியிடவில்லை. இந்த மூன்று காரணங்களையும் கவனத்திற்கொண்டால் இந்த மரணம் மிகவும் சந்தேகத்துக்கிடமானதாகும். பிரியசாத் மக்கள் விடுதலை முன்னணியின் கொள்வனவு திருட்டுச் சம்பவத்துக்கு எதிராக எந்தவொரு அச்சமும் இல்லாமல் முறைப்பாடு செய்த சிலரில் மிகவும் முக்கியமான நபர்களில் ஒருவராவார்.

அதேபோன்று இந்த அரசாங்கத்தின் அநேகமான குற்றச்செயல்களுக்கு எதிராக பகிரங்கமாக அச்சமின்றி முறைப்பாடு செய்யவும் கருத்து வெளியிட்டு வந்தும் இருக்கிறார். இந்தச் சம்பவத்தின் பின்னணயில் இருப்பவர் யார் என்ற சந்தேகமும் எழுகிறது. அதேபோல் திடீரென பாதாள குழுத் தலைவர் எனக் கருதப்படும் ஒருவரின் குரல் பதிவு வெளியிடப்படுகிறது. அந்தக் குரல் பதிவு உண்மையானதா பொய்யானதா என்பது எங்களுக்கு தெரியாது. அந்தக் குரல் பதிவினூடாக அந்த பாதாள குழுத் தலைவர் மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக செயற்படுவது தவறு என்ற காரணத்தை வெளிப்படுத்தவே அவர் முயற்சிக்கிறார்.

அதனடிப்படையில், மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக செயற்படுபவர்களை அடக்குவதற்காக இவர்கள் பாதாள குழுவினரை பயன்படுத்துகிறார்களா என்ற சந்தேகமும் எழுகிறது. இது மிகவும் பயங்கரமான செயற்பாடாகும். தேசிய பாதுகாப்பும் மிகவும் கீழ்மட்டத்தை அடைந்துள்ளது. உயிர்பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. பொதுமக்களின் உயிர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதில் இந்த அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. தொடர்மாடி குடியிருப்புக்கு வந்து தைரியமாக வீட்டுக்குள் வந்து துப்பாக்கிச் சூடு நடத்துமளவுக்கு இந்த நாட்டின் தேசிய பாதுகாப்பு தள்ளப்பட்டுள்ளது என்றால் நாட்டின் நிலைமை மிகவும் கேள்விக்குரியாகவே அமைந்துள்ளது.

கடந்த அரசாங்கங்களில் இவ்வாறான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றதில்லை. ஆனால், நாளாந்தம் ஒன்று அல்லது இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெறும் நிலையை இந்த அரசாங்கம் தோற்றுவித்துள்ளது. இந்தச் சம்பவங்கள் தொடர்பில் அச்சம் கொள்ள தேவையில்லை என்றும் இது பாதாள குழுக்களுக்குள் இருக்கும் உள்ளகப் போட்டி என்றும் இதனால் தேசிய பாதுகாப்புக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்றே இந்த அரசாங்கம் கூறுகிறது. ஆனால், தற்போது இந்த அரசாங்கத்துக்கு எதிராக குரல்கொடுக்கும் சாதாரண மக்களின் வீடுகளுக்குச் சென்று துப்பாக்கிச் சூடு நடத்துமளவுக்கு நிலைமை ஏற்பட்டுள்ளது என்றால் தேசிய பாதுகாப்பும் முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.

1988, 1989ஆம் ஆண்டு காலப்பகுதியில் மக்கள் விடுதலை முன்னணிக்கு எதிராக வாக்களித்தவர்களின் கைகளை வெட்டினார்கள். எதிராக பேசியவர்களின் கழுத்தை அறுத்தெறிந்தார்கள். இது ஜே.வி.பிக்கு பழக்கப்பட்ட பழைய செயற்பாடாகும். பாதாளக் குழுக்கள் அல்லது வேறு பெயர்களை வைத்து மீண்டும் அந்த அடக்குமுறையை ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறதா என்ற சந்தேகமும் ஏற்படுகிறது. அவ்வாறு செய்ய அவர்கள் முயற்சிப்பார்களாக இருந்தால் அதுவே ஜே.வி.பியின் இறுதிப் பயணமாக இருக்கும்'' என்றார்.

## தினசரி பலாபலன்கள்

**விசுவாவசு வருடம் சித்திரை மாதம் 12ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்** தேவையற்ற பயணங்களால் செலவுகள் அதிகரிக்கும். பொறுமையோடு அமைதியைக் கையாளுங்கள்.

**ரிஷபம்** பெண்களால் தன இலாபங்கள், உதவிகள் உண்டு. தொழில், வியாபாரத்தில் அதிக இலாபங்களை அடைவீர்கள்.

**மிதுனம்** உங்கள் தொழில் வியாபாரப் பொறுப்புகளை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காதீர்கள். இடமாற்றங்கள் ஏற்படலாம்.

**கடகம்** தந்தையின் உடல் நிலை மற்றும் சொத்துப் பிரச்சினைகள் தலைதூக்கலாம். நண்பர்களால் சிரமங்களை அனுபவிப்பீர்கள்.

**சிம்மம்** கோபத்தை அடக்கிக் கொள்வதால் பெரிய பெரிய பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். மனக் கட்டுப்பாடு அவசியம்.

**கன்னி** காதல் விவகாரங்களில் சிற்சில முட்டுக்கட்டைகள் வந்து பின் தீரும். வியாபாரத்தில் அக்கறையுடன் செயற்படுங்கள்.

**துலாம்** நீண்டநாள் உங்கள் கனவு இன்று பலிக்கப்போகின்றது. எதிரிகள் மண்டியிட்டு சரணாகதி அடைவார்கள்.

**விருச்சிகம்** குழந்தைகளால் செலவுகளோ அல்லது மனச்சங்கடங்களோ ஏற்படலாம். யாரையும் நம்பி இரகசியங்களை உளறிவிடாதீர்கள்.

**தனுசு** உறவுகள் எப்படிப்பட்டவர்கள் என்பதைப் புரிந்து கொள்வீர்கள். வாகனப் பயணங்களின்போது கவனம் வேண்டும்.

**மகரம்** பழையவற்றை அப்புறப்படுத்தி புதியவற்றை உங்களுக்காக வாங்கி மகிழ்ச்சியடைவீர்கள். நண்பர்கள் உதவுவார்கள்.

**கும்பம்** குடும்பத்தில் எதிர்பாராத சில குழப்பங்களால் உங்கள் அமைதி கெடலாம். தன ரீதியில் ஏமாற்றங்கள் ஏற்படலாம்.

**மீனம்** உடல், மன நலத்தைக் கெடுக்கும் செயல்களில் ஈடுபடாதீர்கள். கணவன் - மனைவி உறவில் சில விரிசல்கள் ஏற்படலாம்.

| | |
|---|---|
| **திதி** | : துவாதசி மு.ப.11.45 வரை பின் திரயோதசி |
| **நட்சத்திரம்** | : பூரட்டாதி மு.ப.8.53 வரை பின் உத்திரட்டாதி |
| **பிறை** | : தேய்பிறை |
| **யோகம்** | : மரண யோகம் மு.ப.8.53 வரை பின் சித்த யோகம் |
| **வார சூலை** | : மேற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது. |
| **நல்ல நேரம்** | : காலை 5.58 – 8.58 மணி வரை காலை 9.58 – 10.28 மணி வரை பகல் 12.58 – 2.58 மணி வரை மாலை 4.58 – 5.58 மணி வரை |
| **ராகு காலம்** | :10.28–11.58மணி வரை |
| **எமகண்டம்** | : 2.58 – 4.28 மணி வரை |
| **குளிகை** | : 7.28 – 8.58 மணி வரை |
| **சந்திராஷ்டமம்** | : சிங்க ராசியினர் எச்சரிக்கையாக செயற்படவும் |

**அதிர்ஷ்ட தாராபலனுடைய நட்சத்திரங்கள்**

**இன்று முற்பகல் 8.53 மணி வரை**
பரணி, ரோஹிணி, திருவாதிரை, பூசம், ஆயிலியம், பூரம், அஸ்தம், சுவாதி, அனுஷம், கேட்டை, பூராடம், திருவோணம், சதயம், உத்திரட்டாதி, ரேவதி

**இன்று முற்பகல் 8.53 மணிக்கு மேல்**
அஸ்வினி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், ஆயிலியம், மகம், உத்திரம், சித்திரை, விசாகம், கேட்டை, மூலம், உத்திராடம், அவிட்டம், பூரட்டாதி, ரேவதி போன்ற நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும் தொழில், வியாபார இலாபங்கள்,கல்விச் சிறப்பு, திடீர் தன அதிர்ஷ்டம், உடல் ஆரோக்கியம், தெய்வ அனுக்கிரகம் அனைத்தும் சித்திக்கும். அதிர்ஷ்டம், சுகம் உண்டு.

**விஷேட தினம்** :பிரதோஷ விரதம், ரமண மகரிஷி சமாதி தினம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**



(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்) ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி :
077-0525325
078-6759739

# ஐக்கிய மக்கள் சக்தி மாத்திரமே பலஸ்தீன மக்களுக்காகவும் முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்தது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பெருமிதம்





பலஸ்தீன மக்கள் படுகொலை செய்யப்படும் போது, பலஸ்தீன மக்கள் அரச பயங்கரவாதத்தை எதிர்கொள்ளும் போது, இந்நாடுகள் இரண்டும் ஒற்றுமையோடும் நல்லிணக்கத்தோடும் இருக்க வேண்டுமென்பதையே முழு உலகமும் ஏற்றுக்கொண்டுள்ளன. ஐக்கிய மக்கள் சக்தி இந்தக் கொள்கையையே ஏற்றுக்கொள்கிறது. அண்மையில் பலஸ்தீன மக்களின் உரிமைகள் குறித்து ஸ்டிக்கர் ஒட்டிய இளைஞரொருவர் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். பலஸ்தீன மக்களின் உரிமைகள் தொடர்பில் ஆளுந்தரப்பினர் பேசி, குரலெழுப்பி வந்தபோதிலும் ஆட்சிக்கு வந்ததன் பிற்பாடு இவ்வாறே நடந்துகொள்கின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பேருவளை பிரதேசத்தில் நேற்று முன்தினம் (23) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

''அரசாங்கத்தின் பேச்சு ஒருவிதமாகவும் அதன் நடவடிக்கைகள் வேறுவிதமாகவும் அமைந்து காணப்படுகின்றன. வெறும் வாக்குகளைப் பெறுவதற்காக பொய்யுரைத்தவர்கள் கூறிய பிரகாரம் நடந்துகொள்கிறார்கள் இல்லை. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை பலஸ்தீன மக்களின் உரிமைகள் குறித்துப் பேசுவதற்கு இந்நாட்டு மக்களுக்கு ஜனநாயக உரிமை இல்லையென்றே கருதி செயற்பட்டு வருகிறது. பலஸ்தீனியர்கள் கொல்லப்படுவதை எதிர்ப்பது இங்கு தடைசெய்யப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அவ்வாறே காணப்படுகின்றன. அவ்வாறு செய்தால் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்படும். பலஸ்தீன மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதே நாட்டினதும் மக்களினதும் கருத்தாகும். பலஸ்தீன மக்களின் அடிப்படை உரிமைகளுக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் இரட்டை நிலைப்பாடுகளின்றி முன்னிற்க வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி வாக்குகளைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டு அப்பட்டமான அறிக்கைகளையும் பொய்களையும் வெளியிடும் கட்சி அல்ல. கொள்கை ரீதியான அரசியலையும் நிலையான கருத்துகளின் அடிப்படையிலும் செயற்படும் கட்சியாகும். பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காக குரலெழுப்புவதற்கு இந்நாட்டு மக்களுக்கு காணப்படும் உரிமையை ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறதா என்பது குறித்து நாம் கேள்வி எழுப்புகிறோம். நல்லிணக்கம் தொடர்பில் பேசும் அரசாங்கம் இன்று பலஸ்தீன மக்களின் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பதும் அவர்களின் பார்வையில் பிழையான செயலாக மாறியுள்ளது.

இந்நாட்டில் எதேச்சதிகார ஆட்சி நடைபெற்று வந்த காலப்பகுதியில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளை பலவந்தமாக மீறி நடந்து கொண்டார். தகனமா அடக்கமா என்ற பிரச்சினையின் போது முஸ்லிம் மக்களுக்காக ஐக்கிய மக்கள் சக்தியே அதனை எதிர்க்க முன்வந்தது. இன்று ஆட்சி செய்பவர்கள் இந்தப் பிரச்சினை எழுந்தபோது வாய் மூடி மௌனம் காத்து வந்தனர். சர்வாதிகார ஆட்சி அமுலில் இருந்தபோதும் இன, மத வேறுபாடுகளைப் புறமொதிக்கி வைத்துவிட்டு, கொள்கை ரீதியான சக்தியாக ஐக்கிய மக்கள் சக்தியே முன்னின்றது'' - என்றார்.

# யாழ். இளைஞர்களுடன் முரண்பட்ட மாங்குளம் பொலிஸாருக்கெதிராக விசாரணைகள் ஆரம்பம்

பு.கஜிந்தன்



யாழில் இருந்து வவுனியா நோக்கிச் சென்ற இளைஞர் குழுவினருடன் முரண்பட்டு அவர்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்ட மங்குளம் பொலிஸார் இருவருக்கெதிராக நடவடிக்கை எடுப்பதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபால தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

குறித்த இளைஞர் குழுவினர் கடந்த 22ஆம் திகதி யாழிலிருந்து வவுனியா நோக்கி காரில் பயணித்தனர். இந்நிலையில், அந்த இளைஞர்களை மாங்குளம் பொலிஸார் வழிமறித்தனர். வழிமறிக்கும்போது டோர்ச் லைட் வெளிச்சத்தை கண்ணில் பாய்ச்சியே வழிமறித்தனர்.

இந்நிலையில், இவ்வாறு வழிமறிப்பது தவறு என அந்த இளைஞர் குழு எடுத்துக்கூறியபோது அவர்களுடன் பொலிஸார் முரண்பாட்டில் ஈடுபட்டதுடன், அச்சுறுத்தினர். அத்துடன், தகட்டு இலக்கத்தையும் வழங்க மறுத்ததுடன், அராஜகத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சம்பவத்தை அந்த இளைஞர் குழுவினர் ஊடகங்கள் ஊடாக வெளிக்கொண்டு வந்திருந்த நிலையில், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபாலவின் கவனத்துக்கும் கொண்டுசென்றனர்.

இதனையடுத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவருக்குமெதிராக விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் திலக் தனபால தெரிவித்துள்ளார்.

# அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கையால் பாதிக்கப்படப்போவது பெருந்தோட்ட மக்களே

## ஜீவன் தொண்டமான் எம்.பி. சுட்டிக்காட்டு

(செ.திவாகரன்)



''அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கை இலங்கைக்கு எவ்வாறான பாதிப்பை ஏற்படுத்துகிறதென்பது இப்போது யாருக்கும் புரியாது. ஆனால், அதில் அதிகம் பாதிக்கப்படப்போவது நாம்தாம் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்''- என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

லிந்துலை, அக்கரப்பத்தனை பகுதியில் நேற்று (24) இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

''அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தமது உத்தியோகஸ்தர்களுடன் பேசி வரியைக் குறைக்காவிட்டால் முதலில் பாதிக்கப்படப் போவது தேயிலைத் தோட்டங்கள் தான். இதற்கு காரணம் வரி விதித்திருப்பது ஏற்றுமதிப் பொருட்கள் மீது. இதில் முதலாம் இடத்தில் இருப்பது தொழிற்சாலைகள். இரண்டாவது இடத்தில் இருப்பது, தேயிலை. இது இவ்வாறிருக்க, சம்பளம் மிகப் பெரிய பிரச்சினையாக அமையும். தற்போது தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிப்பு பற்றி பேசுகின்றோம். ஆனால், வரி விதிக்கப்பட்டால் சம்பளம் குறைக்கப்படும். அத்துடன், தேயிலை பறிக்கும் எடையும் அதிகரிக்கப்படும்.

ஆனால், எங்களுக்கு கிடைத்த தகவலின் படி ஜனாதிபதி காரியாலயத்திலிருந்து இதுவரையில் யாருமே வரிக்குறைப்பு சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பேசவில்லை என்பதாகும்.

கடந்த காலத்தில் பொருளாதாரத்தில் நாம் ஓரளவு வளர்ச்சியடைந்து வந்தோம். காரணம், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரம் தான் பொருளாதாரத்தைப் பற்றி நன்கு அறிந்த ஒருவராவார். ஆனால், தற்போது நாம் அனைவரும் பெரியதொரு ஆபத்தை எதிர்கொள்ளப் போகின்றோம். பொருளாதாரத்தில் அதற்கு நாம் அனைவரும் தயாராகவே இருக்க வேண்டும். எனவே, இனிவரும் காலங்களில் சிந்தித்துச் செயற்படுவீர்கள் என நான் எதிர்பார்க்கின்றேன்.

அத்தோடு, வீட்டுத் திட்டத்தை எடுத்துக்கொண்டால் இந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் மலையக மக்களுக்காக குறைந்த வீடுகளுக்கான திட்டமே உள்ளது. 2004ஆம் ஆண்டு நுவரெலியா மாவட்டத்துக்கு ஜீவன் தொண்டமான் தலைமையில் ரூ. 550 மில்லியன் நிதியொதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால், தற்போதைய அரசாங்கம் நுவரெலியா மாவட்டத்துக்கு நிதியொதுக்கீடு செய்திருப்பது 92 மில்லியன். ஏன் இவ்வாறு அக்கறையில்லாமல் செயற்படுகிறார்கள்? எல்லாம் வாய்ச்சொல் வீரர்களாக இருந்தால் எந்தப் பிரச்சினையும் தீரப்போவதில்லை எனவும் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

# இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்கு நோய் தீவிரம்; ஜனவரி முதல் 1,311 நோயாளர்கள் அடையாளம்!





(இரத்தினபுரி நிருபர்)

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இரத்தினபுரி மாவட்டத்தில் 1,311 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர தெரிவித்தார்.

இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்கு நோய் தீவிரமடைந்து வருவதைக் கட்டுப்படுத்துவது குறித்து நேற்று முன்தினம் (23) சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தலைமையில் சப்ரகமுவ மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இந்த ஆண்டு (2025) ஜனவரி மாதம் முதல் இரத்தினபுரி மாவட்டத்தில் 1,311 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் மட்டும் மூன்று மருத்துவர்கள், இரண்டு மருத்துவ மாணவர்கள், இருபத்து மூன்று தாதியர்கள், ஒரு மருந்தாளர், அறுபத்து நான்கு சுகாதார உதவியாளர்கள், நான்கு பாதுகாப்புக் காவலர்கள், பதினைந்து பணியாளர்கள் உட்பட 143 பேர் தற்போது டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இரத்தினபுரி போதனா வைத்தியசாலையை அண்மித்துள்ள மார்பக சிகிச்சைப் பிரிவில் பணியாற்றும் சுகாதாரப் பணியாளர்கள் பதினான்கு பேரும் மருந்து வழங்கும் பிரிவில் மூன்று பேரும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கருகில் கட்டப்பட்டு வரும் சப்ரகமுவ பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கான கட்டிடத் தொகுதியில் டெங்கு நுளம்புகள் அதிகரித்துக் காணப்பட்டுள்ளன. இதன்மூலம் டெங்கு தொற்றுப்பரவுவதால் இரத்தினபுரி போதனா மருத்துவமனையும் பாதிக்கப்பட்டது.

மேற்படி இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்கருகில் அமைக்கப்பட்டு வரும் சப்ரகமுவ பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கான கட்டிடத் தொகுதி வளாகம் இப்போது சுகாதார அதிகாரிகளால் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

டெங்கு தொற்று ஈடிஸ் அல்போபிக்டஸ் நுளம்பை விட ஈடிஸ் ஈஜிப்டய் நுளம்பால் மிகவும் வேகமாகப் பரவி வருகிறது. இது மனித உயிருக்கு கடுமையான அச்சுறுத்தலாகவும் மாறியுள்ளது. இரத்தினபுரி மாவட்டம் முழுவதும் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அதன்படி இரத்தினபுரியில் 376 பேரும் பலாங்கொடையில் 110 பேரும் கஹவத்தையில் 109பேரும் குருவிட்டவில் 82 பேரும் பதிவாகியுள்ளனர்.

இரத்தினபுரி போதனா மருத்துவமனையில் இரண்டு வார்ட்டு தொகுதிகள் நிறுவப்பட்டுள்ளன. அதில் ஒரே நேரத்தில் 120 டெங்கு நோயாளர்கள் சிகிச்சை பெறலாம் என்றும் சப்ரகமுவ மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கபில கன்னங்கர மேலும் தெரிவித்தார்.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன, டெங்கு தொற்று அதிகளவில் பரவுவதற்கு முன்பு ஒரு சரியான திட்டத்தை செயற்படுத்த வேண்டும்.

கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் நெறிமுறை ஆகிய மூன்று பகுதிகளையும் உள்ளடக்கியுள்ளது. சுற்றுச்சூழல் காரணியின் அடிப்படையில் சுற்றியுள்ள சுற்றுச்சூழல் அமைப்பை சுத்தம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

டெங்கு உள்ளிட்ட நோய்களைத் தடுப்பது குறித்து சமூகத்துக்குக் கற்பிப்பது அவசியம். அரச நிறுவனங்களைச் சுற்றியுள்ள பகுதிகளில் நடைபெறும் கட்டுமானப் பணிகளை அடிக்கடி கண்காணிப்புச் செய்வது அவசியமாகும்.

டெங்குத தொற்றைத் தடுப்பது குறித்து அவசரமாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளதென்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன மேலும் தெரிவித்தார்.

# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(அநுராதபுரம் நிருபர்)

எஹட்டுவெவ பகுதியில் காட்டுயானையின் தாக்குதலுக்குள்ளான குடும்பஸ்தரொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகப் எஹட்டுவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

எஹட்டுவெவ பொலிஸ் பிரிவின் கதுறுவெவ பகுதியில் நேற்று (24) அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக எஹட்டுவெவ பொலிஸார் குறிப்பிட்டனர்.

48 வயதுடைய எஹட்டுவெவ, கதுறுவெவ பகுதியை வசிப்பிடமாகக் கொண்ட குடும்பஸ்தர் ஒருவரே இத்தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

வீட்டுத்தோட்டத்துக்குள் நுழைந்த காட்டு யானையை அவ்விடத்திலிருந்து துரத்துவதற்கு முற்பட்டபோதே இவ்வனர்த்தம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவரின் சடலம் குருநாகல் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எஹட்டுவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2025 ஏப்ரல் 25 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# காஷ்மீர் தாக்குதல்!

காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கெதிராக இந்தியா பல இராஜதந்திர நடவடிக்கைகளை அறிவித்திருக்கிறது.

அவற்றில் இந்தியா-பாகிஸ்தானிடையேயான அட்டாரி-வாகா எல்லையை உடனடியாக மூடல், சிந்து நதி ஒப்பந்தம் இரத்து, பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் மே முதலாம் திகதிக்குள் இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டும். பாகிஸ்தானுக்கு கடந்த காலத்தில் வழங்கப்பட்ட சுற்றுலா விசாக்கள் தற்காலிகமாக இரத்துச் செய்யப்படும். சுற்றுலா விசாவில் தற்போதுள்ள பாகிஸ்தானியர்கள் 48 மணி நேரத்தில் வெளியேற வேண்டும் ஆகியனவாகும்.

பஹல்காம் தாக்குதல் குறித்து இஸ்லாமாபாத் எந்தத் தலையீட்டையும் மறுத்துள்ளது. ஆனால், ஆரம்ப விசாரணைகள், புவிசார் அரசியல் சூழல், தாக்குதல் நடந்த இடத்தில் பாகிஸ்தானின் பங்கு குறித்து சிறிதும் சந்தேகம் இல்லை என்கிறது இந்தியத் தரப்பு.

இன்று பாகிஸ்தான் கடும் நெருக்கடியில் உள்ள ஒரு நாடு. பல ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் அதன் நோக்கங்களைப் பொறுத்தவரை பாகிஸ்தான் அமெரிக்காவின் முக்கிய பங்காளியாக இருந்தது. இஸ்லாமாபாத்தின் ஆதரவு இல்லாமல் ஆப்கானிஸ்தானில் அமைதி இருக்க முடியாது. 2021இல் காபூலில் இருந்து அமெரிக்கா வெளியேறியதன் மூலம் அமெரிக்கர்களுடன் பாகிஸ்தான் அனுபவித்த செல்வாக்கு குறைந்துவிட்டது. மேலும் மோசமான பொருளாதார நெருக்கடியை பாகிஸ்தான் எதிர்கொண்டுள்ள நிலையில், அமெரிக்கா கடந்த காலங்களில் பலதடவைகள் செய்ததுபோல் பாகிஸ்தானை மீட்க முன்வரவில்லை.

வளைகுடா நாடுகளும் பாகிஸ்தானுக்கு உதவ மறுத்துவிட்டன. பாகிஸ்தானை மீண்டும் முன்னேற்றுவது குறித்து வளைகுடா நாடுகளிடையே சோர்வு நிலவுகிறது. சீனா கூட பாகிஸ்தானின் மீது பொறுமையிழந்துவிட்டதாகத் தெரிகிறது. பட்டுப்பாதைத் திட்ட முன்முயற்சியின் ஒரு பகுதியாக பாகிஸ்தானில் உட்கட்டமைப்பை மேம்படுத்த சீனா பில்லியன் கணக்கான டொலர்களைக் கொட்டியது. ஆனால், பாகிஸ்தானில் சீனாவின் பல திட்டங்கள் இன்றும் முடங்கியுள்ளன.

ஊழல் மற்றும் மோசடி ஒருபுறமிருக்க, வாக்குறுதிகளை நிறைவேற்ற பாகிஸ்தானின் இயலாமையே காரணம் என்கின்றனர் அரசியல் ஆய்வாளர்கள். சமீபத்திய ஆண்டுகளில் பல சீனப் பொறியியலாளர்கள் மற்றும் திட்ட மேற்பார்வையாளர்கள் பலூச் அமைப்பால் கொல்லப்பட்டுள்ளனர். இதனால், இருதரப்பு உறவும் முன்னர் இருந்ததைப் போல இல்லை. பாகிஸ்தான் எதிர்பார்த்த நாடாக ஆப்கானிஸ்தான் இல்லை. மாறாக, அது விரோதமாக மாறியுள்ளது. ஆப்கானிஸ்தானின் எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில் பொதுமக்கள், இராணுவ வீரர்கள் மீது காபூலில் உள்ள தலிபான்கள் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்துகின்றனர்.

ஈரானுடனான பாகிஸ்தானின் உறவும் அவ்வளவு சிறப்பாக இல்லை. கடந்த வாரம் ஈரானின் சிஸ்தான்-பலூச்செஸ்தான் மாகாணத்தில் 8 பாகிஸ்தானிய புலம்பெயர் தொழிலாளர்கள் பலூச் போராளி அமைப்பால் சுட்டுக்கொல்லப்பட்டனர். கடந்த ஆண்டு இரு நாட்டு எல்லையிலுமுள்ள ஆயுததாரிகளின் கூடாரங்கள் மீது ஈரான் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

மொத்தத்தில் பாகிஸ்தானின் பொருளாதாரம் மந்தநிலையில் உள்ளது. அதன் பாதுகாப்பு நிலைமை மோசமடைந்து வருகிறது. சர்வதேச அரங்கில் பாகிஸ்தான் மேலும் மேலும் ஓரங்கட்டப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இஸ்லாமாபாத் பார்வையில், பாகிஸ்தானின் மோசமான சூழ்நிலையை இந்தியா பயன்படுத்தி அதனைத் தனிமைப்படுத்தி ஓரங்கட்டி வருகிறது.

மேலும், வளைகுடாவில் உள்ள மற்ற இஸ்லாமிய நாடுகளுடனான உறவுகளை இந்தியா மேம்படுத்தி வருவதால் பாகிஸ்தான் மௌனப் பார்வையாளராகவே இருந்து வருகிறது. பிரதமர் மோடி சவூதி அரேபியாவுக்குப் பயணம் மேற்கொண்டிருந்தபோது, பஹல்காமில் தாக்குதல் நடந்தமை குறிப்பிடத்தக்கது. இந்தியாவுடனான போர்களின்போது குறிப்பாக, 1971இல் பாகிஸ்தானுக்கு உறுதியான நட்பு நாடாக இருந்தது சவூதி அரேபியா.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் அசிம் முனிர் கடந்த வாரம் 'இரு தேசக் கோட்பாட்டின்' தர்க்கத்தை மீண்டும் மீண்டும் வலியுறுத்தியதன் மூலம் பஹல்காம் தாக்குதல் அர்த்தமுள்ளதாகத் தெரிகிறது. "நமது மதங்கள் வேறு, நமது பழக்கவழக்கங்கள் வேறு, நமது மரபுகள் வேறு, நமது எண்ணங்கள் வேறு, நமது இலட்சியங்கள் வேறு. அதுதான் அங்கு அமைக்கப்பட்ட இரு தேசக் கோட்பாட்டின் அடித்தளம். நாம் 2 நாடுகள், நாம் ஒரு தேசம் அல்ல" - என்று ஏப்ரல் 15 ஆம் திகதி இஸ்லாமாபாத்தில் நடந்த பாகிஸ்தான் மாநாட்டில் ஜெனரல் முனீர் கூறியிருந்தார்.

நெருக்கடியில் உள்ள பாகிஸ்தானுக்கு ஆதரவைத் திரட்ட முயற்சிப்பதைத் தாண்டி, பாகிஸ்தான் தனக்கென ஓர் அடையாளத்தைக் கொண்ட நாடு என்றும் உலகில் தனக்கென ஓர் இடத்தைக் கொண்டுள்ளதென்றும் முனீர் கூறினார். அதைப் புறக்கணிக்கவோ குறைத்து மதிப்பிடவோ முடியாது. தனது அறிக்கைகளில் முனீர் காஷ்மீரையும் குறிப்பிட்டு அது பாகிஸ்தானின் ''கழுத்து நரம்பு'' - என்று குறிப்பிட்டார். "எங்கள் நிலைப்பாடு முற்றிலும் தெளிவாக உள்ளது. காஷ்மீர் எங்கள் கழுத்து நரம்பு. அதை நாங்கள் மறக்க மாட்டோம். காஷ்மீர் சகோதரர்களை அவர்களின் வீரமிக்க போராட்டத்தில் விட்டுவிட மாட்டோம்" - என்று அவர் கூறினார்.

பஹல்காமில் நடந்த தாக்குதல், கடந்த வாரத்தில் முனீர் கூறிய அறிக்கைகளின் நீட்சியாகப் பார்க்கப்படலாம்.

பிரதமர் மோடி சவூதி அரேபியாவிலும் அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் இந்தியாவிலும் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டிருந்தபோது தாக்குதல் நடந்த துல்லியமான நேரம், இது இந்தியாவைப் போலவே உலகின் பிற பகுதிகளுக்கும் ஒரு செய்தி என்பதைக் குறிக்கிறது.

பாகிஸ்தான் இன்னும் பிராந்தியத்தில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது என்பதையும் உலகளாவிய தாக்கங்களுடன் கூடிய ஒரு கடுமையான பாதுகாப்புச் சூழ்நிலையை ஏற்படுத்தும் திறனையும் கொண்டுள்ளது என்பதையும் அதைத் தடுக்க இஸ்லாமாபாத்துடன் தொடர்புகொள்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் உலகம் அறிய வேண்டும் என்று பாகிஸ்தான் விரும்புகிறது.

உலகம் பாகிஸ்தானுக்கு எதிர்மறையாக எதிர்வினையாற்றினாலும் உலக நாடுகள் பயங்கரவாதத் தாக்குதலுக்கு சந்தேகத்துக்கிடமின்றி கண்டனங்களை வெளியிட்டுள்ளன. சர்வதேச அளவில், பாகிஸ்தான் தனிமைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய இந்தியா நிச்சயமாக முயற்சிக்கும். பயங்கரவாதம் என்பது மற்ற நாடுகளைத் தன்னுடன் ஈடுபடக் கட்டாயப்படுத்தும் ஒரு வழி என்று பாகிஸ்தான் நம்பினால், அது நடக்காமல் இருப்பதை இந்தியா உறுதிசெய்யக்கூடும் என்பது தெரிகிறது.

பாகிஸ்தானுக்கெதிராக பழிவாங்குவது தொடர்பான விவகாரத்தில் மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், உணர்ச்சிகள் மற்றும் பொது உணர்வின் அடிப்படையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படக்கூடாது. பாகிஸ்தானை இராஜதந்திரமாகக் கையாண்டு தீவிரவாதத்துக்கு ஆதரிக்கும் அதன் போக்கை அம்பலப்படுத்துவது இந்தியாவின் முதல் வேலையாக இருக்க வேண்டும்.

ஆனால், அரசியலுக்குப் பயன்படுவதாக - மக்கள் ஆதரவைத் தக்கவைத்துக்கொள்ளும் அடிப்படையில் புதுடில்லி தீர்மானங்களை எடுக்கக் கூடாது.



# கற்க வேண்டிய முதல் பாடம்!

**சி.வ.சு.ஜெகஜோதி**

புதுச்சேரி வில்லியனூரில் கணவர் பிரியாணி வாங்கிவர தாமதமானதால் கணவர் மீது கோபித்துக்கொண்ட மனைவி அவர் வருவதற்குள் தனது வீட்டிலிருந்த மின்விசிறியில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டது ஒரு செய்தி. அவர் அதிகமாக சினிமா பார்க்கப் போய்விடுகிறார், அவள் அடிக்கடி உப்புமா தான் செய்கிறாள் என்பன போன்ற காரணங்களுக்காகவும் குடும்ப நல நீதிமன்றங்களில் விவாகரத்து வழக்குகள் நிரம்பிவழியத் தொடங்கி யிருக்கின்றன.

பெற்றோர் பேசி முடித்து திருமணம் செய்துகொண்டவர்களாக இருந்தாலும் காதலித்து திருமணம் செய்தவர்களாக இருந்தாலும் தொடக்கத்தில் அந்நியோன்யமாக இருந்துவிட்டு, பின்னர் எலியும் பூனையுமாக மாறிவிடுகிறார்கள். சரியான புரிதலும் சகிப்புத்தன்மையும் இல்லாததும் தான்தான் பெரியவன் என்ற ஈகோவும் அவர்களுக்குள் அமர்ந்துகொண்டு விட்டுக் கொடுக்காமலும் பொறுமை இல்லாமலும் அவர்களை மாற்றி குடும்ப வாழ்க்கையைக் குலைத்துவிடுகிறது.

இருவரும் சம்பாதிப்பவர்களாக இருந்தும் பொருளாதாரத் தேவைகள் பூர்த்தியாகியிருந்தும் பல குடும்பங்களில் மன நிம்மதி என்பது குறைவாகத்தான் இருக்கிறது.

உலகையே தங்களது செயல்களால் திரும்பிப் பார்க்கவைத்த பல எழுத்தாளர்கள், தலைவர்கள் உட்பட பலரது வாழ்விலும் குடும்ப வாழ்க்கை உருக்குலைந்து போயிருக்கிறது. திருமணமான புதிதில் நகைச்சுவை நாடகங்களை எழுதிய ஷேக்ஸ்பியர் மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்ட பிறகு, துன்ப நாடகங்களை எழுதியிருக்கிறார். பொருளாதாரத்துக்காக நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் மில்ட்டன் மனைவி திருமணமாகி வீட்டுக்கு வந்தபோது, 'இழந்த சொர்க்கம்' என்று எழுதியவர் மனைவி இறந்த பிறகு 'திரும்பப் பெற்ற சொர்க்கம்' என்று எழுதியிருக்கிறார்.

மகாகவி பாரதியார் தனது நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோது அவரது மனைவி அவருக்கருகே வந்து வீட்டில் அரிசி இல்லை என்றாராம். இப்படி சபை நடுவில் வந்து மானத்தை வாங்கிவிட்டாளே என்று பாரதி மனைவியைக் கடிந்துகொள்ளவில்லை. மாறாக, லேசான புன்னகையோடு அவரைப் பார்த்ததும் மனைவி எதுவும் பேசாமல் வீட்டுக்குள் போய்விட்டார். நண்பர்கள் சென்ற பிறகு மனைவியை அழைத்து நண்பர்களுடன் பேசிக்கொண்டிருக்கும்போது, ''இப்படியெல்லாம் பேசக்கூடாது. இங்கிதத்தோடு பேச வேண்டும்'' - என்று அமைதியாகச் சொன்னாராம். அவரும் அன்பாக ''சரி'' என்றாராம். பணத்தைவிட அன்பு நிறைந்த மனம்தான் சிறந்தது என மகாகவி பாரதியும் செல்லம்மாவும் வறுமை நிலையிலும் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை இன்றைய இளம் தம்பதியருக்கு சிறந்த எடுத்துக்காட்டு.

காகம் நமக்கு சிறந்த வாழ்க்கைப் பாடத்தைக் கற்றுத் தருகிறது. மரக்கிளைகளில் கூடுகட்டும்போது ஒரு காகம் சிறு, சிறு குச்சிகளைக் கொண்டுவந்து கொடுத்தால், அதை மற்றொரு இணைக் காகம் சரிபார்க்குமாம். கோல்டன் ஈகிள் என்ற பறவை வேறு துணையை நாடாமல் தன் துணையோடு மட்டுமே 100 ஆண்டுகள் வரை வாழ்கிறதாம். கிளி வகைகளில் இலினோயிஸ் எனும் கிளி தன் துணைக்கிளி இறந்ததும் அதுவும் இறந்துவிடுமாம். பறவைகள்கூட ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுத்து வானில் மகிழ்ச்சியுடன் வட்டமடிக்கின்றன. கணவன்-மனைவி உறவு என்பதும் அன்பின் அடித்தளத்தில் பின்னிப் பிணைந்த, பிரிக்க முடியாத அற்புத உறவு என்பதும் பறவைகளுக்குக்கூட தெரிந்திருக்கிறது. காதலித்து கரம்பிடித்த தம்பதியர்களில் சிலர் பத்தே நாட்களில் விவாகரத்து கேட்டு வீதிக்கு வந்துவிடுவதுதான் கவலையளிக்கும் செய்தி. அதேநேரத்தில், 10 ஆண்டுகளுக்கும் மேலாக பணி நிமித்தமாகப் பிரிந்திருக்கும் தம்பதியர்கூட அந்நியோன்யமாக வாழ்ந்து வருவதையும் காணமுடிகிறது.

கணவர் பார்வையற்றவர் என்று தெரிந்தும் அவர் பார்க்காத உலகத்தை நான் ஏன் காணவேண்டுமென்று கண்களைக் கறுப்புத் துணியால் கட்டிக்கொண்டு கடைசி வரை வாழ்ந்தவர் திருதராஷ்டிரன் மனைவி காந்தாரி. புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மரணமடையப்போகும் நேரத்தில் அருகில் அழுதுகொண்டிருந்த மனைவி சாரதா தேவியிடம், ''அழாதே, நான் மரணமடையப் போவதில்லை, மேல்சட்டையாக இருக்கும் என் உடல்தான் மரணமடையும், நீ என்னைத்தான் மணந்தாய், என் மேல்சட்டையை மணக்கவில்லை'' - என்றாராம் ராமகிருஷ்ண பரமஹம்சர். அவரது மரணத்துக்குப் பிறகு பலரும் வற்புறுத்தியும் தேவியார் விதவையாக மாறவில்லை. நான் விதவையாகி விட்டால் அவர் என்னை விட்டுப் போய்விட்டதாகத்தானே அர்த்தம்? நான் இப்படித்தான் வாழ்வேன் என்று கடைசி வரை அப்படியேதான் வாழ்ந்தார். மரணத்துக்குப் பின்னரும் கணவர் மீது அவர் வைத்திருந்த அசைக்க முடியாத பக்தி அளவிட முடியாததாகவே இருந்தது.

தான் பிறந்த மண்வாசனையை மறந்து, பழகிய பக்கத்து வீட்டு மக்களை, மரம், செடி, கொடிகளை, ஆடு, மாடு, நாய், கோழி ஆகிய அத்தனையையும் மறந்து, பெற்று, படித்து, வளர்த்து, கண்ணை இமை காப்பதுபோல காத்த பெற்றோர்களை விடுத்து, சிறுவயது முதல் ஓடியாடி விளையாடிய உடன்பிறப்புகளையும் நண்பர்களையும் துறந்து, புதிய இடத்துக்கு வாழ்க்கைப்பட்டு வந்திருக்கும் பெண் என்பதை கணவன் எப்போதும் மறந்து விடக் கூடாது. இன்பம், துன்பம் இவற்றில் எதுவும் எந்த உருவத்தில் வந்தாலும் அவற்றைச் சந்திக்க பல ஆண்டுகள் இணைந்து பயணித்து உயிருள்ளவரை நம்மைக் காக்கப் போகும் சுமைதாங்கிதான் கணவன். சுமைகளை இறக்கிவைத்து இளைப்பாற தோள் தரப்போகிறவன் என்பதை மனைவியும் மறந்துவிடக்கூடாது.

சுருக்கமாகச் சொன்னால், கணவன்-மனைவி உறவு என்பது பணத்தால் நிச்சயிக்கப்படுவதில்லை. மனத்தால் நிச்சயிக்கப்பட்டு, பின்னிப் பிணைந்து, இரு உடலாய், ஒரே உயிராய் மாறிவிடுகிறது என்பதே உண்மை. இல்லாமையிலும் இனிய வாழ்க்கை அமைய சரியான புரிதலும் விட்டுக்கொடுத்தலுமே கணவனும் மனைவியும் கற்க வேண்டிய முதல் பாடம்.

## இன்றைய நாளில்...

- 1945 – ஐக்கிய நாடுகள் அவையை நிறுவுவதற்கான ஆலோசனைக் கூட்டம் சான் பிரான்சிஸ்கோவில் 50 நாடுகளின் பங்களிப்போடு ஆரம்பமானது.
- 1954 – முதலாவது செயல்முறை சூரிய மின்கலம், பெல் ஆய்வுகூடத்தில் வெற்றிகரமாகப் பரிசோதிக்கப்பட்டது.
- 1961 – ரொபர்ட் நொய்ஸ் தொகுப்புச் சுற்றுக்கான காப்புரிமத்தைப் பெற்றார்.
- 1983 – பயனியர்-10 விண்கலம் புளூட்டோவின் சுற்றுப்பாதையைத் தாண்டிச் சென்றது.
- 1988 – இரண்டாம் உலகப் போரில் இழைத்த போர்க்குற்றங்களுக்காக ஜோன் டெம்ஜானுக் என்பவருக்கு இஸ்ரேல் மரண தண்டனை விதித்தது.
- 2005 – இத்தாலிய ஆக்கிரமிப்பாளர்களால் 1937இல் களவாடப்பட்ட 1700 ஆண்டுகள் பழைமையான சதுர நினைவுத்தூபியின் கடைசித் துண்டு எத்தியோப்பியாவுக்கு கொண்டுவரப்பட்டது.
- 2006 – கொழும்பில் இராணுவத் தலைமையகத்தில் தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதில் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா படுகாயமடைந்ததுடன், 5 பாதுகாவலர்கள் கொல்லப்பட்டனர்.
- 2015 – நேபாளத்தில் 7.8 ரிச்டர் அளவு நிலநடுக்கம் ஏற்பட்டதில் 9,100 பேர் உயிரிழந்தனர்.

## நக்கல் நமசிவாயம்

*இலங்கை இனப்பிரச்சினைக்கு கூட தீர்வு வரலாம்.. ஆனா இந்த இந்திய பாகிஸ்தான் பிரச்சினை என்றைக்கும் தீரும் வாய்ப்பில்லை போலத்தான் தெரியுது பாருங்கோ...*



# பொலித்தீன் பையுடன் புத்தளத்துக்கு வந்தவர்களின் நிலை மாறியுள்ளது; அனைவர் மீதும் விரைவில் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்

## பிமல் ரத்நாயக்க வவுனியாவில் தெரிவிப்பு

''மன்னாரிலிருந்து புத்தளத்துக்கு பொலித்தீன் பையுடன் வந்தவர்கள் இன்று பத்து கப்பல்களை வாங்கும் நிலையை அடைந்துள்ளனர். டக்ளஸ் எல்லா அரசிலும் அமைச்சராக இருந்தார். நாங்கள் யாரையும் பாரபட்சம் பார்க்கமாட்டோம். பொதுமக்களின் பணத்தை ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம்'' - என சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

வவுனியா, பூந்தோட்டம் பகுதியில் வவுனியா மாநகர சபை வேட்பாளர்களை ஆதரித்து நேற்று முன்தினம் (23) இரவு இடம்பெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாங்கள் எல்லோரும் ஒன்றிணைந்து எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதே உண்மையான அரசியல். உங்களுக்குத் தெரியும், இலங்கையில் சட்டமும் ஒழுங்கும் பெரிய மனிதர்களுக்கு இருக்கவில்லை. அது சாதாரண மக்களுக்காகவே இருந்தது. ஆனால், இன்று அதனை உங்களின் வாக்குகளின் மூலம் மாற்றியுள்ளோம். இன்று மிகப்பெரிய இலஞ்ச ஊழலில் ஈடுபட்ட முதலைகளைப் பிடித்து அவர்களுக்குத் தண்டனை கொடுக்கும் வேலை நடக்கிறது. முன்னொரு காலத்தில் அமைச்சர்களைக் கண்டு பொலிஸார் ஓடி ஒளிந்தார்கள். இன்று பொலிஸுக்குப் பயந்து அமைச்சர்கள் ஓடி ஒளியும் நிலையை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம்.

மன்னாரிலிருந்து புத்தளத்துக்கு பொலித்தீன் பையுடன் வந்தவர்கள் இருக்கின்றனர். இப்போது அவர்களது சொத்துகள் மூலம் பத்து கப்பல்களை வாங்க முடியும். டக்ளஸ் எல்லா அரசிலும் அமைச்சராக இருந்தார். நாங்கள் யாரையும் பாரபட்சம் பார்க்க மாட்டோம். பொதுமக்களின் பணத்தை ஊழல் செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுப்போம். பெரிய முதலைகள் கொழும்பிலேதான் இருக்கிறார்கள். ராஜபக்ஷ மிகப் பெரிய முதலை. நாமல், யோஷித்த ஆகியோருக்கு பொதுமக்களின் பணத்தைச் சூறையாடியதற்காக வழக்குகள் பதிவுசெய்துள்ளோம். எனவே, உங்கள் வாக்குகள் மூலம் நாட்டின் சட்டமும் ஒழுங்கும் நிலை நிறுத்தப்பட்டிருக்கின்றன. நாட்டின் பாதாளக் குழுக்களை உருவாக்கியது ராஜபக்ஷக்களும் விக்கிரமசிங்கக்களும், பிரேமதாசக்களுமே.

முன்பு சோதனைச்சாவடிகளில் பெண்கள் பொட்டு வைத்துச் சென்றால் இரு தடவைகள் சோதனை செய்வார்கள். பொட்டு இல்லாவிடில் ஒரு தடவை செய்வார்கள். முஸ்லிம் மக்கள் என்றால் மூன்று தடவைகள் செய்வார்கள். அதை மாற்றும் செயற்பாட்டை நாம் முன்னெடுத்துள்ளோம்.

நாங்கள் இந்த அரசைப் பொறுப்பேற்று 5 மாதங்களேயாகின்றன. முச்சக்கரவண்டியை வேகமாகத் திருப்பலாம். பேருந்தையும் கப்பலையும் வேகமாகத் திருப்புவது கடினமே. பிழையான வழியில் சென்ற தேசத்தையே திருப்ப நாம் முற்பட்டுள்ளோம். உங்களுக்கும் எனக்கும் கிடைத்தது சொர்க்கமான பூமி அல்ல. வங்குரோத்தான ஒரு நாடு. ரணில் இந்த நாட்டை ஆண்டபோது டொலரின் பெறுமதி காலை




ஒரு விலையிலும் மாலை ஒரு விலையிலும் இருந்தது. இன்று அதில் ஒரு ஸ்திரத்தன்மை காணப்படுகின்றது. உங்கள் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்வதற்கு கொஞ்சக் காலம் எடுக்கும்.

நிலங்களை விடுவிக்கும்போது தெற்கிலுள்ள இனவாதிகளுக்குக் கஷ்டமாக இருக்கும். அதேபோல வடக்கிலும் இனவாதிகள் உள்ளனர். நான்கு மாதத்தில் ஓர் அப்பக்கடையை போடுவதே கடினம். நாங்கள் ஆனையிறவு உப்பு உற்பத்தியை ஆரம்பித்துள்ளோம். அதனை தொடங்கிய பின்னர் சுமந்திரனுக்கு அது பிரச்சினையாக உள்ளது. உப்பு பக்கற்றில் பெயர் பிழையாம். உப்பிலே நீங்கள் பார்ப்பது பெயரையா, சுவையையா?இவ்வாறான சின்ன விடயங்களுக்காக இனவாதத்தைத் தூண்டும் ராஜபக்ஷ போன்ற சகோதரர்கள் வடக்கிலும் உள்ளனர்.

தமிழ்க் கட்சிக்கு வாக்களிக்குமாறு இன்று சொல்கிறார்கள். இலங்கையிலுள்ள மிகப்பெரிய தமிழ்க் கட்சி தேசிய மக்கள் சக்தியே. வன்னி, யாழ்ப்பாணம், நுவரெலியா மற்றும் பதுளை போன்ற மாவட்டங்களிலுள்ள மிகப்பெரிய தமிழ்க் கட்சி தேசிய மக்கள் சக்தியே. சுமந்திரனுக்கான வாக்குகள் யாழில் இம்முறை கிடைக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சியில் ஒருவர் கூட பாராளுமன்றில் இல்லை. சிறீதரன் கிளிநொச்சி வாக்குகளால் வந்தார். இலங்கையிலுள்ள பெரிய முஸ்லிம் கட்சியும் தேசிய மக்கள் சக்தியே. பெரிய சிங்கள கட்சியும் அதுவே.

தெற்கின் கம்மன்பில போன்றோர் வடக்கிலும் உள்ளனர். அரசியல் அநாதைகளாக உருவாகி யிருக்கிறார்கள். அவர்கள் இனவாதத்தை விதைக்கிறார்கள். ஈஸ்டர் தினத் தாக்குதலில் சந்தேகத்தின்பேரில்தான் பிள்ளையானை கைதுசெய்திருக்கிறோம். அவரை கைதுசெய்தவுடன் அவருக்குத் தொலைபேசி அழைப்பில் கதைக்கவேண்டுமென முதலாவதாக முற்பட்டவர் யார் என்று தெரியுமா பிள்ளையானின் மனைவி அல்ல. ரணில் விக்கிரமசிங்க. அவர்கள் இருவரும் நண்பர்களா? ஒருபோதும் இல்லை. கம்மன்பில பிள்ளையானின் சட்டத்தரணியாக ஏன் மாறுகிறார். அவர் ராஜபக்ஷவின் கோளையாள். உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் உண்மையான சூத்திரதாரிகளைக் கண்டறிய விசாரணை நடத்தப்படும்போது ராஜபக்ஷ, ரணில், சஜித் அனைவரும் குழப்பமடைந்துள்ளனர். நாட்டை வளப்படுத்த முற்படும்போது கள்வர்கள் குழப்பமடைந்துள்ளனர்.

யாழில் சுமந்திரனும் கஜேந்திரகுமாரும் எமது வேட்பாளர்கள் தொடர்பாக தேவையில்லாத விடயங்களைச் சொல்லி வருகின்றனர். இப்படியான பொய்களை மக்கள் நம்பவேண்டாம். கிராமத்திலும் தேசிய மக்கள் சக்தி ஆட்சியை அமைப்போம். தமிழரசுக் கட்சிக்கு ஒரு தொன் காசு வழங்கினாலும் வேலை செய்யமாட்டார்கள். வடமாகாண சபையில் நடந்தது உங்களுக்குத் தெரியும். மஹிந்த தெற்கிலே களவெடுத்தார். தேர்தலில் கூறுவார் சிங்கள ஜாதி சிங்கள ஜாதி என்று. சிங்கள மக்கள் வாக்களித்தார்கள். அவர் திறைசேரியை பூச்சியமாக்கினார். வடக்கிலும் அப்படி சிலர் உள்ளனர். எனவே, தேசிய மக்கள் சக்தி உங்களுடைய கட்சி - என்றார்.

# பெண்ணொருவரை கொலைசெய்து பயணப் பொதிக்குள் வைக்கப்பட்ட சடலம்

## 10 வருடங்களுக்குப் பின்னர் குற்றவாளிக்கு மரணதண்டனை



பெண்ணொருவரைக் கொடூரமாகக் கொலைசெய்து கொழும்பு பெஸ்டியன் மாவத்தை பஸ் நிலையத்தில் பயணப் பொதியில் வைத்துச் சென்ற வழக்கில் குற்றவாளியாக நிரூபணமானவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 10 வருடங்களுக்குப் பின்னர் மரணதண்டனை விதித்துள்ளது.

கடந்த 2015 ஜூலை 29ஆம் திகதி கொழும்பு 11, செட்டியார் தெருவிலுள்ள விடுதியொன்றில் இடம்பெற்ற குறித்த கொலைச் சம்பவத்தில் யாழப்பாணம், வட்டுக்கோட்டை பகுதியைச் சேர்ந்த தர்மராஜா கார்த்திகா என்பவரின் உடல் மீட்கப்பட்டிருந்தது.

குறித்த கொலை வழக்கில் சந்தேகநபரான பெட்ரிக் கிருஷ்ணராஜாவை குற்றவாளியென அறிவித்து, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே நேற்று (24) தீர்ப்பளித்தார்.

யாழ்ப்பாணம், நல்லூரைச் சேர்ந்த சந்தேகநபர் கடந்த 2015 ஓகஸ்ட் 05ஆம் திகதி கோவில்குளம் பகுதியில் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

கொலை, சடலத்தை மறைத்தல் உள்ளிட்ட பல பிரிவுகளின் கீழ் கிருஷ்ணராஜா மீது சட்ட மா அதிபரால் குற்றச்சாட்டுகள் பதிவுசெய்யப்பட்டிருந்தன.

நீண்ட விசாரணைக்குப் பின்னர், குற்றச்சாட்டுகளை நியாயமான சந்தேகத்துக்கிடமின்றி அரச தரப்பு நிரூபித்துள்ளதாக நீதிமன்றம் முடிவு செய்தது.

குற்றத்தின் தன்மை மற்றும் அது தொடர்பான விடயங்கள் ஆகியன மரண தண்டனை விதிப்பதை உத்தரவாதம் செய்வதாக இறுதித் தீர்ப்பை வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபெந்திகே சுட்டிக்காட்டினார்.

# மாணவர்களை முழந்தாளிட வைத்த ஆசிரியையை கைதுசெய்ய நடவடிக்கை

(அநுராதபுரம் நிருபர்)

விளையாட்டில் பங்குபற்றாத பாடசாலை மாணவிகள் சிலரை பாடசாலைக் கல்வி நடவடிக்கை முடியும் வரை முற்றத்தில் முழந்தாளிட வைத்த சம்பவத்துடன் தொடர்புடைய ஆசிரியையை கைதுசெய்வதற்காக அநுராதபுரம் மொரகொட பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள் ளனர்.

கெக்கிராவ கல்வி வலயத்திலுள்ள மடவல வித்தியாலய மாணவிகள் சிலர் சுகவீனம் காரணமாக காலை வேளையில் பாடசாலையில் நடைபெறும் விளையாட்டில் பங்குபற்றாத காரணத்துக்காக பாடசாலைக் கல்வி நடவடிக்கை முடியும்வரை முழந்தாழிடப்பட்டார்கள் என்பது விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் 119 பொலிஸ் அவசர அழைப்பு தொலைபேசி இலக்கத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 21ஆம் திகதி திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மொரகொட பொலிஸார் ஆரம்பித்துள்ள நிலையில், கஹட்டகஸ்திகிலிய நீதவான் நீதிமன்றில் நேற்று (24) விடயங்களை முன்வைத்துள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# தலைக்கவசத்துடன் நடமாடினால் விசேட சோதனை

## பொலிஸ் தலைமையகம் அறிவிப்பு

பாதுகாப்பு தலைக்கவசம் அணிந்து சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்துகொள்ளும் நபர்கள் தொடர்பில் சோதனை செய்யப்பட வேண்டுமென அறிவித்து பொலிஸ் தலைமையகம் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவுறுத்தியுள்ளது.

அறிக்கையொன்றை வெளியிட்டு பொலிஸ் தலைமையகம் இதனைத் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் துப்பாக்கிச் சூடு மற்றும் கொலைகள் உள்ளிட்ட பல குற்றங்களைச் செய்த சந்தேகநபர்கள் தலை மற்றும் முகங்களை மறைக்கும் வகையில் தலைக்கவசங்களை அணிந்திருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் செல்லும்போதே தலைக்கவசம் அணிவது கட்டாயம் என்றாலும், அது சாரதி மற்றும் பின்னால் அமர்ந்திருப்பவரின் பாதுகாப்புக்காக மட்டுமே.

எனவே, மோட்டார் சைக்கிளில் பயணிக்காத போது பாதுகாப்பு தலைக்கவசம் அணிந்து சந்தேகத்துக்கிடமான முறையில் நடந்துகொள்வது கண்டறியப்பட்டால், அந்த நபரையும் அவரது உடைமைகளையும் ஆய்வுசெய்யுமாறு அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் தலைமையகம் அறிவுறுத்தியுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# குரங்கு தாக்குதலில் 4 வயது சிறுவன் காயம்




(கலஹா செய்தியாளர்)

விவசாயப் பயிர்களுக்கு குரங்குகள் சேதம் விளைவிப்பது மட்டுமன்றி மனிதர்களைத் தாக்கும் சம்பவங்களும் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு செல்வதைக் காணமுடிகிறது.

கம்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெட்டகெதெனிய பகுதியைச் சேர்ந்த நான்கு வயது சிறுவனொருவன் குரங்கின் தாக்குதலுக்குள்ளாகி கையில் காயமடைந்து கம்பளை தொலுவ ஆயுர்வேத மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சம்பவதினமான நேற்று முன் தினம் (23) குழந்தையின் தாய், வீட்டிலுள்ள கிணற்றுக்கு அருகில் அமைந்துள்ள கற்பாறை மீது சிறுவனை அமர்த்திவிட்டு குளித்துக்கொண்டிருந்தபோது, திடீரென அவ்விடத்துக்கு வந்த குரங்குக் கூட்டம் சிறுவனை தாக்க முயன்றபோது சிறுவன் கற்பாறையிலிருந்து கீழே வீழ்ந்ததில் கையில் முறிவு ஏற்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேவேளை, சில தினங்களுக்கு முன்னரும் கம்பளை, அம்புலுவாவ பகுதியைச் சேர்ந்த ஒருவர் கம்பளை மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவிட்டு காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, குரங்குகள் அவரைத் தாக்கி கையிலிருந்த மருந்துச்சீட்டு உட்பட உடைமைகளைப் பறிக்க முயலும் காட்சி கண்காணிப்புக் கெமராவில் பதிவாகியுள்ளது.

வாழ்வாதாரத்தை சேதப்படுத்தி மனிதர்களுக்கு மிகுந்த தொல்லை கொடுத்துவரும் காட்டு பன்றி, குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்காக தற்போதைய அரசாங்கம் நாடளாவிய ரீதியில் கருத்துக்கணிப்பு மேற்கொண்டுவரும் நிலையில், அதனை தாமதிக்காமல் அமுல்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அதிகரிக்கும் தேர்தல் விதிமீறல்கள்

## இதுவரை 2453 முறைப்பாடுகள் பதிவு

உள்ளூராட்சித் தேர்தலுடன் தொடர்புடைய முறைப்பாடுகளின் எண்ணிக்கையை தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதனடிப்படையில் இதுவரை 2453 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 12 வன்முறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் 131 முறைப்பாடுகள் பதிவாகியுள்ள நிலையில், தேர்தல் குறித்த வன்முறைச் சம்பவம் 01 பதிவாகியுள்ளது எனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் சட்டத்தை மீறியமை தொடர்பான முறைப்பாடுகளே இதுவரை அதிகமாக கிடைக்கப்பெற்றுள்ளன. அது 2266ஆக பதிவாகியுள்ளது.

அதனடிப்படையில் இதுவரையான முறைப்பாடுகளில் 1976 முறைப்பாடுகளுக்கான தீர்வுகள் கண்டறியப்பட்ட நிலையில், 477 முறைப்பாடுகள் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.



Election Commission
MEDIA RELEASE

LAE/2025/68 — 2025.04.24

உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல் - 2025.05.06
தேர்தல் முறைப்பாட்டு சாரம்சக் குறிப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| [illegible] | 00 | 03 | 04 | 07 |
| [illegible] | 01 | 147 | 00 | 148 |
| [illegible] | 01 | 150 | 04 | 155 |

| | | | | |
|---|---|---|---|---|
| [illegible] | 01 | 204 | 34 | 239 |
| [illegible] | 11 | 2062 | 141 | 2214 |
| [illegible] | 12 | 2266 | 175 | 2453 |

| | | | |
|---|---|---|---|
| [illegible] | 239 | 175 | 64 |
| [illegible] | 2214 | 1801 | 413 |
| [illegible] | 2453 | 1976 | 477 |

# வாழ்க்கைப் பாடம்

ஏ.சீ.அகார் முஹம்மத், முதல்வர், ஜாமிஆ நளீமிய்யா கலாபீடம்

## நமது தாய்ப் பண்பாக அன்பு அமையட்டும்!

*இறைவனுடைய திரு நாமங்களில் அல்லாஹ் என்ற நாமத்துக்கு நிகரான சமமான மற்றொரு நாமம் இல்லை. இருந்தால் இருப்பது ஒரேயொரு நாமம்தான். அதுதான் அர்-ரஹ்மான் என்ற நாமம்.*

*இதனை அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.*

*"நீங்கள் அல்லாஹ் என்று அழையுங்கள்; அல்லது ரஹ்மான் என்று அழையுங்கள் என்று நபியே நீங்கள் கூறுங்கள்."*

*ரஹ்மான் என்றால் அளவற்ற அன்பாளன், அருளாளன் என்பது பொருள்.*

*அல்லாஹ்வுக்கு பல பண்புகளும் திருநாமங்களும் இருந்தாலும் அவை அனைத்தையும் மிகைத்த அவனது அடிப்படை பண்பாக விளங்குவது அன்பு என்ற பண்புதான்.*

*நபி (ஸல்) அவர்கள் குணத்தின் குன்றாக, பண்பாட்டின் சிகரமாக இருந்தவர்கள். ஆயினும் அவர்களின் தாய்ப்பண்பாக இருந்தது அன்புதான்.*

*அன்பே உலகை ஆள்கின்றது; ஆள வேண்டும்.*

*எல்லா நற்பண்புகளும் அன்பின் அடியாகப் பிறப்பவைதான். பாசாதல், நட்பு, நேசம், மன்னிப்பு, ஈகை, கொடை, சகிப்புத்தன்மை முதலான எல்லா பண்புகளும் அன்பின் வெளிப்பாடுகளே. மனித உலகமும் மிருக உலகமும் அன்பினால்தான் இயங்கிக்கொண்டிருக்கின்றன.*

*"இறைவன் அன்பை - கருணையை நூறு பாகமாக அமைத்துள்ளான். அவற்றில் தொண்ணூற்று ஒன்பது பாகத்தை தன் வசம் வைத்துக் கொண்டு, ஒரு பாகத்தை மட்டும் பூமியில் இறக்கி வைத்தான். இந்த ஒரு பாகத்திலிருந்துதான் படைப்பினங்கள் தங்களுக்கிடையில் இரக்கம் காட்டி வருகின்றன. குதிரை தமது குட்டியை மிதித்து விடலாமென அஞ்சி தனது கால் குளம்புகளை, அதனை விட்டும் உயர்த்துவதும் அந்த ஒரு பாகத்துக்குட்பட்டதே" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஸஹீஹ் முஸ்லிம்)*

*இந்த வகையில்*

*கணவன் - மனைவி உறவு, பெற்றோர் -பிள்ளை உறவு, உற்றார் - உறவினர்ளுக்கிடையிலான உறவு, ஆசிரிய -மாணவ உறவு, முதலாளி - தொழிலாளி உறவு உட்பட எல்லா மனிதர்களுடனான உறவும் அன்பை அடிப்படையாகக்கொண்டு அமைய வேண்டும்.*

*"அன்பு காட்டுபவரே சுவனம் நுழைவார்" என்று நபியவர்கள் சொன்னபோது தோழர்கள், ''நாங்கள் எல்லோரும் அன்பு செலுத்துபவர்களே" என்றார்கள். அதற்கு அன்னார்,"நீங்கள் உங்களோடு இருப்பவருக்கு காட்டும் அன்பை நான் சொல்லவில்லை. மாறாக, விதி விலக்கில்லாமல் அனைவர் மீதும் காட்டப்படவேண்டிய அன்பையே நான் இங்கு சொல்ல வந்தேன்" என்றார்கள். (தபரானி, ஹாகிம்)*

*எல்லோருக்கும் விதிவிலக்கின்றி அன்பு காட்ட வேண்டும் என்பதை விளக்கும் மற்றும் இரு ஹதீஸ்கள் பின்வருமாறு:*

*"பூமியில் உள்ளவர்களுக்கு அன்பு காட்டுங்கள்; அப்போது வானத்தில் உள்ளவன் உங்களுக்கு அன்பு காட்டுவான்."(அபூ தாவூத், திர்மிதி)*

*"அன்பு காட்டாதவருக்கு அன்பு காட்டப்பட மாட்டாது." (புகாரி, முஸ்லிம்)*

*எனவே, அன்பை எமது தாய் பண்பாக அமைத்துக்கொள்வோம். வீட்டிலும் வீதியிலும் தொழில் பார்க்கும் இடத்திலும் எல்லோரையும் கருணைக்கண்கொண்டு பார்ப்போம்; அன்பாக அணுகுவோம்; பாசத்தோடும் நேசத்தோடும் பழகுவோம்.*

*அன்புள்ளம் கொண்டவர்களே, ஈருலகிலும் அல்லாஹ்வின் அருளை பெறத் தகுதியுடையவர்கள் என்ற பேருண்மையை உணர்ந்து செயற்படுவோம்.*


# பெயர் மாற்றம்

கற்பிட்டி, பள்ளிவாசல்துறை, ஹிஜ்ரா வீதியை வசிப்பிடமாகக்கொண்ட பரசுராமன் செல்லக்கிளி (757944413V) ஆகிய நான் இஸ்லாம் மதத்தைத் தழுவி எனது பெயரை மொஹமட் அப்துல்லாஹ் றைஹானத் பீவி என மாற்றியுள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**மொஹமட் அப்துல்லாஹ் றைஹானத் பீவி**

## வாகன ஏலத்திற்கு — கொட்டாவ

| வாகன இல. | தயாரிப்பு | மாதிரி |
|---|---|---|
| WP BEP-04xx | BAJAJ | CT 100 |
| WP YQ-10xx | BAJAJ | RE 205 |
| WP BHY-26xx | BAJAJ | CT 100 |
| SG BDI-56xx | BAJAJ | DISCOVER 125 |
| WP BDU-60xx | BAJAJ | CT 100 |
| SG BFA-70xx | BAJAJ | DISCOVER 125 |
| WP BEW-79xx | BAJAJ | PULSAR 150 UG 4.5 |
| WP BIR-88xx | BAJAJ | CT 100 |
| WP BFW-89xx | BAJAJ | CT 100 |
| WP BAQ-85xx | BAJAJ | PLATINA |
| WP BIJ-96xx | BAJAJ | CT 100 |
| WP BFD-02xx | HONDA | DIO SCV 110 |
| SP BIH-12xx | HONDA | DIO SCV 110 |
| WP BGQ-14xx | HONDA | DIO SCV 110 |
| WP BIE-14xx | HONDA | DIO SCV 110 |
| NW BEV-15xx | HONDA | DIO SCV 110 |
| WP BDT-04xx | HONDA | DIO SCV 110 |
| WP BGF-17xx | HONDA | DIO SCV 110 |
| WP BEC-36xx | HONDA | DIO SCV 110 |
| WP BGD-41xx | HONDA | DIO SCV 110 |
| WP BFM-46xx | HONDA | DIO SCV 110 |
| WP BFF-46xx | HONDA | DIO SCV 110 |
| NW BGT-49xx | HONDA | DIO SCV 110 |
| WP BED-54xx | HONDA | DIO SCV 110 |
| SG BEO-56xx | HONDA | DIO SCV 110 |
| WP BHU-57xx | HONDA | DIO SCV 110 |
| WP BHF-64xx | HONDA | GRAZIA APPS |
| WP BGP-68xx | HONDA | GRAZIA APPS |
| WP BEN-76xx | HONDA | DIO SCV 110 |
| WP BFF-76xx | HONDA | DIO SCV 110 |
| SP- BGR-79xx | HONDA | DIO SCV 110 |
| WP BGN-81xx | HONDA | DIO SCV 110 |
| CP BIB-78xx | HONDA | DIO SCV 110 |
| WP BHU-85xx | HONDA | DIO SCV 110 |
| WP BGJ-89xx | HONDA | DIO SCV 110 |
| WP BGL-90xx | YAMAHA | RAY-ZR |
| WP BGL-90xx | YAMAHA | FZ - S Ver 2.0 |
| WP BHZ-77xx | YAMAHA | RAY-ZR |
| WP BDH-77xx | YAMAHA | FZ16 |
| WP BHZ-61xx | YAMAHA | RAY-ZR |
| WP BAX-74xx | YAMAHA | FZ16 |
| WP BID-06xx | YAMAHA | RAY-ZR |
| WP BDA-42xx | HERO | DASH VX |
| WP BHS-43xx | TVS | NTORQ |
| WP BHS-70xx | TVS | NTORQ |
| WP BDO-96xx | TVS | METRO |
| WP BIC-60xx | TVS | NTORQ |
| WP BHP-05xx | TVS | NTORQ |
| WP BJA-04xx | TVS | NTORQ |
| WP BIT-16xx | TVS | NTORQ |

**பார்வையிடுதல் கம்பனி வாகன வளாகத்தில் 2025,ஏப்ரல் 26ஆம்,27ஆம் திகதி (மு.ப.8.30மணி முதல் பி.ப.4.00 வரை)**

**இலக்கம்.17/1, பின்ஹேன சந்தி, ஹொரண வீதி, கொட்டாவ**

வாகன சந்தையிலிருந்து எந்தவொரு வாகனத்தையும் முன்னறிவித்தலின்றி அகற்றுவதற்கு நிறுவன முகாமைத்துவத்துக்கு அதிகாரம் உண்டு.

மோட்டார் சைக்கிள் விற்பனைதிகதி: 2025, ஏப்ரல்28ஆம் திகதி காலை 10.30மணி

சுகாதர நடைமுறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்துப்படுகின்றது

நிபந்தனைக்கு உட்பட்டது

விஸ்வா:—0774787096 விதுசர:—0774229302

துரிதஅழைப்பு:—0117308080 வட்ஸ்அப்:— 0710356125

A M ALGEWATHTHA AUCTIONEER

அசோசியேட், மோட்டர்ஸ் பைனேன்ஸ் கம்பனி பிஎல்சி.
தலைமை அலுவலகம், 146, ஹெவ்லொக் வீதி, திம்பிரிகஸ்யாய
தொலைபேசி: 011-5553663

# மாணவர்களுக்கு போஷாக்கு உணவு வழங்கும் திட்டத்திலுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க அரசாங்கம் கொள்கை ரீதியான முடிவு

## ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க





உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கு போஷாக்கான உணவு வழங்கும் திட்டத்துடன் தொடர்புள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு அதனைச் செயற்படுத்த கொள்கை ரீதியான முடிவு எடுத்துள்ளதாக ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துடன் தொடர்புள்ள சகல அமைச்சுகள், அரச நிறுவனங்கள் மற்றும் உலக உணவுத் திட்டம், பில் மற்றும் மிலிண்டா கேட் பௌண்டேசன் மற்றும் பாத் பைண்டர் நிறுவனம் என்பவற்றின் பிரதிநிதிகள் அடங்கலாக தொடர்புள்ள அனைத்துத் தரப்பினர்களுக்கும் இடையில் நேற்று முன்தினம் (23) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க இந்தக் கருத்துகளைத் தெரிவித்தார்.

குறைந்த போஷாக்கு மட்டமுள்ள மாணவர்களுள் மாவட்டங்களில் ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்காக செயற்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டத்துடன் இணைந்ததாக பாடசாலை மாணவர்களிடையே இரும்புச்சத்து குறைபாட்டைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு மற்றும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு, மாகாண சபைகள், உணவு மேம்பாட்டு சபை, உலக உணவுத் திட்டத்துக்கான கூட்டுச் செயலகம் என்பன இணைந்து இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துகின்றன.

மதிய உணவு வழங்கும் திட்டத்துக்கு அரசாங்கம் இந்த வருடத்தில் 32 பில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது. தெரிவுசெய்யப்பட்ட நான்கு மாவட்டங்களில் முன்னோடித் திட்டமாக இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுவதோடு அதன் பெறுபேறு தொடர்பில் சுகாதார மற்றும் போஷாக்குப்பிரிவு முன்னெடுக்கும் முறையான ஆய்வின் பின்னர் இதனை நாடளாவிய ரீதியில் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவதன் ஊடாக பாடசாலை மாணவர்களிடையே இருப்புச் சத்துக் குறைபாடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதா என கண்டறிவது ஆய்வின் நோக்கமாகும்.

குறிப்பாக பாடசாலை மாணவர்களின் இரத்தச் சோகையை நீக்குவதற்காக, இரும்புச்சத்து மற்றும் போலிக் அமிலத்துடன் தயாரிக்கப்படும் செறிவூட்டப்பட்ட அரிசியை (Fortified Rice) பாடசாலை மாணவர்களின் மதிய உணவில் இணைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு பில் மற்றும் மிலிண்டா கேட் பௌண்டேசன் மற்றும் பாத் பைண்டர் நிறுவனம் என்பன தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க உடன்பாடு தெரிவித்தன.

இந்த கலந்துரையாடலில் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி,ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் கபில ஜனக பண்டார, கல்வி அமைச்சின் செயலாளர் நாளக கலுவெல,சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் செயலாளர் வைத்தியர் அனில் ஜாசிங்க, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சின் செயலாளர் மலர்மதி கங்காதரன் உள்ளிட்ட அரச நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் பிரதிநிதிகள் இணைந்துகொண்டனர்.

# இலங்கை தொழுநோயாளர் மறுவாழ்வு சங்கத்தின் வருடாந்த மீளாய்வுக் கூட்டம்





காவேரி கலா மன்றத்தின் வழிகாட்டலில் இலங்கை தொழுநோயாளர் மறுவாழ்வு சங்கத்தின் கிராமமட்ட சங்கங்களின் வருடாந்த மீளாய்வுக் கூட்டமானது யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

கூட்டத்தில் வடகிழக்கு மாகாணங்களில் 22 சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன் 2024ஆம் ஆண்டு தனது சங்கங்களின் செயற்பாட்டு மீளாய்வும் 2025 தொடக்கம் 2026ஆம் ஆண்டுகளுக்கான செயற்பாட்டு விடயங்களும் குறித்து ஆய்வு நடத்தப்பட்டு திட்ட அறிக்கைகளும் திட்ட முன்மொழிவுகளும் முன்வைக்கப்பட்டன. மேலும் மாவட்டமட்ட சங்கங்களின் மாநாட்டுக்கான ஆயத்தப்படுத்தல்கள் நிகழ்வுகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

இலங்கை தொழுநோயாளர் மறுவாழ்வு சங்கம் தேசிய மட்டத்தில் இலங்கை முழுவதும் தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்காக அவர்களின் நலன் சார்ந்த விடயங்களுக்காக மாவட்ட மற்றும் கிராமமட்ட செயற்குழுக்களை அமைத்து அவர்களின் தேவைகளுக்காக சேவைகளை வழங்கி வருகின்றது.

உலக சுகாதார நிறுவனம் தொழுநோயாளர் சங்கங்களின் வினைத்திறனான செயற்பாடு களால் மட்டுமே தொழுநோய் பரவுவது கட்டுப்பாட்டுக்கான ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க முடியும் என்பதை வலியுறுத்தி வருகின்றது.

இந்த அறிவுறுத்தலின் அடிப்படையில்தான் இலங்கை தொழுநோயாளர் சங்கம் தேசிய மற்றும் மாவட்ட மற்றும் கிராம மட்டங்களில் ஏனைய சுகாதார மற்றும் சமூக சேவை அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றி வருகின்றது. இதன் அடிப்படையில் கிராம மட்ட தொழுநோயாளர் மறுவாழ்வு சங்கங்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# பேருவளையில் உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்களை சந்தித்தார் பிரதமர்





(பேருவளை பீ.எம்.முக்தார்)

பேருவளை, சீனன்கோட்டைக்கு நேற்று முன்தினம் (23) மாலை விஜயம் செய்த பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பேருவளை நகர சபை தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களுடன் கலந்துரையாடினார்.

சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ, மக்கள் விடுதலை முன்னணி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, தேசிய மக்கள் சக்தி களுத்துறை மாவட்ட நிறைவேற்றுக் குழு உறுப்பினர் அரூஸ் அஸாத் உட்பட தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்கள் பிரதமருடன் வருகை தந்திருந்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்களும் இதன்போது கலந்து கொண்டனர்.





புத்தாண்டில் நடுவதற்கு ஒரு தென்னங்கன்றை வாங்குமாறு 'மனுஷத் தெரண' மற்றும் சி.பி.எல். சேரா பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்ததன் நிமித்தம், தேசிய மரம் நடும் விழா அண்மையில் பிபிலவில் உள்ள போதிருக்காராமய விகாரையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர், மகா சங்கத்தினர், வர்த்தக, வணிகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு பிரதி அமைச்சர் சமந்த வித்யாரத்ன, பாராளுமன்ற உறுப்பினர் ஜயவர்தன, பிபில உதவிப் பிரதேச செயலாளர் சரத் குமார, பிபில பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, பிபில பிரதேச சபை செயலாளர், உள்ளூராட்சி அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகள் எனப்பலர் கலந்துகொண்டனர்.

# நுவரெலியா தேசிய வெசாக் நிகழ்வுக்கு மாணவர்களின் 5000 வெசாக் கூடுகள்



சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் பாடசாலை மாணவர்களினால் தயாரிக்கப்பட்ட 5000 வெசாக் கூடுகள் நுவரெலியா தேசிய வெசாக் நிகழ்வில் வீதிகளை அலங்கரித்து ஆமிச பூஜையை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் துஷாரி தென்னகோன் தெரிவித்தார்.

இத்தேசிய வெசாக் நிகழ்வு நடத்துவதுடன், சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் உட்பட அனைவரையும் தெளிவு படுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் (23) நுவரெலியா மாவட்ட சர்வதேச பௌத்த மத்திய நிலையத்தில் இடம்பெற்றது.

பஜேத மித்தே கல்யாணே - கலன மிது - ரன் அசுரு கரண்ண எனும் தொனிப்பொருளில் நுவரெலியா தேசிய வெசாக் நிகழ்வை மே மாதம் 10ஆம் திகதி முதல் 16ஆம் திகதிவரை ஒரு வார காலம் முழுவதும் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

# வீழ்ச்சியடைந்துள்ள இறப்பர் உற்பத்தியை மீண்டும் கட்டியெழுப்ப துரித நடவடிக்கை



வீழ்ச்சியடைந்துள்ள இறப்பர் உற்பத்தியை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான தேசிய திட்டத்தின் திட்டங்களை உடனடியாக மேற்கொள்ளுமாறு பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்யாரத்ன உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

நாட்டில் இறப்பர் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களுடன் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்படி, திட்டத்தைப் பற்றி விவாதிக்கவும் அந்தத் திட்டத்தின்படி எதிர்காலத் திட்டத்தைத் தயாரிக்கவும் கூட்டு விவாதம் நடத்தப்பட வேண்டும் என்று அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

இறப்பர் உற்பத்தியை அதிகரிக்க இறப்பர் உற்பத்தியாளர்களின் பங்களிப்பைப் பெறுவதற்குத் தேவையான வேலைத்திட்டத்தை தயாரிக்கவும் அமைச்சர் உரிய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இறப்பர் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருடனும் தனித்தனியாக கலந்தாலோசித்து இறப்பர் உற்பத்தியை மேம்படுத்த முடியாது என்றும் இறப்பர் உற்பத்தி மற்றும் தொழிற்றுறையில் ஈடுபட்டுள்ள அனைவரையும் ஒன்றிணைத்து இந்த நாட்டில் இறப்பர் உற்பத்தியை அதிகரிப்பது குறித்து கூட்டாக கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

கடந்த காலங்களில் இறப்பர் குறித்து எவ்வளவு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற கேள்வியை எழுப்பிய அமைச்சர், எதிர்காலத்தில் குறைபாடுகளைக் குறைத்து இறப்பர் தொடர்பான ஆராய்ச்சியை அதிகரிப்பது அவசியம் என்றும் அமைச்சர் மேலும் சுட்டிக்காட்டினார்.

## மீசாலை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று

சாவகச்சேரி மீசாலை கிழக்கு மீசாலை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய (தெய்வகோயில்) மகா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று (25) வெள்ளிக்கிழமை காலை 08 மணிமுதல் 9.10 மணிவரையுள்ள சுபநேரத்தில் இடம்பெற வுள்ளது.

சிவஸ்ரீ சி.குகராசகுருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ள மகா கும்பாபிஷேகத்தை தொடர்ந்து 12 தினங்கள் மண்டலாபிஷேகமும் மகேஸ்வர பூஜையும் இடம்பெறவுள்ளன.











கொழும்பு 15, மட்டக்குளி புனித ஜோன் மகா வித்தியாலயத்தின் தமிழ், சிங்களப் புத்தாண்டு விழா பாடசாலை அதிபர் ஆர்.உதயகுமார் தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது வட கொழும்பு கோட்டக் கல்விப் பணிப்பாளர் சம்பத் அல்விஸ் நிரோஷன , பிரதி அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் ஏனைய பாடசாலை அதிபர்கள் கலந்துகொண்டனர். இதன்போது அதிபர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

# அமைதியான முறையில் மட்டக்களப்பில் நடைபெற்ற தபால்மூல வாக்களிப்பு





(மட்டக்களப்பு, வீரமுனை, வெல்லாவெளி செய்தியாளர்கள்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்புப் பணிகள் அமைதியான முறையில் திணைக்களங்களில் நேற்று நடைபெற்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள திணைக்களங்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களில் நேற்றுக்காலை தொடக்கம் வாக்களிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பின் புதிய மாவட்ட செயலகம் உட்பட அனைத்து பிரதேச செயலகங்கள், திணைக்களங்களில் நேற்று வியாழக்கிழமை(24) காலை முதல் அரச ஊழியர்கள் வாக்களிக்கும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை 11,554 அரச ஊழியர்கள் தபால்மூலம் வாக்களிப்பதற்குத் தகுதிபெற்றுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டத் தெரிவித்தாட்சி அதிகாரியுமான திருமதி ஜஸ்டினா முரளிதரன் தெரிவித்தார்.

வெள்ளிக்கிழமையும் அரச ஊழியர்கள் வாக்களிக்கமுடியுமெனவும் அதில் தவறுவோர் எதிர்வரும் 28, 29ஆம் திகதிகளில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதேபோன்று, வியாழக்கிழமை காலை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பொலிஸ் நிலையங்களிலும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் வாக்களிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

# கிண்ணியாவில் சுமுகமான முறையில் இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பு






(சீனக்குடா, தம்பலகாமம் செய்தியாளர்கள்)

கிண்ணியா நகரசபை மற்றும் பிரதேசசபை ஆகிய இரு உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தபால் மூல வாக்களிப்பு நேற்று வியாழக்கிழமை (24) காலை ஆரம்பமானது.

கிண்ணியா வலயக் கல்வி அலுவலகம், கிண்ணியா பிரதேச செயலகம் ஆகியவற்றில் காலை 8.30 மணிக்கு, சுமுகமான முறையில் வாக்களிப்பு ஆரம்பமானது.

கிண்ணியா வலயக் கல்வி அலுவலகத்தில் 243 ஊழியர்களும் கிண்ணியா பிரதேச செயலகத்தில் 176 ஊழியர்களும் தபால் மூல வாக்களிப்புக்காக விண்ணப்பித்திருந்தனர். அரச ஊழியர்கள், ஆர்வத்துடன் வாக்களிப்பில் கலந்துகொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

கிண்ணியா நகரசபையின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக 09 அரசியல் கட்சிகளும் பிரதேச சபையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக 11 அரசியல் கட்சிகளும் போட்டியிடுகின்றன. கிண்ணியா நகரசபையில் தேர்தல் மூலம் 08 உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக 27,630 பேரும் கிண்ணியா பிரதேச சபையில் தேர்தல் மூலம் 08 உறுப்பினர்களைத் தெரிவுசெய்வதற்காக 25,154 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 13 உள்ளூராட்சி மன்றங்களிலிருந்தும் மொத்தமாக 136 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இதற்காக 3,19,399 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர். திருகோணமலை மாநகர மற்றும் கிண்ணியா நகரசபை உட்பட, மூதூர், குச்சவெளி, கிண்ணியா, தம்பலகாமம், திருகோணமலை பட்டணமும் சூழலும், கந்தளாய், சேருவில, மொறவெவ, வெருகல், பதவிசிறிபுர, கோமரங்கடவெல ஆகிய பிரதேச சபைகளுமாக மொத்தம் 13 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.




பட்டிருப்பு வலயக்கல்விப் பணிமனையில் தபால்மூல வாக்களிப்பு நேற்று(24) நடைபெற்றது. பட்டிருப்பு வலயக்கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் வலயக்கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் ஆர்வத்துடன் தபால்மூல வாக்களிப்பில் கலந்துகொண்டனர். (பாண்டிருப்பு செய்தியாளர்)



நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு நேற்று (24) இடம்பெற்றது. தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் இடம்பெற்ற குறித்த தபால் மூல வாக்களிப்பில் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டு வாக்களித்தனர். அமைதியான முறையில் இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பில் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர், உதவி தெரிவத்தாட்சி அலுவலர் உள்ளிட்டோரும் கண்காணிப்பில் ஈடுபட்டனர். (கிண்ணியா செய்தியாளர்)

# குஆ எவார்ட்ஸ் கௌரவிப்பு நிகழ்வு




(அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)

கல்முனை இளம் பட்டதாரிகள் அமைப்பால் குஆ எவார்ட்ஸ் எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட கௌரவிப்பு நிகழ்வு ஆஸாத் ப்லாஸா மண்டபத்தில் தலைவர் எம்.எவ்.ஸம்ஹான் பஸீல் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக தென்கிழக்குப் பல்கலைக்கழக பதில் உபவேந்தர் யூ.எல்.ஏ.மஜீத் கலந்துகொண்டதுடன் கௌரவ அதிதியாக கல்முனை பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்ஸார் கலந்துகொண்டார்.

நாட்டிலுள்ள 17 பல்கலைக்கழகங்களில் உயர்கல்வியைத்தொடரும் கல்முனையைச் சேர்ந்த 127 இளம் பட்டதாரி மாணவ மாணவிகள் இந்நிகழ்வில் குஆ எவார்ட்ஸ் நினைவுச்சின்னம் வழங்கி பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் ஊடகவியலாளர்களான அஸ்ஹர் ஆதம் மற்றும் யூ.எம்.றியாஸ் ஆகிய இருவரும் மிக நீண்ட காலமாக ஊடகத்துறையில் ஆற்றிவரும் சேவைக்காகப் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட தென்கிழக்குப் பல்கலைக்கழக பதில் உப வேந்தர் யூ.எல்.ஏ. மஜீத் , கௌரவ அதிதியாகக் கலந்துகொண்ட கல்முனை பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்ஸார் ஆகியோரும் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் கல்விமான்கள், புத்திஜீவிகள் உட்பட மாணவர்களின் பெற்றோர்கள் எனப்பலர் கலந்துகொண்டனர்.



உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று(24) காலை முதல் சகல அரச நிறுவனங்களிலும் ஆரம்பமாகியது. அந்தவகையில், மட்டக்களப்பிலுள்ள சிறைச்சாலை, பொலிஸ் நிலையங்கள் உள்ளிட்ட அரச நிறுவனங்களில் நேற்றுக் காலை 07 மணிமுதல் வாக்களிப்பு இடம்பெற்றது. (காத்தான்குடி மேலதிக செய்தியாளர்)

# ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் வாக்களிப்பு



(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புகள் நேற்று (24) பிரதேச செயலகங்களில் ஆரம்பமாகின. இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

ஆலையடிவேம்பு உதவிப் பிரதேச செயலாளரும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலருமான ஆர்.சுபாகர் தலைமையில் வாக்களிப்பு இடம்பெற்றது.

179 உத்தியோகத்தர்கள் தபால்மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதுடன் இம்முறை வழமைக்கு மாறாக தபால்மூல வாக்களிப்பில் கலந்து கொள்ள உத்தியோகத்தர்கள் அதிக ஆர்வம் காட்டியதையும் காணமுடிந்தது.

மூன்று கட்சிகள் மற்றும் ஒரு சுயேச்சைக்குழு போட்டியிடும் நிலையில் ஆலையடிவேம்பு பிரதேச சபைக்காக 16 பேர் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வாழைச்சேனை அந்-நஹ்ஜதுல் அரபுக்கல்லூரியில் திண்மக்கழிவகற்றல் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு



(கல்குடா செய்தியாளர்)

வாழைச்சேனை அந்-நஹ்ஜதுல் இஸ்லாமியா அரபுக்கல்லூரியில் நீண்டகாலமாக இருந்து வந்த திண்மக்கழிவகற்றல் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

மிக நீண்டகாலமாக நிலவி வந்த குறித்த பிரச்சினைக்கு வாழைச்சேனை வர்த்தக சங்கத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான எம்.எஸ்.றபீக் எடுத்துக் கொண்ட அயராத முயற்சியின் பயனாக தீர்வு எட்டப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் கோறளைப்பற்று, வாழைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் எஸ்.ராஜ்கீதனுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பயனாக இதற்கான தீர்வு எட்டப்பட்டுள்ளது.வாரத்தில் மூன்று தினங்கள் திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுமென பிரதேச சபைச் செயலாளர் உறுதியளித்துள்ளார். இதன் ஆரம்பகட்டமாக நேற்று திண்மக்கழிவகற்றல் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

குறித்த நீண்டகாலப் பிரச்சினைக்கு தீர்வைப்பெற்றுக்கொடுத்த வாழைச் சேனை வர்த்தக சங்கத் தலைவரும் சமூக செயற்பாட்டாளருமான எம்.எஸ்.றபீக் மற்றும் சபைச் செயலாளர் எஸ்.ராஜ்கீதன் ஆகியோருக்கு கல்லூரி நிர்வாகம் நன்றி தெரிவித்துள்ளது.

# பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி, உளச் சுகாதாரக் குழுக் கூட்டம்

(நாவிதன்வெளி செய்தியாளர்)

சம்மாந்துறை பிரதேச மட்ட சிறுவர் அபிவிருத்தி மற்றும் உளச் சுகாதாரக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் (23) பிரதேச செயலாளர் எஸ்.எல். முஹம்மது ஹனீபா தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சிறுவர்களின் உரிமை மேம்பாடு, பெண்கள் உரிமைகள், சிறுவர் உரிமை மீறல், உளவளசார் நடவடிக்கைகள் போன்ற பல்வேறுபட்ட விடயங்கள் சம்பந்தமாக துறைசார் பிரதிநிதிகளிடம் கலந்தாலோசிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் யூ.எம்.அஸ்லம், சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் உள நல வைத்திய நிபுணர் கசூன் கடுவல, சம்மாந்துறை காதி நீதிபதி ஏ.எல்.ஆதம்பாவா, சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் வி.விஜயதாஸ், சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.ஜே.குறைசா, உளவளத்துணை உத்தியோகத்தர் கே.தயாளினி, பொலிஸ் உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார அதிகாரி, வலயக் கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



இந்நிகழ்வில் கருத்து தெரிவித்த பிரதேச செயலாளர், பாடசாலைகளில் இடைவிலகிய மாணவர்கள் மற்றும் வறுமைக்குட்பட்ட சிறுவர்களின் கல்விசார், ஏனைய துறைசார் முன்னேற்றத்துக்கு அதிக கவனம் செலுத்தவேண்டுமென்பதோடு சிறார்களின் பொழுதுபோக்கு அம்சங்களை மேம்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

சிறுவர்களுக்கு மத்தியில் ஏற்படும் பிணக்குகள், பிளவுகளை உடனடியாக பிரதேச செயலகத்தில் கடமைபுரியும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் தீர்த்து வைக்க வேண்டும். அத்துடன் சமூகத்தின் மாறுபாடுகளை சரியாக அவதானித்து பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும். எனவே, சிறுவர்களுக்கான உரிமைகளை முறையாகப் பேணி சிறுவர்களின் கல்வி மேம்பாடு, உள மேம்பாடுகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமெனவும் பிரதேச செயலாளர் குறிப்பிட்டார்.



**இலண்டனை தலைமையகமாக கொண்டியங்கும் இமயம் அமைப்பின் அனுசரணையுடன் அதன் உறுப்பினர் ஒருவரின் பிறந்த தினத்தையொட்டி மட்/பட்/காந்திபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் கல்வி கற்கும் வறிய மாணவரொருவருக்கு துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வு அதிபர் சா.சத்தியசீலன் தலைமையில் நேற்று (24) பாடசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இமயம் அமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் எஸ்.சசிக்குமார், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் பெற்றோர் ஆகியோர் கலந்துகொண்டனர். (பழுகாமம் செய்தியாளர்)**

# மக்கள் தமது ஏக பிரதிநிதிகளாக தே.ம.ச. மீதே நம்பிக்கை வைத்துள்ளனர்

## கந்தசாமி பிரபு எம்.பி.




(மட்டக்களப்பு, குருக்கள்மடம் செய்தியாளர்கள்)

கடந்த காலங்களில் எமக்கெதிராக எதிர்க்கட்சியினர் போலிக் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்தனர். ஆனால், தற்போது நாம் மக்களைச் சந்திக்கின்றபோது மக்கள் தமது ஏக பிரதிநிதிகளாக தேசிய மக்கள் சக்தியிலேயே நம்பிக்கை வைத்திருக்கின்றார்கள் என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்துள்ளார்.

தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிடும் மண்டூர் தம்பலவத்தை வட்டார வேட்பாளர் தேர்தல் அலுவலகம் புதன்கிழமை(23) இரவு பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபுவால் திறந்துவைக்கப்பட்டது.

இதன்போது தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், கட்சிப் பிரதிநிதிகள்,பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் ஆட்சியாளர்கள் செய்த செயற்பாடுகளின் காரணமாக மக்களுக்கு அவர்கள் மீது அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாகத்தான் மக்களுக்கு தேசிய மக்கள் சக்தி மீது அளப்பரிய நம்பிக்கை வைத்துள்ளனர். அந்த நம்பிக்கையை தொடர்ச்சியாக கிராமங்களிலும் பிரதேசங்களிலும் இருக்கின்றது என்பதை நாம் அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருக்கின்ற12 உள்ளூராட்சி மன்றங்களிலும் எமது கட்சி ஆட்சிபீடமேறும். நாம் சட்டத்தை நடை முறைப்படுத்துகின்ற ஆட்சியாளராகவும் மக்களுக்கு சேவை செய்கின்றவர்களாகவும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்து கின்றவர் களாகவும் இருக்கின்றோம்'' - என்றார்.

# நில அளவைத் திணைக்களத்துக்கான கட்டிடம் வழங்கி வைப்பு



(நாவிதன்வெளி செய்தியாளர்)

சம்மாந்துறையில் நில அளவைத் திணைக் களத்துக்கு நிரந்தரமான கட்டிடம் இன்மையால் இதுவரை காலமும் பிரதேச சபைக் கட்டிடத்தில் தற்காலிகமாக இயங்கி வந்தது.

குறித்த கட்டிடத்தில் போதியளவு வசதிவாய்ப் புகள் இல்லாமையால் நில அளவைத் திணைக் களம் சம்மாந்துறை பிரதேச செயலாளருக்கு விடுத்த கோரிக்கைக்கமைய பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபாவின் முயற்சியால் சென்.ஜோன்ஸ் அம்பியூலன்ஸுக்குச் சொந்தமான கட்டிடம் நேற்றுமுன்தினம்(23) நில அளவைத் திணைக்களத்துக்கு பிரதேச செயலாளர் முன்னிலையில் வழங்கிவைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரமவின் ஆலோசனையின் பேரிலும் பிரதேச செயலாளரின் முயற்சியாலும் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் நில அளவைத் திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் ஜி.ஆர்.எல்.பெரேரா, சம்மாந்துறை பிரதேச நில அளவை அத்தியட்சகர் ஏ.எஸ். எம்.நஜாகத், சென். ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் மாவட்ட ஆணையாளர் கெப்டன் எம்.டி.நௌஸாத் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

நில அளவைத் திணைக்களத்துக்கான இக்கட்டிடம் வழங்கப்பட்டதனால் சம்மாந்துறை, இறக்காமம், சென்றல்கேம்ப் போன்ற பிரதேசங் களில் உள்ள பொதுமக்கள் நன்மையடைவார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இறக்காமம் அரபா நகரில் கற்களாலான வீடுகள் அமைக்க அடிக்கல் நாட்டிவைப்பு




(மாளிகைக்காடு செய்தியாளர்)

தேசிய ரீதியாக பல்வேறு சமூகப் பணிகளை மேற்கொண்டு வரும் Sadaqah Bulletin Welfare Foundation நிறுவனத்தால் அம்பாறை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய, அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத இறக்காமம் அரபா நகர், கொக்குலான் கல் மக்களுக்கு கற்களாலான வீடுகள் அமைக்க அடிக்கல் நடப்பட்டது.

ஸதகா புல்லட்டின் மற்றும் பெமிலி ரிலீவ் நிறுவனங்களின் பிரதிநிதியும் பொறியியலாளருமான எம்.சி.கமால் நிஷாத்தின் நெறிப்படுத்தலிலும் தலைமையிலும் நடைபெற்ற இந்நிகழ்வில் தகரக் கொட்டில்களில் உள்ள மக்களின் கஷ்டங்களைப போக்கும் நோக்கில் மூன்று வீடுகளுக்கான அடிக்கல் நடப்பட்டது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலய அதிபர் யூ.எல்.நசார், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள், ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என். ஹுதா, ஆசிரியர் சிப்லி சம்சுதீன், பள்ளிவாசல் தலைவர், ஊர் மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

அம்பாறை மாவட்டம் , இறக்காமம் பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் உள்ள அடிப்படை வசதிகள் எதுவுமில்லாத இந்த அரபா நகர், கொக்குலான் கல் மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் சொல்லிலடங்காதவை. இப்பகுதி மக்களுக்கு மலசலகூட வசதி, மின்சார வசதி, வீதி அபிவிருத்தி, தெருவிளக்கு, மாலை வேளைகளில் உள்ள பாம்புத் தொல்லை, யானைகளின் அட்டகாசம் என பல்வேறு வகையான பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டிய அவசியம் உள்ளதைக் காண முடிகிறது.

எனவே, பொறுப்பு வாய்ந்தவர்கள் அனைவரும் இது தொடர்பில் கரிசனை செலுத்தவேண்டுமென 'தமிழன்' பத்திரிகை ஆய்வுக் கட்டுரையொன்றை வெளியிட்டிருந்தமை குறிப்பிட்டத்தக்கது. அதன் பிரதிபலனாக மேற்படி அடிக்கல் நடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மு.கா. பாலமுனை வேட்பாளர்கள் அறிமுகமும் மக்கள் சந்திப்பும்






(கோணாவத்தை செய்தியாளர்)

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக பாலமுனை பிரதேசத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகமும் மக்கள் சந்திப்பும் அண்மையில் இடம்பெற்றன.

கட்சியின் பாலமுனைப் பிரதேச தேர்தல் குழுத் தலைவர் எஸ்.எம்.நபீல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் கட்சியின் பிரதித் தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, பாலமுனை பிரதேச அமைப்பாளரும் வேட்பாளரு மான ஏ.எல்.எம்.அலியார் உட்பட கட்சியின் உயர்பீட உறுப்பினர்கள், பிரதேச அமைப்பாளர்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இங்கு அமைப்பாளர் அலியார் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில், ''ஆண்டாண்டு காலமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு நூறு வீதம் வாக்களிக்கின்ற ஒரு பிரதேசமாக பாலமுனை பிரதேசம் இருந்து வந்துள்ளது. நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அவ்வாறே வாக்களித்து என்னையும் வெற்றி பெறச்செய்வதன் மூலம் இன, மத வேறுபாடுகளுக்கப்பால் எல்லோரையும் அரவணைத்துக் கொண்டு முடியுமான அபிவிருத்திப் பணிகளையும் வாழ் வாதாரத் திட்டங்களையும் முன்னெடுக்க முடியும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரஊப் ஹக்கீமின் வழிகாட்டலின் கீழ் அதிகமான உள்ளூராட்சி மன்ற சபைகளைக் கைப்பற்றுவதுடன் அட்டாளைச்சேனை பிரதேச சபையை ஸ்ரீல.மு.காங்கிரஸ் கைப்பற்றி ஆட்சியமைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை''- எனத் தெரிவித்தார்.





**தேசிய உற்பத்தித் திறன் விருது வழங்கல் போட்டி - 2025 ஐ முன்னிட்டு அக்கரைப்பற்று பிரதேச செயலக உற்பத்தித் திறன் அபிவிருத்திப் பிரிவினரால் பலவகைப்பட்ட வேலைத்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில், அவ்வேலைத்திட்டத்தின் ஒன்றான சிரமதான நிகழ்வவு புதன்கிழமை (23) நடைபெற்றது. இந்நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரீ.எம்.எம்.அன்ஸார், உதவிப்பிரதேச செயலாளர் றாசீத் யஹ்யா, சமுர்த்தி திட்ட முகாமையாளர் என்.ரீ.மசூர் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் கலந்து கொண்டனர். (மீராநகர் செய்தியாளர்)**

# அனைத்து மக்களுக்குமான நியாயமான அரசியலை தேசிய மக்கள் சக்தி ஊடாகத்தான் சாத்தியமாக்கலாம்

## அக்கரைப்பற்று மாநகர சபை வேட்பாளர் சிராஜ் மசூர்



(அக்கரைப்பற்று செய்தியாளர்)

கடந்த காலங்களில் நிகழ்ந்தது போல ஊழல், அதிகாரத் துஷ்பிரயோகம், மோசடி, குடும்பத்தினரை முற்படுத்தியிருந்த நிலைகள் எல்லாவற்றையும் முடிவுக்கு கொண்டுவந்து எல்லா மக்களுக்கும் ஒரு நியாயமான அரசியலை நாங்கள் கொண்டு வந்து சேர்க்க வேண்டும். இவற்றையெல்லாம் செய்வதற்கு தேசிய மக்கள் சக்தி ஊடாகத்தான் அது சாத்தியமான விடயமாக இருக்குமென அக்கரைப்பற்று மாநகர சபையில் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் சிராஜ் மசூர் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியில் அக்கரைப்பற்று மாநகர சபையில் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அக்கரைப்பற்று கிழக்கு வட்டாரத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், வேறு யாராலும் ஊழலில் தாங்கள் ஈடுபடவில்லையென்று தைரியமாக சொல்ல முடியுமா? கடந்த காலங்களில் எவ்வளவு ஊழல் நடந்திருக்கிறது என்பது நமக்குத் தெரியும். எனவே, நாங்கள் கறைபடியாத கரங்களுடன்தான் வந்திருக்கிறோம். நமது ஜனாதிபதி அக்கரைப்பற்றுக்கு வருகை தந்தபோது நுரைச்சோலை வீட்டுத் திட்டத்தை சரியாக மக்களுக்கு பங்கிடுவோம் என்பதை மீண்டும் உறுதிப்படுத்திச் சொல்லியிருக்கிறார். அது நமக்கான முக்கிய தீர்வுக்கான வழியாகவும் இருக்கிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சரியான தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்கின்ற விடயத்தில் நாங்கள் கவனமாக இருக்கிறோம். அது போல நமது பிரதேசத்துக்கு புட்டம்பையில் இருந்து இடம்பெயர்ந்து வந்திருக்கின்ற மக்களுடைய பிரச்சினை இருக்கிறது. இவை எல்லாவற்றுக்குமான தீர்வுகளை நாங்கள் பெற்றுக் கொடுக்க வேண்டிய மிக அடிப்படையான தேவை இருக்கிறது. இவ்வாறான பல மாற்றங்களை எமது ஊரில் செய்ய வேண்டுமானால் எமது தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்களுக்கு வாக்களித்து வெற்றியடைச் செய்யுங்கள். ஒரு சந்தர்ப்பத்தைவழங்கினால் அதற்கான பலனை நீங்கள் அடைவீர்கள்'' - என்றார்.

# ஒரு கோடி ரூபா செலவில் கொங்கிறீட் இட்டு சம்மாந்துறை பிரதேச வீதிகள் புனரமைப்பு

## முன்னாள் எம்.பி. ஹரீஸுக்கு விவசாயிகள் நன்றி தெரிவிப்பு




(மாளிகைக்காடு செய்தியாளர்)

சம்மாந்துறை மக்களின் நீண்டநாள் பிரச்சினையாகக் காணப்பட்ட குண்டும் குழியுமாகப் பாவனைக்கு பொருத்தமற்றதாக பல வருடங்களாக இருந்த வீதிகளை செப்பனிட்டு மக்களுக்கு கையளிக்கும் நோக்கில் முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ் முயற்சி மேற்கொண்டிருந்தார். இந்நிலையில், ஹரீஸின் டீ-100 திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட சுமார் 05 மில்லியன் ரூபா விசேட நிதியொதுக்கீட்டின் மூலம் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட சம்மாந்துறை மல்கம்பிட்டி மூன்றாம் குறுக்கு வீதி நிறைவுப் பணிகளை கள விஜயம் செய்து முன்னாள் எம்.பி. ஹரீஸ் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து விவசாயிகளினதும் மக்களினதும் பாவனைக்கு உகந்த வகையில் சுமார் 05 மில்லியன் ரூபா விசேட நிதியொதுக்கீட்டின் மூலம் கொங்கிறீட் இடப்பட்டு செப்பனிடப்பட்ட சம்மாந்துறை கிடா முல்லை ஆற்று வீதி நிறைவுப் பணிகளையும் இந்தக் கள விஜயத்தின்போது முன்னாள் எம்.பி. பார்வையிட்டார்.

இதன்போது விவசாயிகளைச் சந்தித்து விவசாய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடியதுடன் அவர்களுக்கு கடந்த பெருவெள்ளத்தில் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டபோதும் வடிகாலமைப்பு, நீர்ப்பாசன குளங்கள் சேதமானபோதும் முன்னாள் எம்.பியால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்கு விவசாயிகள் நன்றியும் பாராட்டும் தெரிவித்தனர்.





**தேசிய உற்பத்தித் திறன் விருது வழங்கல் போட்டி - 2025 ஐ முன்னிட்டு உற்பத்தித் திறன் அபிவிருத்திப் பிரிவால் பல வேலைத்திட்டங்கள் அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்டன. அந்த வகையில், பிரதேச செயலக வளாகத்தில் சிரமதான நிகழ்வு பிரதேச செயலாளர் ரி.எம்.அன்சார் தலைமையில் (24) இடம்பெற்றது. இதில் நிர்வாகப் பிரிவு, சமூகப் பிரிவு, பொதுமக்கள், சேவைப் பணிப் பிரிவு, கணக்குப் பிரிவு மற்றும் 13 பிரிவுகள் என உள் - வெளியில் சிரமதானம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர் மற்றும் செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (திராய்க்கேணி செய்தியாளர்)**

# தமிழன் வணிக உலகம்

Thamilan Business World

www.thamilan.lk businessthamilan@gmail.com

## முதலீட்டுக்கான வழிமுறையை இலகுபடுத்தியுள்ள NDB Wealth இன் Xapp




முதலீடுகளை மேற்கொள்வதற்கான கட்டுப்பாடுகளை அகற்றி, செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளும் வழிமுறைகளை எப்போதும் இல்லாத வகையில் இலகுவில் அணுகக்கூடியதாக மாற்றியமைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட Xapp என்ற, தங்குதடையின்றிய டிஜிட்டல் முதலீட்டுத் தளத்தை NDB Wealth அறிமுகப்படுத்தியுள்ளது. முதலீட்டு வழிமுறைகளின் சிரமம் மற்றும் சந்தையில் நிச்சயமின்மை மற்றும் முதலீடுகளை நிர்வகிப்பதில் சிக்கலான பாரம்பரிய நடைமுறைகள் காரணமாக முதலீடுகளை மேற்கொள்வதற்கு அநேகமானவர்கள் தயக்கம் காண்பிக்கின்றனர். சேமிப்புக் கணக்கைப் போல மிக இலகுவாக முதலீட்டை நிர்வகிக்கச் செய்கின்ற, அறிவுபூர்வமான, பாவனைக்கு இலகுவான அனுபவத்தை வழங்கி மேற்குறிப்பிட்ட தயக்கத்தைப் போக்குவதற்கு Xapp தயாராகவுள்ளது.

எவ்விதமான ஆவண நடைமுறை அல்லது கிளைக்கு நேரடியாக செல்ல வேண்டிய சிரமம் எதுவுமின்றி முதலீட்டாளர்கள் தற்போது Xapp மூலமாக தமது முதலீட்டுப் பயணத்தை ஆரம்பிக்க முடிகின்றது. பாவனையாளர்கள் தற்போது எங்கேயும் எப்போதும் தமது செல்வத்தை கண்காணித்து, நிர்வகித்து மற்றும் அதிகரிப்பதற்கும் இடமளிக்கின்ற முழுமையான டிஜிட்டல் அனுபவத்தை இத்தளம் அவர்களுக்கு வழங்குகின்றது. புதிய முதலீட்டாளர்கள் அல்லது முதலீட்டுச் சந்தையில் அனுபவம் மிக்கவர்களானாலும் NDB Wealth ன் பக்கபலத்துடன் நிதியை நிபுணத்துவத்துடன் நிர்வகிப்பதற்கான அணுகுமுறையை Xapp உறுதி செய்கின்றது.

## 280ஆவது 'செலான் பஹாசர' நூலகம் திறப்பு



செலான் வங்கி, அண்மையில் தனது சமீபத்திய பஹசர நூலகத்தைத் திறந்து வைப்பதன் மூலம், எழுத்தறிவு மற்றும் கற்றலுக்கான உறுதியான அடித்தளத்தை உருவாக்கி இளம் சிறுவர்களின் வாழ்வை தொடர்ந்து மேம்படுத்துகிறது. கொழும்பு பிரஸ்பைடிரியன் பெண்கள் பாடசாலையின் புதிய நூலகத் திறப்பு, இன்றுவரை திறக்கப்பட்ட நூலகங்களின் 280ஆவது அத்தியாயத்தைக் குறிக்கிறது.

2026ஆம் ஆண்டளவில் 300 செலான் பஹசர நூலகங்களை கட்டியெழுப்புதல் என்ற வங்கியின் இலக்கை அடைவதற்கான சமீபத்திய முயற்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் கொழும்பு பிரஸ்பைடிரியன் பெண்கள் பாடசாலையின் புதிய நூலகம், அனைத்து தரப்பினரதும் கற்றல் மற்றும் கல்வியை வளர்ப்பதற்கான வங்கியின் முயற்சிகளை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. 672 மாணவர்களுக்கு பயனளிக்கும் புதிய பஹசர நூலகம், பரந்த பிரிவுகளைச் சேர்ந்த 150 புதிய தொகுதிகளை இலகுவாக அணுகுவதற்கான வாய்ப்பை அவர்களுக்கு வழங்குகிறது. மேலதிகமாக 2 புதிய மடிக்கணினிகள் (laptops), ஒரு பல்லூடகப் படவீழ்த்தி (multimedia projector) மற்றும் ஒரு மேலதிக திரை ஆகியவையும் பாடசாலைக்கு வழங்கப்பட்டுள்ளன.

வாசிப்பு மற்றும் கற்றலின் மகிழ்ச்சியைக் கொண்டாடும் வகையில், 280ஆவது செலான் பஹசர நூலகத்தின் திறப்பு விழாவில் செலான் வங்கி பிஎல்சியின் பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஜயசேகர, கல்வி அமைச்சின் பிரதிநிதிகள், பிரஸ்பைடிரியன் பெண்கள் பாடசாலையின் அதிபர் D T A T K. திசாநாயக்க, துணை அதிபர் B K T. ரத்னகாந்தி, தலைமை மாணவத் தலைவர் பாத்திமா ருகையா, ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு, 2024ஆம் ஆண்டு முதல் பாடசாலையுடனான தொடர் ஒத்துழைப்பின் சமீபத்திய முன்னேற்றத்தைக் குறிக்கிறது. அன்புடன் அரவணைக்கும் வங்கி, டிக்கிரி பொல மற்றும் தரம் 01இற்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான டிக்கிரி பிரசாரம் உள்ளிட்ட பல ஊக்குவிப்பு பிரசாரங்களை செயற்படுத்தி வந்துள்ளது.

கல்வி அமைச்சுடன் இணைந்து செலான் பஹசர திட்டம் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக படிப்படியாக விரிவடைந்து வருகிறது.

## இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபையால் அடுத்த தலைமுறையை உருவாக்கும் திட்டம் அறிமுகம்



இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை (NCE) உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு உதவுவதற்கும் இலங்கையின் ஏற்றுமதிகளை மேம்படுத்துவதற்கும் ஒரு புரட்சிகரமான முயற்சியாக உள்ளூரிலுள்ள வழங்குநர்கள், வணிகத்துறையினர் மற்றும் தொழில்முனைவோரை அனுபவம் வாய்ந்த ஏற்றுமதியாளர்களுடன் இணைக்க வடிவமைக்கப்பட்ட ஒரு விரிவான தொடர்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த முயற்சி ஏற்றுமதி மேம்பாட்டை விரிவடையச் செய்வதற்கும் நாடளாவிய ரீதியில் மறைந்திருக்கும் திறமைகள் மற்றும் வளங்களைப் பயன்படுத்துவதற்குமான இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபையின் (NCE) இலக்கை உள்ளடக்கியதாக அமைகிறது.

சமீபத்திய விரிவாக்கல் முயற்சியின் ஓர் அங்கமாக இலங்கை தேசிய ஏற்றுமதியாளர்கள் சபை (NCE), யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை போன்ற நகரங்கள் மற்றும் அந்த நகரங்களை அண்டிய பகுதிகளுக்கான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த விஜயங்களை மேற்கொண்டிருந்தது. அங்கே 200க்கும் அதிகமான விவசாயத்துறையைச் சேர்ந்தவர்கள், வழங்குநர்கள் மற்றும் சிறிய அளவிலான உற்பத்தியில் ஈடுபட்டிருப்போரை இணைத்துக்கொள்ளும் நோக்கில் இந்த விஜயம் அமைந்திருந்தது. இங்கே இடம்பெற்ற சந்திப்புகளில் பரஸ்பர மற்றும் சுமுகமான கலந்துரையாடல்கள், வாய்ப்புகளை அடையாளம் காணல் போன்றவை குறித்த விடயங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

## E.B. Creasy Solar இனால் SUNGROW சேவை நிலையம் அறிமுகம்






E.B. Creasy & Co., PLC நிறுவனத்தின் புதுப்பிக்கத்தக்க வலுப் பிரிவான E.B. Creasy Solar, தனது SUNGROW Service Center மற்றும் E.B. Creasy Solar வாடிக்கையாளர் பராமரிப்பு நிலையத்தை 2025 மார்ச் 12 ஆம் திகதி திறந்து வைத்தது. இல. 525, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 எனும் முகவரியில் இந்த நிலையம் அமைந்துள்ளது. இந்நிகழ்வில் E.B. Creasy Solar மற்றும் SUNGROW பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர். வாடிக்கையாளர் உதவி மற்றும் சேவைச் சிறப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதில் இந்த நிலையம் முக்கிய பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது. வினைத்திறன், தங்கியிருக்கும் திறன் மற்றும் புத்தாக்கம் ஆகியவற்றில் உறுதியான கவனத்தைச் செலுத்தும் வகையில் இந்தப் புதிய நிலையத்தினூடாக E.B. Creasy Solarஇன் வாடிக்கையாளர்களுக்கு நவீன சோலர் தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவ உதவிகளைப் பெற்றுக்கொடுக்கும் அர்ப்பணிப்பு மீள உறுதி செய்யப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கையை புத்தாக்கமான வலு நுகர்வை நோக்கி கொண்டு செல்லும் பயணத்தில் முக்கிய பங்காகவும் இது அமைந்துள்ளது.

## 3 ஆவது தடவையாக SME வர்த்தக கண்காட்சியை நடத்திய கொமர்ஷல் வங்கி





கொமர்ஷல் வங்கியானது அண்மையில் கொழும்பில் நடத்திய கண்காட்சியானது சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதாக அமைந்திருந்தது. இதற்கிணங்க கொழும்பில் கொமர்ஷல் வங்கி ஏற்பாடு செய்த ஒரு தனித்துவமான வர்த்தக கண்காட்சியில் இலங்கை முழுவதிலுமிருந்து சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்களை (SMEs) பிரதிநிதித்துவப்படுத்தும் சுமார் 200 தொழில்முயற்சியாளர்கள் தமது தயாரிப்புகள் மற்றும் சேவைகளைக் காட்சிப்படுத்தவும் விற்பனை செய்யவும் இந்தக் கண்காட்சியானது வழிவகுத்தது.

BMICH இல் உள்ள 'நுகசெவன'வில் நடைபெற்ற மூன்று நாள் கண்காட்சியில் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிசார் (SMEs) வர்த்தகத்தின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அரங்குகள் நிறுவப்பட்டிருந்தன. இதில் SME மற்றும் நாட்டின் விவசாயத் துறைக்கு சேவைகளை வழங்கும் பல நிறுவனங்களும் பங்கேற்றன. அதேவேளை, தொழில்துறை தொழில்நுட்ப நிறுவனம் (ITI) மற்றும் தேசிய பொறியியல் ஆய்வு மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERDC) ஆகியவை இந்த நிகழ்வில் அவற்றின் சொந்த அரங்குகளைக் கொண்டிருந்தன.

கண்காட்சியாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு ஆலோசனை வழங்கும் பொருட்டு கொமர்ஷல் வங்கி, பிரதிநிதிகள் மற்றும் தொழில்துறை அபிவிருத்திச்சபை (IDB), ஏற்றுமதி அபிவிருத்திச்சபை (EDB), இலங்கை நிலையான எரிசக்தி அதிகாரசபை (SLSEA) மற்றும் மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை (CEA) போன்ற அரசாங்க நிறுவனங்கள் இணைந்து தொழில்துறை உதவி நிலையமொன்றை இங்கு அமைத்திருந்தன.

தொழில்முயற்சியாளர்களுக்கு உதவி மற்றும் ஆதரவை வழங்குவதற்காக கொமர்ஷல் வங்கி ஏற்பாடு செய்திருந்த SME வர்த்தகக் கண்காட்சியின் மூன்றாவது கண்காட்சி நிகழ்வு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## SLARDAR ஏற்பாட்டில் எட்டாவது தடவையாக இடம்பெறவுள்ள ஸ்ரீ லங்கா சூப்பர் சீரிஸ் 2025



இலங்கையின் மிக முக்கியமான மோட்டார் விளையாட்டுத் தொடரான Sri Lanka Super Series - 2025 இன் எட்டாவது தொடர் BET SS.COM இன் பிரதான அனுசரணையுடன் ஏப்ரல் 23 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கை மோட்டார் பந்தய சாரதிகள் மற்றும் ரைடர்ஸ் சங்கத்தால் (SLARDAR) ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இத்தொடரானது, விளையாட்டுத் துறையைச் சேர்ந்த பல்வேறு அனுசரணையாளர்கள் மற்றும் ஆதரவாளர்களின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாகன பந்தய வீரர்களினதும் ரைடர்களினதும் எதிர்பார்ப்பு மிக்க ஒரேயொரு தேசிய போட்டித் தொடராக விளங்கும் இத்தொடரானது, நாட்டின் முக்கியமான மற்றும் விறுவிறுப்பான மோட்டார் பந்தயங்கள் நடைபெறுகின்ற ஒரேயொரு உயர்தரமான போட்டித் தொடராகும். இதில் நாட்டின் சிறந்த திறமையான வாகன பந்தய வீரர்களும் ரைடர்களும் கலந்துகொள்வதோடு, போட்டியாளர்களையும் பார்வையாளர்களையும் கவரும் ஒன்றாகவும் விளங்குகின்றது. இப்பந்தயங்களை தொலைக்காட்சியிலும் யூடியூப் உள்ளிட்ட சமூக வலைத்தளங்களிலும் நேரலையில் காணவும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## CPM ஸ்ரீ லங்கா நிறுவன விருதுகள் - 2025 இல் JXGக்கு உயர் கௌரவிப்பு



JXG (ஜனசக்தி குழுமம்) பன்முகப்படுத்தப்பட்ட குழும நிறுவனங்களுக்கான சிறந்த முகாமைத்துவ செயற்பாடுகள் நிறுவனம் (BMPC) 2025 விருதை சுவீகரித்தது. இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வை இலங்கை பட்டய நிபுணத்துவ முகாமையாளர் நிறுவகத்தால் (CPM ஸ்ரீலங்கா), வினைத்திறனான முகாமைத்துவ மூலோபாயங்களினூடாக வியாபார நிலைபேறாண்மை மற்றும் வளர்ச்சி போன்றவற்றுக்காக நிறுவனங்களின் அர்ப்பணிப்பைக் கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஒழுங்கமைக்கப்பட்ட, அதிகம் தாக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி முன்னேற்றகரமான பணியிட கலாசாரத்தை JXG நிறுவியுள்ளமையை குறிக்கும் வகையில், பணியிட உற்பத்தித்திறனை மேம்படுத்துவதில் குழுமம் காண்பிக்கும் முயற்சிகளை உறுதி செய்யும் வகையில் BMPC விருது அமைந்துள்ளது.

Mireka டவர்ஸுக்கு குழுமம் மாற்றப்பட்டதிலிருந்து JXG யால் திறந்த அலுவலக முறைமை நடைமுறைப்படுத்தப்பட்டதுடன், ஊழியர்களின் ஈடுபாடு மற்றும் உற்பத்தித்திறன் அதிகரிப்புக்காக இணைந்து செயலாற்றக்கூடிய ஹைபிரிட் பணிச் சூழல் உருவாக்கப்பட்டிருந்தது. இணைந்த செயற்பாடு, ஆக்கத்திறன் மற்றும் வினைத்திறன் ஆகியவற்றை ஊக்குவிக்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட JXG இன் பணியிட மாற்றியமைப்புத் திட்டத்தின் வெற்றிகரமான பூர்த்தியை இந்த விருது எடுத்துக்காட்டுகிறது.

## விற்பனையாளர்களுக்கு அங்கீகாரமளிப்பதில் புதிய தராதரத்தை நிலைநாட்டியுள்ள ஹட்ச்







மிகவும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட Kahawanu Udanaya என்ற விற்பனையாளர்களுக்கு வெகுமதியளிக்கும் முயற்சியின் முதலாம் கட்டத்தை, ஹட்ச் ஸ்ரீலங்கா நிறுவனம் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது. நாடெங்கிலுமுள்ள தனது மதிப்புமிக்க விற்பனையாளர் வலையமைப்பின் அர்ப்பணிப்பை அங்கீகரித்து, அவர்களை மேம்படுத்தி, பாராட்டும் முகமாக ஹட்ச் நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ள நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாம் கட்டத்தின் ஒரு முக்கியமான தருணமாக இந்தச் சாதனை மாறியுள்ளது. வெறுமனே ஒரு கொண்டாட்டம் என்பதற்குமப்பால் அர்த்தமுள்ள வழியில் ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டங்களை அறிமுகப்படுத்தல், மிகச் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியவர்களுக்கு அங்கீகாரமளித்தல் மற்றும் பகிரப்பட்ட வளர்ச்சிக்கான கலாசாரத்தை வளர்த்தல் ஆகியவற்றினூடாக தனது விற்பனையாளர்களுக்கு வலுவூட்டுவதில் ஹட்ச் நிறுவனத்தில் ஆழமாக வேரூன்றியுள்ள நம்பிக்கைக்கு இம்முயற்சி மிகச் சிறந்த சான்றாகும். Kahawanu Udanaya மூலமாக, விற்பனையாளர்களின் வெற்றிகளைப் பாராட்டும் அதேசமயம், தனது முன்னோக்கிய பயணத்தின் முக்கிய பாகமாக நாடளாவிய ரீதியில் தனது வலையமைப்பை மேலும் வலுப்படுத்துவதே ஹட்ச் நிறுவனத்தின் நோக்கம்.

## புத்தாண்டுப் பாரம்பரியத்தை கொண்டாடிய அலியான்ஸ் லங்கா




இலங்கையின் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றாகவும் சர்வதேச அளவில் முன்னணி காப்புறுதி நிறுவனமான Allianz SE இன் உறுப்பு நிறுவனமுமான அலியான்ஸ் லங்கா – ஆழமான அர்த்தத்தை நமக்குக் கற்பிக்கும் புத்தாண்டுப் பாரம்பரியத்தை உற்றார் உறவினருடன் கொண்டாடி மகிழ, தமது வீடுகளுக்கு பிரயாணித்தவர்களுக்கு ஆதரவளித்தது.

## 5 பயங்கரவாதிகள் - 3 இடங்கள் - 10 நிமிட துப்பாக்கிச் சூடு; பதறவைக்கும் பஹல்காம் தாக்குதல்

# உலகின் எந்த மூலையில் இருந்தாலும் பயங்கரவாதிகளை வேரறுப்போம்!!

### பாரத பிரதமர் மோடி ஆவேசம்

## இந்தியாவிலிருந்து வெளியேற பாகிஸ்தானியர்களுக்கு 48 மணிநேர கெடு

பஹல்காம் தாக்குதலுக்குக் காரணமான பயங்கரவாதிகள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் கண்டுபிடித்து வேட்டையாடுவோம் - என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உறுதியளித்துள்ளார்.

பீஹாரில் இடம்பெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் மோடி மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். நிகழ்ச்சியில், உரையாற்றும் முன் பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் அனைவரும் மௌன அஞ்சலி செலுத்துமாறு பிரதமர் மோடி கேட்டுக்கொண்டார். இதனையடுத்து உரையாற்றிய பிரதமர் மோடி,

''கார்கில் முதல் குமரி வரை வாழும் மக்கள் துக்கப்படுகிறோம். பஹல்காம் தாக்குதலால் நாடே கொந்தளிக்கிறது. பயங்கரவாதிகளை கட்டாயம் தண்டிப்போம். நாட்டில் பயங்கரவாதத்தை மொத்தமாக வேரறுப்போம். இந்தத் துயரமான நேரத்தில் எங்களுடன் துணை நிற்கும் பல்வேறு நாடுகளின் தலைவர்களுக்கு நன்றி.



காஷ்மீர் தாக்குதல் தொடர்பாக பயங்கரவாதிகளுக்கு கனவிலும் நினைத்திராத அளவுக்கு தண்டனை கொடுக்கப்படும். பயங்கரவாதத் தாக்குதலால் நாடு முழுவதும் மக்கள் சோகத்துடனும் வலியுடனும் உள்ளனர். பாதிக்கப்பட்ட குடும்பங்களுடன் நாங்கள் துணை நிற்கிறோம். பயங்கரவாதிகள் ஒவ்வொருவரையும் அவர்களுக்கு உதவியவர்களையும் இந்தியா கண்டறியும். அவர்களது செயலுக்கு உரிய தண்டனை வழங்கியே தீரும்.

பயங்கரவாதத் தாக்குதலால் இந்தியா துவண்டு போகாது. அவர்கள் கனவிலும் நினைத்திராத தண்டனை கொடுக்கப்படும். காஷ்மீரில் தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் கண்டுபிடித்து வேட்டையாடுவோம். இன்று பீஹார் மண்ணிலிருந்து இந்த உலகத்துக்குச் சொல்கிறேன். பயங்கரவாதிகள் மண்ணோடு மண்ணாகும் நேரம் வந்துவிட்டது. பயங்கரவாதிகள் இருந்த இடம் தெரியாமலாக்கிவிடுவோம்'' - இவ்வாறு தெரிவித்துள்ளார்.

#### பாகிஸ்தானியர்களின் விசா இரத்து

காஷ்மீர் தாக்குதலின் எதிரொலியாக பாகிஸ்தானியர் களுக்கான விசா சேவையை நிறுத்தி வைத்துள்ள இந்திய மத்திய வெளியுறவு அமைச்சு, ஏற்கனவே வழங்கப்பட்ட அனைத்து விசாக்களையும் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் இரத்துச்செய்வதாகவும் அறிவித்துள்ளது. அதேபோல், பாகிஸ்தான் சென்றுள்ள இந்தியர்கள் அனைவரும் உடனடியாக தாயகம் திரும்ப உத்தரவிட்டுள்ளது.

பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுடனான உறவுகளைத் துண்டித்துக்கொள்வதாக இந்தியா அறிவித்துள்ளது. சார்க் கூட்டமைப்பு நாடுகளுக்கான விசா விதிவிலக்கு பாகிஸ்தானுக்கு இரத்துச்செய்யப்படுகிறது. அந்த விசாவில் வந்து இந்தியாவிலிருக்கும் பாகிஸ்தானியர்கள் 48 மணிநேரத்தில் வெளியேற வேண்டுமென அதிரடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வாகா - அட்டாரி எல்லையை உடனடியாக மூடவும் பாகிஸ்தானைச் சேர்ந்த எவருக்கும் இந்தியாவுக்குள் பயணம் செய்ய அனுமதி கிடையாது. வாகா - அட்டாரி எல்லை வழியாக பாகிஸ்தானியர்கள் எவராவது வந்திருந்தால், தகுந்த ஆவணங்களைக் காட்டி மே முதலாம் திகதிக்குள் திரும்பவும் இந்திய மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்நிலையில், இந்த உத்தரவைப் பின்பற்றி இந்திய மத்திய வெளியுறவுத் துறை அமைச்சு பல அதிரடி உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. இதன்படி

★ பாகிஸ்தானியர்களுக்காக வழங்கப்பட்டு வந்த விசா சேவை உடனடியாக நிறுத்தி வைக்கப்படுகிறது.

★ ஏற்கனவே வழங்கப்பட்டு பாகிஸ்தானியர்களுக்கு இந்தியா வழங்கிய விசா அனைத்தும் எதிர்வரும் 27ஆம் திகதி முதல் இரத்துச்செய்யப்படும்.

★ மருத்துவ காரணங்களுக்காக வழங்கப்பட்ட விசா அனைத்தும் எதிர்வரும் 29 வரை மட்டுமே செல்லுபடியாகும்

★ இந்தியாவிலுள்ள பாகிஸ்தானியர்கள் அனைவரும் விசா காலாவதியாகும் முன்னர் நாட்டை விட்டு வெளியேற வேண்டும்.

★ பாகிஸ்தான் செல்வதை இந்தியர்கள் தவிர்க்க வேண்டும்.

★ பாகிஸ்தானில் வசிக்கும் இந்தியர்கள் உடனடியாக தாயகம் திரும்ப வேண்டும்.

இவ்வாறு அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் தங்கியுள்ள பாகிஸ்தானியர்கள் ஏராளமானோர், தங்கள் நாட்டுக்குத் திரும்ப வாகா - அட்டாரி எல்லையில் குவிந்துள்ளனர்.

#### பாகிஸ்தான் அரசின் எக்ஸ் தளப்பக்கம் இந்தியாவில் முடக்கம்

பாகிஸ்தான் அரசின் எக்ஸ் சமூக வலைத்தள பக்கம் இந்தியாவில் முடக்கப்பட்டுள்ளது. காஷ்மீர் தாக்குதலைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் வேண்டுகோளை ஏற்று எக்ஸ் தள நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது என பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

பாதுகாப்புத் துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், ஜம்மு-காஷ்மீரில் பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலைத் தொடர்ந்து பல்வேறு கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இரு நாடுகளுக்குமிடையிலான சர்வதேச எல்லைப் பகுதி, எல்லைக் கட்டுப்பாட்டு கோடு அமைந்துள்ள இடங்களில் கண்காணிப்பு முழுவீச்சில் மேற்கொள்ளப்படுகிறதெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

#### தாக்குதலையடுத்து நடவடிக்கை

பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலையடுத்து ஜம்மு-காஷ்மீரின் பல்வேறு பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா ஜம்மு-காஷ்மீர் சென்று தாக்குதல் நடைபெற்ற இடத்தை ஆய்வுசெய்து பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்துப் பேசியுள்ளார். பிரதமர் மோடி, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் ஆலோசனை நடத்தினர்.

பின்னர் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், அட்டாரி - வாகா எல்லை மூடல், இந்தியாவிலுள்ள பாகிஸ்தானியர்கள் வெளியேற உத்தரவு, இந்தியாவுக்கு பாகிஸ்தானியர்கள் வரத் தடை, பாகிஸ்தானிலுள்ள இந்தியத் தூதரகம் மூடல் என நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி அட்டாரி- வாகா எல்லையிலிருந்து பாகிஸ்தானியர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறி வருகின்றனர்.


#### சிந்து நதிநீர்ப் பகிர்வு ஒப்பந்தம் நிறுத்தம்

இந்தியா - பாகிஸ்தான் இடையே நடந்த மூன்று போர்களின்போதுகூட, மனிதாபிமான அடிப்படையில் நிறுத்தப்படாத சிந்து நதிநீர் பகிர்வு ஒப்பந்தம், பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து நிறுத்தப்பட்டுள்ளது.

எல்லை தாண்டிய பயங்கரவாதத்துக்கு ஆதரவளிப்பதைப் பாகிஸ்தான் நம்பத்தகுந்த வகையில் கைவிடும்வரை 1960ஆம் ஆண்டு சிந்து நதிநீர் பகிர்வு ஒப்பந்தம் நிறுத்திவைக்கப்படுகிறதென்று மிகக் கடுமையான முடிவை மத்திய அரசு அறிவித்துள்ளது.

இந்தியாவின் மேற்குப் பகுதியில் பாயும் சிந்து, ஜீலம், செனாப் நதிகள் மற்றும் அதன் கிளைகள் மீது இந்தியா அமைத்திருக்கும் அணைகள் மற்றும் சிறு அணைக்கட்டுகளிலிருந்து விடுவிக்கப்படும் தண்ணீர் உடனடியாக நிறுத்தப்படும். ஆனால், இயற்கையாக பாய்ந்தோடும் ஆற்று நீர் ஓடிக்கொண்டுதான் இருக்கும். ஆனால், அணைகளிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீர் நிறுத்தப்படுவதால், பாகிஸ்தானின் நான்கு மாகாணங்களில் இரண்டு மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்படும். வரவிருப்பது கோடைக்காலம். தண்ணீர் அதிகம் தேவைப்படும் நேரத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டிருப்பதால், வேளாண்மை மற்றும் குடிநீர்த் தேவைக்கான தண்ணீர் இரண்டு மாகாணங்களுக்குக் கிடைப்பதில் சிக்கல் ஏற்படும் எனக் கூறப்படுகிறது

#### பயங்கரவாதிகள் குறித்த தகவலளிப்போருக்கு சன்மானம்



பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதல் நடத்தியவர்களின் பெயர்களை வெளியிட்டுள்ள ஜம்மு - காஷ்மீர் மாநில பொலிஸார் அவர்கள் குறித்து துப்பு கொடுப்பவர்களுக்கு ரூ.20 இலட்சம் (இந்திய ரூபாபடி) வெகுமதி வழங்கப்படுமென்று அறிவித்துள்ளது.

பஹல்காம் - பைசரன் பள்ளத்தாக்கில் குழுமியிருந்த சுற்றுலாப் பயணிகள் மீது, தடை செய்யப்பட்ட லஷ்கர்-இ-தொய்பா எனும் பயங்கரவாத அமைப்பின் நிழல் அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் (TRF) கடந்த 22ஆம் திகதி தாக்குதல் நடத்தியது. இச்சம்பவத்தில் 26 பேர் கொல்லப்பட்டனர், பலர் படுகாய மடைந்தனர். இந்தத் தாக்குதல் சம்பவம் குறித்து ஜம்மு-காஷ்மீர் பொலிஸார் வழக்குப் பதிவுசெய்து விசாரணை நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு உதவுவதற்காக இந்திய தேசிய புலனாய்வு அமைப்பும் (என்ஐஏ) களத்தில் இறங்கியுள்ளது. பயங்கரவாதிகளைத் தேடும் பணியில் இராணுவமும் ஈடுபட்டுள்ளது.

இந்நிலையில், பயங்கரவாதத் தாக்குதலில் ஈடுபட்ட பயங்கரவாதிகளின் வரைபடங்கள் மற்றும் பெயர்களை ஜம்மு - காஷ்மீர் பொலிஸார் நேற்று (24) வெளியிட்டனர். ஆதில் உசேன் தோக்கர் (அனந்த்நாக் பகுதியில் வசிப்பவர்), ஹாஷிம் மூசா என்கிற சுலைமான், அலி பாய் என்கிற தல்ஹா பாய் என மூன்று பயங்கரவாதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். தப்பியோடிய இந்தப் பயங்கரவாதிகள் குறித்த தகவலளிப்போருக்கு ரூ.20 இலட்சம் வெகுமதி அளிக்கப்படும் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர்.

#### தமிழகத்திலிருந்து பாகிஸ்தானியர் வெளியேற்றம்

பஹல்காம் தாக்குதலையடுத்து இந்தியாவிலுள்ள பாகிஸ்தானியர்கள் வெளியேற மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கு தொழில், வர்த்தகம், மருத்துவ ரீதியாக வந்த பாகிஸ்தானியர்களின் விபரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தானியர்கள் எத்தனை பேர் தமிழகத்தில் உள்ளனர் என்ற தகவல்களைப் பொலிஸார் சேகரித்து வருகின்றனர். இந்நிலையில், இன்றைக்குள் (25) தமிழகத்திலிருந்து பாகிஸ்தானியர்களை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஜம்மு - காஷ்மீர் எல்லையில் முப்படைகளும் தயார் நிலையிலிருக்க உத்தரவிடப்பட்டுள்ளது. இந்நிலையில், கராச்சி கடற்கரை மற்றும் அதனை ஒட்டிய பகுதியில் ஏவுகணை சோதனையை நடத்த பாகிஸ்தான் அரசு உத்தரவிட்டுள்ளது.

கராச்சி கடலோரப் பகுதியில் தரையிலிருந்து இலக்கை தாக்கி அழிக்கும் ஏவுகணை சோதனை நடத்த பாகிஸ்தான் திட்டமிட்டிருப்பதாக ஏஎன்ஐ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது. பாகிஸ்தானின் நடவடிக்கைகளை நாட்டின் அனைத்து அமைப்புகளும் உற்றுக் கவனித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாகிஸ்தானின் போர் விமானங்களை எல்லையில் நிலைநிறுத்த உத்தரவிடப்பட்டுள்ளதாக வெளியான தகவலைத் தொடர்ந்து போர்ப் பதற்றம் எழுந்துள்ளது.

பாகிஸ்தான் போருக்குத் தயாராக இருக்கிறோம் என்பதை சுட்டிக்காட்டும் விதமாக இந்த ஏவுகணை சோதனையை நடத்த முடிவு செய்துள்ளதா என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்தியா ஒருவேளை இராணுவ நடவடிக்கை எடுத்தால் எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து பாகிஸ்தான் ஆலோசித்து வருவதாகச் சொல்லப்படும் நிலையில், பாகிஸ்தான் இந்தச் சோதனையை நடத்தியிருக்கிறது.

#### வான்வெளியைப் பயன்படுத்த இந்திய விமானங்களுக்குத் தடை: பாகிஸ்தான்

பஹல்காம் தாக்குதலையடுத்து பாகிஸ்தான் மீது இந்தியா கடும் நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில், பதிலுக்கு இந்தியா மீதும் பாகிஸ்தான் சில நடவடிக்கைகளை அறிவித்துள்ளது. இந்தியாவுடனான அனைத்து வகை வர்த்தகங்களையும் நிறுத்த பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது. மேலும், பாகிஸ்தானின் வான்வெளியைப் பயன்படுத்த இந்திய விமானங்களுக்கு தடை விதித்து உத்தரவிட்டுள்ளது.

தொடர்ந்து, இந்தியாவுடன் ஒப்பந்தத்தை நிறுத்தி வைக்கும் உரிமையைப் பயன்படுத்தவும் முடிவு செய்துள்ளது. பாகிஸ்தானிலுள்ள இந்திய தூதரகத்தில் அதிகாரிகளின் எண்ணிக்கை 30ஆக குறைக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது. இந்தியாவுக்கு சார்க் நாடுகள் விசா வழங்குவதையும் நிறுத்த பாகிஸ்தான் முடிவு செய்துள்ளது.



பஹல்காம் தீவிரவாதத் தாக்குதலில் உயிரிழந்த சுற்றுலாப் பயணிகளின் உடல்களுக்கு உள்துறை அமைச்சர் அமித் ஷா மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தியபோது....

#### கடற்பரப்பில் இந்தியா ஏவுகணை சோதனை

இந்திய கடற்பரப்பில் ஏவுகணை சோதனையை இந்தியா மேற்கொண்டது. கடல்சார் இலக்குகளை துல்லியமாக குறிவைத்து தாக்கும் ஏவுகணை சோதனை வெற்றியடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவிலிருக்கும் பாகிஸ்தானியர்கள் 48 மணிநேரத்துக்குள் வெளியேற வேண்டுமென கெடு விதிக்கப்பட்டது. இதனால் பீதியடைந்த பாகிஸ்தான், கராச்சி கடலோரப் பகுதியிலிருந்து ஏவுகணை சோதனை நடத்த உத்தரவிட்டுள்ளது.

இதற்கிடையே பயங்கரவாதிகளை எதிர்கொள்ள இந்தியா தயார் நிலையில் இருக்கவேண்டுமென முப்படைகளுக்குப் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் அறிவுறுத்தியுள்ளார். இந்நிலையில், நேற்று (24) இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ். சூரத் போர் கப்பலிலிருந்து துல்லியமான கடல்சார் இலக்குகளை அழிக்கும் ஏவுகணை சோதனை நடத்தப்பட்டது. இந்தச் சோதனை தற்போது வெற்றிபெற்றுள்ளது.

கராச்சி கடற்பகுதியில் பாகிஸ்தான் ஏவுகணை சோதனை நடத்த உத்தரவிட்டிருந்த நிலையில், இந்தியா சோதனை நடத்தியமை பேசுபொருளாகியுள்ளது. பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பாகிஸ்தான்தான் காரணமென இந்திய மத்திய அரசு குற்றஞ்சாட்டி வருகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

#### பாகிஸ்தானில் ஏவுகணை சோதனை

பஹல்காம் தாக்குதலால் கடும் கோபமடைந்த இந்தியா, பாகிஸ்தானுக்கு எதிரான நடவடிக்கையை தீவிரமாக்கியுள்ளது. இதனிடையே, மத்திய உள்துறை அமைச்சின் அலுவலகத்தில் உள்துறை செயலாளர், உளவுத் துறை இயக்குநர், ரோ அமைப்பின் தலைவர் முக்கிய ஆலோசனையில் ஈடுபட்டுள்ளனர்.

#### பஹல்காமில் நடந்தது என்ன?

காஷ்மீருக்குச் செல்லும் சுற்றுலாப் பயணிகள் முதன் முதலாக பார்க்க ஆர்வத்துடன் இருக்கும் பஹல்காமின் பைசரன் பள்ளத்தாக்கை தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் தெரிவுசெய்தது ஏன்?, அப்பகுதியில் பயங்கரவாதிகள் எப்படி நுழைந்தனர் என்பது குறித்து பரபரப்புத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கோடை காலங்களில் நாளொன்றுக்கு சுமார் 2000 சுற்றுலாப் பயணிகள் வரை வரக்கூடிய மினி சுவிட்சர்லாந்து என அழைக்கப்படக்கூடிய பைசரன் பள்ளத்தாக்கில் இராணுவ வீரர்கள் பாதுகாப்புக்கு இருக்கமாட்டார்கள் என்பதால்தான் தீவிரவாதிகள் அங்கு சென்று வெறியாட்டம் ஆடிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரிலிருந்து சுமார் 90 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ளது பஹல்காம். காஷ்மீரில் தேனிலவு, விடுமுறையைக் கழிக்க விரும்புவோரின் முதல் தெரிவாக பஹல்காம் உள்ளது. ஸ்ரீநகரிலிருந்து பஹல்காம் செல்லும் வழியில் வரிசையாக அப்பிள் தோட்டங்களைப் பார்க்க முடியும். பஹல்காம் முழுவதும் பைன் மரக்காடுகளைக்கொண்டது. இந்த பைன் மரங்கள்தான் 'கிரிக்கெட் பெட்'கள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இதனால் பஹல்காமுக்குள் நுழைந்ததுமே 'கிரிக்கெட் பெட்' தயாரிக்கும் ஆலைகளை அதிகம் காண முடியும்.

பஹல்காம் நகருக்குள் நுழைந்ததும் வரிசையாக குதிரைகள்தான் நம்மை வரவேற்கும். ஏனென்றால், பஹல்காமிலிருந்து 'மினி சுவிட்சர்லாந்து' என அழைக்கப்படும் பைசரன் பள்ளத்தாக்குக்கு குதிரை மூலம் மட்டுமே செல்ல முடியும். வாகனங்களை நிறுத்தும் இடத்திலிருந்து சுமார் 5 கிலோ மீற்றர் வரை மலையேறிச் சென்றால்தான் பைசரன் பள்ளத்தாக்கை அடைய முடியும். செங்குத்தாகவும் ஒழுங்கற்ற வீதியுடனும் சேறும் சகதியுமாக பாதை இருக்கும் என்பதால் குதிரைகள் மூலம் மட்டுமே அங்கு செல்ல முடியும்.

2019ஆம் ஆண்டு காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து இரத்துச்செய்யப்பட்டு இந்திய மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்கு வந்தது முதல் தீவிரவாதச் சம்பவங்கள் குறைக்கப்பட்டதால் பஹல்காமுக்கு சுற்றுலாப்பயணிகள் வருகை அதிகரிக்கத் தொடங்கியது. தொடக்கத்தில் மலை ஏறும் பகுதியிலும் பைசரன் பள்ளத்தாக்கிலும் இராணுவம் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தது. ஆனால், காஷ்மீரில் அமைதி முழுவதுமாக திரும்பிய பின்னர் பைசரன் பள்ளத்தாக்கில் மட்டும் இராணுவம் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், இப்பகுதிக்கு கடந்த செவ்வாய்க்கிழமை (22) சென்ற சுற்றுலாப் பயணிகள் புல்வெளியில், தங்கள் நெருக்கமானவர்களுடன் இயற்கையை ரசித்துக்கொண்டு புகைப்படம் எடுத்துக்கொண்டு குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்த நேரத்தில்தான் எவரும் எதிர்பாராத அந்தக் கொடூரச் சம்பவம் நடந்துள்ளது.

இராணுவ வீரர்கள் இருக்கமாட்டார்கள் என்பதை தெரிந்துகொண்ட பைசரன் பள்ளத்தாக்கு பைன் மரக்காடுகளுக்குள்ளிருந்து தீவிரவாதிகள் வெளியே வந்துள்ளனர். அவர்களைத் தடுக்க அங்கு எவரும் இல்லாத சூழலில் சுற்றுலாப் பயணிகளை வரிசையாக நிற்க வைத்து ஆண்கள், பெண்கள் எனப் பிரித்து அவர்களின் மதத்தைத் தெரிந்துகொண்டு இஸ்லாமியர்கள் அல்லாதோரை நெற்றியில் சுட்டு தீவிரவாதிகள் கொலை செய்துள்ளனர்.

பைசரன் பள்ளத்தாக்குப் பகுதியில் செல்போன் கோபுரங்களும் கிடையாது. இதனால்தான் சுற்றுலாப் பயணிகள் உடனடியாக தங்களுக்கு உதவி கேட்டு எவரையும் அங்கிருந்து செல்போனில் தொடர்புகொள்ள இயலவில்லை. இந்த நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு வெறியாட்டம் ஆடிய தீவிரவாதிகள் 26 பேரை கொலை செய்துவிட்டு மீண்டும் பைன் மரக்காடுகளுக்குள் சென்று தப்பியுள்ளனர்.

தீவிரவாதிகளுக்கு உள்ளூர் வியாபாரிகள் மற்றும் சுற்றுலா வழிகாட்டிகள் தரப்பிலிருந்து எதிர்ப்பு எழுந்த காரணத்தால்தான் 26 பேரை மட்டும் கொலை செய்துவிட்டு அவர்கள் தப்பியதாகச் சொல்லப்படுகிறது. உள்ளூர் மக்கள் எதிர்ப்பு இல்லையென்றால் நூற்றுக்கணக்கானோர் கொலை செய்யப்பட்டிப்பார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தாக்குதல் குறித்த விசாரணையில், பாதுகாப்புத் துறை வட்டாரங்கள் சில தகவல்களை வெளியிட்டுள்ளன. அதன்படி, சுற்றி அடர்ந்து காணப்பட்ட பைன் மரங்களுக்கிடையே இருந்து, நேரம் பார்த்துக் காத்திருந்த பயங்கரவாதிகள், மக்கள் அதிகமுள்ள மூன்று இடங்களைத் தெரிவு செய்திருக்கின்றனர்.

பின்னர் திடீரென கையில் ஆயுதங்களுடன் அந்த மூன்று இடங்களை அடைந்து சுற்றுலாப் பயணிகள் மீது சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர். பெண்கள், குழந்தைகளை விட்டுவிட்டு ஆண்களை மட்டும் சுட்டுக் கொன்றுள்ளனர்.

சரியாக பிற்பகல் 1.50 மணிக்கு துப்பாக்கிச் சூடு தொடங்கி 10 நிமிடம் நடைபெற்றுள்ளதாகவும் 5 பேர் இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், இந்தக் கொடூரத் தாக்குதலைப் பதிவுசெய்ய தங்கள் உடையில் பயங்கரவாதிகள் கெமரா வைத்திருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. துப்பாக்கிச் சூடு நடத்திய பின்னர், பயங்கரவாதிகள் அடர்ந்த மரங்கள் இருக்கும் பகுதியை நோக்கி ஓடிவிட்டதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியிலிருந்து 3 கிலோமீற்றர் தொலைவில்தான் பொலிஸ் சோதனைச் சாவடியுள்ளது. இதுதொடர்பான வீடியோ காட்சிகளும் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

இந்தக் கொடூரத் தாக்குதலில் வெளிநாட்டவர்கள் 2 பேர் உட்பட 26 பேர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்படுகிறார் ஜனாதிபதி

## பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான்

*(பொகவந்தலாவ, மஸ்கெலியா நிருபர்கள்)*



''ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தேர்தல் காலங்களில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து எதிர்க்கட்சித் தலைவர் போன்று செயற்பட்டு வருகிறார்''- என பாராளுமன்ற உறுப்பினர் ஜீவன் தொண்டமான் கூறினார்.

நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட டிக்கோயா, வனராஜா, போடைஸ், பட்டல்கள, கெர்கர்ஸ்வோல்ட் மற்றும் மோரா ஆகிய பகுதிகளில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டங்கள் பாராளுமன்ற உறுப்பினரும் இ.தொ.கா. பொதுச்செயலாளருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் நேற்றுமுன்தினம் (23) இடம்பெற்றன. அதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

''தேர்தல் காலங்களில் இந்நாட்டின் ஜனாதிபதி மக்கள் மத்தியில் பல்வேறு வாக்குறுதிகளை முன்வைத்திருந்தார். ஆனால், தற்போது அவர் வாக்குறுதிகளை மறந்து எதிர்க்கட்சித் தலைவர் போன்று செயற்பட்டு வருகின்றார்.

தேர்தல் காலங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜனாதிபதி கணிசமான சம்பள அதிகரிப்பை வழங்குவதாக உறுதியளித்து வரவு - செலவுத்திட்ட வாசிப்பிலும் தெரிவித்திருந்தார். ஆனால், தற்போது அனைத்தையும் மறந்து தோட்டக் கம்பனிகளுடன் கலந்துரையாடி முடியுமான அளவு 1,700 ரூபா நாட்சம்பளத்தை பெற்றுக்கொடுக்க முயற்சிப்பதாக அறிக்கை விடுத்துள்ளார். இதனை ஏமாற்று நாடகமாகவே புரிந்துகொள்ள வேண்டும்.

நான் அமைச்சராக இருந்த காலப்பகுதிகளில் ஒதுக்கப்பட்ட நிதியினூடாக என்னால் முடிந்தளவு வேலைகளை மக்கள் நலனுக்காகச் செய்திருந்தேன்.

தற்போது ஜனாதிபதியால் வரவு - செலவுத் திட்டத்தினூடாக மலையகப் பெருந்தோட்டப் பகுதிகளுக்கான நிதியொதுக்கீட்டில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடத்தில் நாங்கள் அரசாங்கத்தில் இருந்தபோது அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் பெருமளவான நிதியொதுக்கீடு மேற்கொண்டிருந்ததை யாரும் மறந்துவிட முடியாது''- என்றார்.

இக்கூட்டங்களில் இ.தொ.கா. பிரதித் தலைவர் கணபதி கனகராஜ், நோர்வூட் பிரதேச சபை முன்னாள் தலைவர் குழந்தைவேல் ரவி, குறித்த பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், காரியாலய உத்தியோகஸ்தர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

# பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து எந்த உதவிக்கும் எங்களை அணுகலாம்

## தயாராக இருக்கிறோம் என்கிறார் பசறைத் தொகுதி அமைப்பாளர் லெட்சுமனார் சஞ்சய்



"பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து எந்த உதவிக்கும் எங்களை அணுகலாம். நாங்கள் உதவத் தயாராக இருக்கிறோம்" - என ஐக்கிய மக்கள் சக்தியின் பசறைத் தொகுதி அமைப்பாளர் லெட்சுமனார் சஞ்சய் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், அமெரிக்கா இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான வரியை அதிகரித்துள்ளது. இதனால் பொருளாதாரம் பாதிப்படையும்.

ஏனெனில், இந்தப் பிரச்சினையை தீர்க்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையின் முக்கிய எதிர்பார்ப்பு அடுத்த ஆண்டு ஐரோப்பாவுக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் தொடர்பான உடன்படிக்கையை அரசாங்கம் முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டும். ஆனால், இன்னும் இது பூர்த்திசெய்யப் படவில்லை. ஜி. எஸ். பி. பிளஸ் குறித்து ஆராய்வதற்காக குழுவொன்று இலங்கைக்கு வரவுள்ளது. இலங்கை உட்பட ஐந்து நாடுகள் ஜி.எஸ்.பியை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. அது பொருளாதார வளர்ச்சியில் பின்னடைவை ஏற்படுத்தும்.

இச்செயற்பாடானது பாரிய பொருளாதாரப் பின்னடைவை ஏற்படுத்தும். உலக வங்கிப் பிரிவு இயக்குனர் டேவிட் சிஸ்லான் இலங்கையின் பொருளாதாரம் எதிர்பார்த்ததை விட வலுவாக மீண்டு வருகிறது என்றார்.

– சுமார் மூன்றில் ஒரு பங்கு மக்கள் வறுமையில் உள்ளனர். எனவே அரசாங்கம் பொருளாதார வளர்ச்சியில் கவனஞ்செலுத்த வேண்டும்.

ஆனால், அரசாங்கம் பொருளாதாரத்தில் கவனஞ்செலுத்தவில்லை. இந்நிலையில் நாடு மீண்டும் திவாலாகும் சாத்தியம் உள்ளது. நாங்கள் நாட்டை ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். மேலும் அரசாங்கம் பொருளாதாரத்தை மேம்படுத்த எடுக்கும் அனைத்து முயற்சிகளுக்கும் நாங்கள் உதவத் தயாராக இருக்கிறோம்" - என்றார்.

# போடைஸில் மூதாட்டி துஷ்பிரயோகம்: எதிர்ப்புத் தெரிவித்து மக்கள் போராட்டம்!





*(பொகவந்தலாவ நிருபர்)*

டிக்கோயா, போடைஸ் தோட்டப் பகுதியில் 74 வயது மூதாட்டியொருவர் 24 வயது இளைஞர் ஒருவரால் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டார் எனக் கூறப்படும் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து போடைஸ் பிரதேச மக்கள் நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

குற்றவாளிகளுக்கு தக்க தண்டனை வழங்குமாறு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷமெழுப்பினர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்துக்குச் சென்ற ஹட்டன் பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களைச் சந்தித்து சம்பவம் தொடர்பாகத் தெளிவுபடுத்தினர். பின்னர் அவர்கள் கலைந்து சென்றனர்.

இந்நிலையில் குறித்த சந்தேக நபர் கடந்த திங்கட்கிழமை (22) கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் மே மாதம் 04ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஏப்ரல் 20 ஆம் திகதியே மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஐஸ் போதைப்பொருளுக்கு அடிமையான இளைஞனொருவனே மூதாட்டியின் வீட்டுக்குள் புகுந்து அவரை வன்கொடுமைக்கு உட்படுத்தியுள்ளார் எனக் கூறப்படுகின்றது.பாதிக்கப்பட்ட 74வயது மூதாட்டி கிளங்கன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

# சென்.மேரிஸ் கல்லூரியின் இல்ல விளையாட்டுப் போட்டி










*(பொகவந்தலாவ நிருபர்)*

ஹட்டன் கல்வி வலயத்துக்குட்பட்ட பொகவந்தலாவ சென்.மேரிஸ் தேசிய கல்லூரியின் வருடாந்த இல்ல விளையாட்டுப்போட்டி நேற்றுமுன்தினம் (23) கல்லூரி அதிபர் ஏ.வேலுசாமி தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் அதிதிகளாக ஹட்டன் வலயக் கல்விப் பணிப்பாளர் ஆர்.விஜேந்திரன், உதவிக் கல்விப் பணிப்பாளர் நாகராஜ், கோட்டக் கல்விப் பணிப்பாளர் சிவகுமார், நிதியுதவியாளர் நீல்ரோய் , அயல் பாடசாலையின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது பேண்ட்வாத்தியத்தோடு அதிதிகள் பாடசாலை மைதானத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

இந்நிகழ்வில் முதலாம் இடத்தை சோலன் இல்லமும் இரண்டாம இடத்தை பாண்டியன் இல்லமும் மூன்றாம் இடத்தை சேரன் இல்லமும் பெற்றுக்கொண்டன.

வெற்றிபெற்ற இல்லங்களுக்கு அதிதிகளால் கேடயங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது .

# கரிக்கட்டுமூலை கிழக்கில் தமிழரசு பரப்புரை

## ரவிகரன் எம்.பி. பங்கேற்பு





*(விஜயரத்தினம் சரவணன்)*

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று உள்ளூர் அதிகார சபைக்குட்பட்ட கரிக்கட்டுமூலை கிழக்கு வட்டாரத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் தேர்தலில் போட்டியிடும் மிக்கேற்பிள்ளை ஜோன்சன் மோகனராஜாவின் தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் நேற்று முன்தினம் (23) இடம்பெற்றன.

இத்தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கலந்துகொண்டார்.

அந்தவகையில், கரிக்கட்டுமூலை கிழக்கு வட்டாரத்தின் கீழ் காணப்படும் செம்மலை கிழக்கு(நாயாறு), செம்மலை, அளம்பில், உடுப்புக்குளம் ஆகிய கிராமங்களில் இவ்வாறு தேர்தல் பரப்புரைக்கூட்டங்கள் இடம்பெற்றன.

இதன்போது தமிழரசுக்கட்சிக்கு மக்கள் வாக்களிக்கவேண்டிய அவசியம் தொடர்பில் பேசப்பட்டதுடன், தமிழரசுக் கட்சியை அமோக வெற்றியடையச் செய்யவேண்டுமெனவும் வலியுறுத்தப்பட்டது. மேலும், கிராமங்களிலுள்ள குறைபாடுகள், பிரச்சினைகள் தொடர்பிலும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனின் கவனத்துக்கு மக்களால் கொண்டுவரப்பட்டது. மக்களால் தெரியப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் தம்மால் கவனஞ்செலுத்தப்படுமென பாராளுமன்ற உறுப்பினர் இதன்போது தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் தபால் மூல வாக்களிப்பு ஆரம்பம்



*(சி.திவியா)*

எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகள் நாடளாவிய ரீதியில் நேற்று (24) முதல் ஆரம்பமாகியுள்ளன.

அந்தவகையில், தபால் மூலம் வாக்களிப்பதற்காக 24, 25, 28, 29 ஆகிய தினங்களைத் தேர்தல் ஆணைக்குழு ஒதுக்கியுள்ளது. இதனையடுத்து வவுனியா மாவட்டத்தில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகிய வாக்களிப்புச் செயற்பாடுகள் சுமுகமாக நடைபெற்று வருகின்றன.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இராணுவத்தினர், ஆசிரியர்கள் ஆகியோர் நேற்று தமது தபால் வாக்குகளை அளித்திருந்தனர்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் தபால் மூலம் வாக்களிப்பதற்கு 5,550 பேரும் முல்லைத்தீவில் 3,807 பேரும் மன்னாரில் 3,792 பேருமாக வன்னி தேர்தல் மாவட்டத்தில் 13,149 பேர் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழில் கிராம அலுவலர்களுக்கான தேர்தல் முன்னாயத்த செயலமர்வு



*(பு.கஜிந்தன்)*

எதிர்வரும் மே மாதம் 06ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் தொடர்பாக இரண்டாம் கட்ட கிராம அலுவலர்களுக்கான முன்னாயத்த செயலமர்வானது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் (23) மு.ப.10.00 மணிக்கு நடைபெற்றது.

இதன்போது தலைமையுரையாற்றிய தெரிவத்தாட்சி அலுவலர்,

நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்கள் நீதியாகவும் சுமுகமாகவும் நடைபெற்றதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய கிராம அலுவலர்களுக்கு தான் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் எதிர்வரும் மே மாதம் 06 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் வாக்களிப்பு நிலையத்துக்குப் பொறுப்பாக நியமிக்கப்படும் சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர்கள், அந்தந்தப் பிரிவுக்குரிய கிராம அலுவலர்கள் வழங்கும் பங்களிப்பும் ஒத்துழைப்பும் மிகவும் முக்கியமானதும் அத்தியாவசியமானதுமெனத் தெரிவித்தார்.

இம்முறை வட்டாரத்திலேயே வாக்கெண்ணல் அமையவுள்ளதால் வாக்கெண்ணல் நிலையங்களையும் அமைக்கும் பொறுப்புகள் கிராம அலுவலர்களுக்கு உள்ளதால் பௌதீகச் சூழல் மற்றும் புறச்சூழல் போன்றவற்றைக் கருத்திலெடுத்து வினைத்திறனான பங்களிப்பை வழங்குமாறு கேட்டுக்கொண்டார்.

மேலும், கடந்த இரண்டு தேர்தல்கள் கடமைகளில் ஈடுபட்ட கிராம அலுவலர்கள் எதிர்நோக்கிய இடர்பாடுகள் மற்றும் கருத்துகளையும் தெரிவத்தாட்சி அலுவலர் கேட்டுக்கொண்டதுடன் அதற்குரிய உரிய நடவடிக்கைகளை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், பொதுமக்களுக்கான கிராம அலுவலர்களின் சேவையானது மிக முக்கியமானதெனவும் நேர முகாமைத்துவம் பேணுவது அவசியமானதெனவும் குறிப்பிட்டதுடன் ஒரு சில கிராம அலுவலர்களின் அசமந்தப் போக்கால் அது ஒட்டுமொத்த கிராம அலுவலர்களின் சேவையையும் பாதிப்பதாக அமைவதாகவும் குறிப்பிட்டு, கிராம அலுவலர்கள் பொது மக்களுக்கான அர்ப்பணிப்பான சேவையை வினைத்திறனாக வழங்கவேண்டுமென அரசாங்க அதிபர் கேட்டுக் கொண்டார்.

உள்ளூர் அதிகாரசபைத் தேர்தல்கள் தொடர்பாக வாக்களிப்பு நிலையங்களில் கிராம அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உதவித் தேர்தல் ஆணையாளர் இ. சசீலனால் விளக்கமளிக்கப்பட்டது.

இச்செயலமர்வில் கிராம சேவை நிர்வாக உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# பூந்தோட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டம்




*(வவுனியா நிருபர்)*

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் பூந்தோட்டம் பகுதியில் நேற்று முன்தினம் (23) இரவு இடம்பெற்றது.

குறித்த பிரசாரக் கூட்டத்தில் முதன்மை அதிதியாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க கலந்துகொண்டிருந்தார்.

அவருடன் பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன், மாநகர சபையின் ஏனைய வட்டாரங்களின் வேட்பாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஐந்தாம் வட்டாரமான குடியிருப்பு, பூந்தோட்டம் ஆகிய பகுதிகளில் தேசிய மக்கள் சக்தி சார்பில் நேரடி வேட்பாளர்களாக கனகரத்தினம் கிருஸ்ணதாஸ், பட்டியல் வேட்பாளராக கணேசன் மோகன் ஆகியோர் போட்டியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இயலாமையுடையோருக்கான அணுகல் வசதிகள்; ஆய்வறிக்கை வெளியீட்டு நிகழ்வு







*(சாவகச்சேரி நிருபர்)*

இயலாமை கொண்ட நபர்களுக்கான அணுகல் வசதிகள் தொடர்பான ஆய்வறிக்கை வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் (23) புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 'பேவ் – pave'செயற்றிட்ட இளைஞர் குழுவின் முயற்சியாக மேற்படி இயலாமை கொண்ட நபர்களுக்கான ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

இதன்போது ஆய்வறிக்கையின் முதற்பிரதியை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் வாகீசன், யாழ்ப்பாண பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கோசலை மதன், யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் , வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வடமாகாண உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள், மாற்றுத்திறனாளிகள், சங்கப் பிரதிநிதிகள், தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச ஒன்றியத்தின் நிகழ்ச்சித்திட்ட அலுவலர் ஜொகான்சன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரர்முதா மற்றும் பேவ் செயற்றிட்ட இளைஞர் குழுவினர் பங்குபற்றியிருந்தனர்.

இதன்போது இயலாமை கொண்ட நபர்களுக்கான தேர்தல் வசதிப்பாடுகள் குறித்த விடயங்கள் தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது.

# இறுதிப்போட்டியில் இலங்கை 'ஏ' - அயர்லாந்து 'ஏ' அணிகள் இன்று மோதல்

(அகீல் சிஹாப்)

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்றுவரும் இலங்கை 'ஏ' - ஆப்கானிஸ்தான் 'ஏ' - அயர்லாந்து 'ஏ' அணிகள் பங்கேற்கும் முக்கோண ஒருநாள் தொடரின் இறுதிப்போட்டியில் இன்று இலங்கை மற்றும் அயர்லாந்து அணிகள் மோதுகின்றன.

லீக் சுற்றில் ஒவ்வொரு அணியும் எதிரணியுடன் தலா இரு போட்டிகள் வீதம் மோதின. இதில் புள்ளிப்பட்டியலில் முதல் இரு இடங்களை பிடித்த இலங்கை, அயர்லாந்து அணிகள் இறுதிப்போட்டியில் மோதுகின்றன. இலங்கை அணி தான் விளையாடிய 04 போட்டிகளிலும் வெற்றிபெற்று தோல்வியுறாத அணியாக இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

அயர்லாந்து மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் தலா ஒரு போட்டியில் மாத்திரம் வெற்றிபெற்றிருந்த நிலையில் நெட் ரன்ரேட் அடிப்படையில் அயர்லாந்து அணி இரண்டாமிடத்தை பிடித்து இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

குறித்த இறுதிப்போட்டியை அடுத்து இலங்கை ஏ அணி மற்றும் ஆப்கானிஸ்தான் ஏ அணிகளுக்கிடையில் 04 நாட்கள் கொண்ட டெஸ்ட் போட்டியொன்று நடைபெறவுள்ளது. அபுதாபியில் எதிர்வரும் 29ஆம் திகதி முதல் மே மாதம் 02ஆம் திகதி வரை குறித்த போட்டி நடைபெறவுள்ளது.



# மகளிர் முத்தரப்பு ஒருநாள் தொடருக்கான இலங்கை குழாம் அறிவிப்பு



இலங்கையில் நடைபெறவுள்ள இந்தியா, தென்னா பிரிக்கா மற்றும் இலங்கை மகளிர் அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடருக்கான 17 போட்டிகள் இலங்கை மகளிர் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. சமரி அத்தபத்து தலைமையிலான இலங்கை மகளிர் குழாத்துக்கு இனோக்காவுடன் ஹாசினி பெரேரா, ஹன்சிமா கருணாரட்ன ஆகியோரும் மீளழைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த குழாத்தில் முன்னாள் தலைவியும் சுழல்பந்துவீச்சாளருமான இனோக்கா ரணவீர மீண்டும் அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார். அத்துடன் மல்கி மதாரா, தெவ்மி விஹங்கா, பியூமி வத்சலா, 19 வயதுக்குட்பட்ட உலகக் கிண்ண வீராங்கனை ரஷ்மிக்கா செவ்வந்தி ஆகிய நால்வரும் அறிமுக வீராங்கனைகளாக குழாத்தில் பெயரிடப்பட்டுள்ளனர்.

குறித்த தொடர் ஆர். பிரேமதாச மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (27) நடைபெறவுள்ள இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான போட்டியுடன் ஆரம்பமாகவுள்ளது. தொடரின் இறுதிப்போட்டி மே மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

**இலங்கை மகளிர் குழாம்**

சமரி அத்தபத்து (தலைவி), விஷ்மி குணரட்ன, ஹர்ஷித்தா சமரவிக்ரம, நிலக்ஷி சில்வா, கவிஷா டில்ஹாரி, அனுஷ்கா சஞ்சீவனி, ஹாசினி பெரேரா, பியூமி வத்சலா, மனுதி நாணயக்கார, தெவ்மி விஹங்கா, இனோக்கா ரணவீர, இனோஷி பெர்னாண்டோ, ஹன்சிமா கருணாரட்ன, ரஷ்மிக்கா செவ்வந்தி, மல்கி மதாரா, சுகந்தி குமாரி, அச்சினி குலசூரிய.

# IPL - 2025

## இன்றைய போட்டி

போட்டி இல - 43

**சென்னை VS ஹைதராபாத்**

சென்னை - இரவு 7.30 மணி

## முடிவு

போட்டி இல - 41

*ஹைதராபாத் - 143/8 (20)*

*மும்பை - 146/3 (15.4)*

*மும்பை 07 விக்கெட்டுகளினால் வெற்றி*

# விளையாட்டுத் துளிகள்

சன்ரைசர்ஸ் அணியுடனான ஆட்டத்தில் 70 ஓட்டங்களை குவித்த ரோஹித் சர்மா ரி20 கிரிக்கெட்டில் 12 ஆயிரம் ஓட்டங்களை கடந்துள்ளார். இதன் மூலம் ரி20 கிரிக்கெட் வரலாற்றில் 12 ஆயிரம் ரன்களை கடந்த 2ஆவது இந்திய வீரர் மற்றும் உலகின் 8ஆவது வீரர் என்ற வரலாற்று சாதனையை படைத்துள்ளார். ஒட்டுமொத்தத்தில் கிறிஸ் கெயில் 14,562 ஓட்டங்களுடன் முதலிடத்தில் உள்ளார்.

★★★★★★★★★★★★★

ஜெர்மனியில் நடைபெற்ற ஸ்டட்கார்ட் ஓபன் மகளிர் டென்னிஸ் தொடரில் லாட்வியாவின் ஜெலினா ஒஸ்டபென்கோ இறுதிப்போட்டியில் 6:4, 6:1 என்ற நேர் செட்களில் மிக எளிதாக, உலகின் நம்பர் 1 வீராங்கனையான பெலாரஸின் அரினா சபலென்காவை வீழ்த்தி சம்பியனானார். இதன் மூலம் தனது 09ஆவது டுவர் பட்டத்தைக் கைப்பற்றியிருக்கும் ஒஸ்டபென்கோ, 2017க்குப் பிறகு களிமண் தரைப் போட்டியில் முதல் கிண்ணத்தை வென்றிருக்கிறார்.

★★★★★★★★★★★★★

காஷ்மீரின் முக்கிய சுற்றுலாத் தலமான பஹல்காமில் பயங்கரவாதிகள் சுற்றுலாப் பயணிகளை குறி வைத்து திடீர் தாக்குதல் நடத்தியதில் 26 பேர் உயிரிழந்தனர். இந்நிலையில் இதற்கு இரங்கல் தெரிவிக்கும் முகமாக மும்பை – சன்ரைசர்ஸ் அணிகளுக்கிடையிலான போட்டி ஆரம்பிக்க முன் இரு அணி வீரர்கள், பார்வையாளர்கள் உள்ளிட்டோர் 01 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். மேலும் இரு அணி வீரர்களும் கையில் கறுப்புப் பட்டி அணிந்து விளையாடினர்.

★★★★★★★★★★★★★

ஜெர்மனியில் நடைபெற்ற 500 புள்ளிகள் கொண்ட பி.எம்.டபிள்யூ ஓபன் ஆடவர் டென்னிஸ் தொடரில் அந்நாட்டு வீரரான அலெக்ஸாண்டர் ஸ்வெரெவ் சம்பியன் பட்டம் வென்றார். இதன்மூலம் இந்தப் போட்டியில் 3ஆவது முறையாக சம்பியன் பட்டம் வென்றுள்ள ஸ்வெரெவ், ஒட்டுமொத்தமாக தனது 24ஆவது டுவர் பட்டத்தை வென்றிருக்கிறார்.

★★★★★★★★★★★★★

லோரிஸ் உலக விளையாட்டு விருதுகளில் நடப்பாண்டின் சிறந்த வீரருக்கான விருதை ஸ்வீடனைச் சேர்ந்த பிரபல தடகள வீரர் மாண்டோ டியுபிளான்டிஸும், சிறந்த வீராங்கனைக்கான விருதை அமெரிக்க ஜிம்னாஸ்டிக் நட்சத்திரம் சிமோன் பைல்ஸும் வென்றனர்.

# பாடசாலை ரக்பி போட்டிகளுக்கு அனுசரணை வழங்கும் டயலொக்



இலங்கையின் முதன்மையான இணைப்பு வழங்குநரும் விளையாட்டுத்துறையின் சிறந்த ஆதரவாளருமான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி., 2025ஆம் ஆண்டுக்கான டயலொக் 19 வயதுக்குட்பட்ட பாடசாலை ரக்பி பருவத்துக்காக இலங்கை பாடசாலைகள் ரக்பி கால்பந்து சங்கத்துடன் மீண்டும் கைகோர்த்துள்ளது.

இந்த வருடம், ஏப்ரல் 25, 2025 இல் ஆரம்பமாகும் மதிப்புமிக்க ஜனாதிபதி கிண்ணத்துக்காக 16 முன்னணி பாடசாலைகள் போட்டியிடவுள்ளன. இதனைத் தொடர்ந்து League சுற்றுப்போட்டி நடைபெறும். இதில் 90 பாடசாலைகளைச் சேர்ந்த 2,500க்கும் மேற்பட்ட வீரர்கள் டயலொக் பாடசாலைகள் ரக்பி பட்டத்துக்காக போட்டியிடுவார்கள்.

போட்டிகள் கொழும்பில் உள்ள பல மைதானங்களில் நடைபெறும். போட்டிகள் ஏப்ரல் 25ஆம் திகதி ஆரம்பமாகின்றன. காலிறுதிப் போட்டிகள் மே 03 மற்றும் 04ஆம் திகதிகளிலும் அரை இறுதிப் போட்டிகள் மே 09 மற்றும் 11ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன. போட்டித் தொடரின் இறுதிப் போட்டி மே 18ஆம் திகதி சுகததாச மைதானத்தில் நடைபெறும்.

பிரதான அனுசரணையாளராக, டயலொக் தொலைக்காட்சி தனது ThePapare TV (Channel 63 & 63) மற்றும் ThePapare TV HD (Channel 126 & 127) ஊடாக போட்டிகளை நேரடி ஒளிபரப்புச் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது.

Dialog SCHOOLS RUGBY
நாளைய செம்பியன்களை வலுவூட்டும்
Dialog எதிர்காலம் இன்றே.

# 07 வருடங்களின் பின் பங்களாதேஷுக்கு அதிர்ச்சியளித்த சிம்பாப்வே



பங்களாதேஷ் அணியுடனான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டத்தில் சிம்பாப்வே அணி 03 விக்கெட்டுகளினால் பங்களாதேஷ் அணிக்கு அதிர்ச்சியளித்தது. மேலும் 07 வருடங்களின் பின்னர் சிம்பாப்வே அணி பங்களாதேஷ் அணியை டெஸ்ட் போட்டியில் வீழ்த்தியது.

சிம்பாப்வே கிரிக்கெட் அணி பங்களாதேஷ் சுற்றுப்பயணம் செய்து 02 ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகிறது. இவ்விரு அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி சில்ஹெட்டில் நடந்தது. இதில் முதல் இன்னிங்ஸில் முறையே பங்களாதேஷ் 191 ரன்னும், சிம்பாப்வே 273 ரன்னும் எடுத்தது. 82 ரன்கள் பின்தங்கிய நிலையில் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய பங்களாதேஷ் அணி 255 ரன்களில் சுருண்டது.

பின்னர் 174 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் 2ஆவது இன்னிங்ஸை ஆடிய சிம்பாப்வே அணி 50.1 ஓவர்களில் 07 விக்கெட்டுக்கு 174 ரன்கள் எடுத்து 03 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக சிம்பாப்வே வேகப்பந்துவீச்சாளர் பிளஸிங் முசரபானி தெரிவானார். இவ்விரு அணிகள் இடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி 28ஆம் திகதி சட்டோகிராமில் ஆரம்பமாகவுள்ளது.

# சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகத்தின் சீருடை அறிமுகப் போட்டி



(மாளிகைக்காடு நிருபர்)

சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகத்தின் ஏழாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்முனை ஸ்கை போர்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்துக்குமிடையிலான சீருடை அறிமுக சிநேகபூர்வ கடின பந்து கிரிக்கெட் போட்டி கல்முனை சந்தாங்கேணி ஐக்கிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

15 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாக நடைபெற்ற இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழகம் 04 விக்கெட்டுகளை இழந்து 136 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. ஆரம்ப துடுப்பாட்ட வீரர் ஏ.எம். அசாருதீன் 55 ஓட்டங்களை கூடிய ஓட்டமாக பெற்றுக்கொடுத்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கல்முனை ஸ்கை போர்ஸ் விளையாட்டுக் கழகத்தினர் 15 ஓவர்கள் எதிர்கொண்டு 07 விக்கெட்டுகளை இழந்து 105 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டனர். போட்டியின் ஆட்ட நாயகனாகவும் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் ஏ.எம். அசாருதீன் தெரிவு செய்யப்பட்டதுடன் சிறந்த பந்துவீச்சாளராக முஹம்மட் சஜான் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டிக்கு பிரதம அதிதியாக தொழிலதிபர் யூ.எல்.சப்ரின் கலந்து கொண்டார்.

# PSL - 2025

## இன்றைய போட்டி

போட்டி இல - 15

**கராச்சி VS குவெட்டா**

கராச்சி - இரவு 8.30 மணி

## முடிவு

போட்டி இல - 13

*முல்தான் - 168/5 (20)*

*இஸ்லாமாபாத் - 171/3 (17.1)*

*இஸ்லாமாபாத் 07 விக்கெட்டுகளினால் வெற்றி*

மாணவர்களின் கல்வி வழிகாட்டியான ஜீனியர் தமிழன் ஏப்ரல் மாத சஞ்சிகைகள்



தற்போது விற்பனையில்...

- புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்
- வினாத்தாள் I, II வழிகாட்டிகள்
- தமிழ், கணிதம், சுற்றாடல் பாட செயலட்டைகள் (தவணைகளின் அடிப்படையில்)
- திறன் அடிப்படையிலான நுண்ணறிவு விளக்கங்கள்
- தரம் - 5 சுற்றாடல் பாடத்தொகுப்பு - 04, 05
  - இசைக்கருவிகளின் சுற்றாடல்
  - இரு வினாக்களை அடக்கிய ஒரு வினாக்களின் தொகுப்பு
- நுண்ணறிவுத்தொடர் 2 - கட்புலனறிவு
- விஞ்ஞான பரிசோதனைகள்
- சிங்கள, ஆங்கிலப் பாட பயிற்சிகள்

ஒவ்வொரு சஞ்சிகைக்குள்ளும் இணைக்கப்பட்டுள்ள படத்தாள் ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்.



ரூபா 100/= ரூபா 120/= ரூபா 120/=

- மாணவர்களின் சித்திரங்கள்
- கதைக்குள் ஒரு கணிதப்புதிர் - 04, குறுக்கெழுத்துப்போட்டி
- சிறுவர் திருக்குறள் சிறுகதை

தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களால் தொகுத்து வெளியிடப்படுகிறது

மேலதிக விபரங்களுக்கு :
011 5 200 900 | 074 1684643 | 0777 983308 | Junior Thamilan

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo –07